# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 24

விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 150 வள்ளுவர் ஆண்டு: 2045 சித்திரை 12, வெள்ளி 25.04.2014


# படைக் குறைப்பு என்ற பேச்சு வடக்கில் ஒருபோதும் இல்லை

## அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஏப்.25
"வடக்கில் இராணுவக் குறைப்பு என்ற பேச்சுக்கு இனிமேல் இடமில்லை. அதை உறுதியாகவும் இறுதியாகவும் முன்னரே தெரிவித்துவிட்டோம். அண்மைக் காலங்களில் வடக்கில் இருந்து 70 மினி முகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. அதற்கு மேலும் படைக்குறைப்பு என்ற விடயத்துக்கு இடமில்லை. சாதாரண பாதுகாப்புக்கு படை நிலைகள் அவசியம்." - இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து பேசுவதற்குப் பொருத்தமான இடம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுதான். எட்டப்படக்கூடிய எந்தத் தீர்வையும் சட்ட ரீதியாக நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்குத்தான் உள்ளது. ஆகவே அதனுடன் பேசி இணக்கம் காணுவதே பொருத்தமானது. தீர்வுக்கான பேச்சு நடத்துவதாயின் தமிழ்க்கூட்டமைப்பு அங்குதான் வர வேண்டும்."- என்றும் கூறியுள்ளார். நேற்றுக் காலை தேசிய பத்திரிகைகளின் ஆசிரியர்களையும், நிர்வாகிக

“ வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினர் குறைக்கப்படமாட்டார்கள் என்பது முன்னர் எடுக்கப்பட்ட தீர்க்கமான முடிவு. ஆகவே இராணுவத்தினரை நிலைகொள்ளச் செய்ய எமக்கு 'புலி எழுச்சி' கதை புனைய வேண்டிய அவசியமில்லை. ”



21ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத நடவடிக்கைக்கு வெளிநாடுகளிலிருந்து நிதி

“ அநேக சந்தர்ப்பங்களில் பயங்கரவாதத்துக்கு நிதியுதவி அளித்துள்ள வட்டாரங்கள் எவை என்பதை அரசு நன்கு அறியும். ” - - ஜி.எல்.பீரிஸ்

விரிவான தகவல்கள் பக்கம் 2 இல்

## 2025 ஆம் ஆண்டில் அழியும் யாழ்ப்பாணம்

### காரணமாக அமையப் போகின்றது நீர்

யாழ்ப்பாணம், ஏப்.25
2025 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் அழியும் நிலை ஏற்படும். அதற்கு நீர்ப்பற்றாக் குறையே காரணமாக இருக்கும் என்று எச்சரித்துள்ளார் யாழ். பல்கலைக்கழக விவசாயபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.துஸ்யந்தினி மிகுந்தன்.
யாழ்ப்பாணத்தின் காலநிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ்.அரச சார்பற்ற இணையங்களின் தலைவர் திருமதி

21ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதி தேர்தலை நடத்தத் தயார்

கொழும்பு, ஏப்.25
எதிர்க்கட்சிகள் முறைப்படி வேண்டுகோள் விடுத்தால் அடுத்த ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலையோ, ஜனாதிபதித்தேர்தலையோ நடத்துவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று கூறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அலரி மாளிகையில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடக

21ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்களின் காணிகள் பறிபோகிறது படையினரிடம்

### 64 பரப்பு விஸ்தீரணத்தில் கோப்பாயில் படைமுகாமாம்

யாழ்ப்பாணம், ஏப்.25
கோப்பாய் - கைதடி வீதியில் கோப்பாய் சந்திக்கு அண்மையில், பொதுமக்களுக்குச் சொந்தமான 64 பரப்புக் காணியில் இராணுவத்தினருக்கு நிரந்தர முகாம் ஒன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்

21ஆம் பக்கம் பார்க்க

“ பால்நிலை கல்வியை வரவேற்கின்றனர் மாணவர்கள் ”

வடமாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பக். 2

## காலநிலையை எதிர்வு கூறும் தரவு மையம் இங்கு இல்லை

யாழ்ப்பாணம்.ஏப்.25
காலநிலை மாற்றத்தை எதிர்வு கொள்ளக்கூடிய தரவு நிலையம் யாழ்ப்பாணத்தில் இல்லை. அதனால் எதிர்கால அபாயங்களை அறிந்து கொள்ள முடியாத நிலை உள்ளது என்று தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக் கழக விவசாய பீட சிரேஷ்ட விரிவுரையாளர்

21ஆம் பக்கம் பார்க்க

கடவையில் நின்ற காவலாளியை மோதித் தூக்கி எறிந்தது ரயில்

பக். 3

## அரிசி விலை என்ன? இன்று முதல் சோதனை

யாழ்ப்பாணம்.ஏப்.25
அரிசிக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதை அடுத்து, அரிசி விற்பனை நிலையங்களில் அது கடைப்பிடிக்கப்படுகின்றதா? என்பதைக் கண்டறிய இன்று முதல் அதிரடி சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபை.
யாழ்.மாவட்டத்தில் சம்பா அரிசி 77 ரூபாவுக்கும் ,வெள்ளை நாடு 68 ரூபாவுக்கும், சிவப்பு நாடு 66 ரூபாவுக்கும், வெள்ளை பச்சை 66 ரூபாவுக்கும்,

21ஆம் பக்கம் பார்க்க


பின்தொடருங்கள் எம்மை...
முகநூல் www.facebook.com/uthayan.print
டுவிற்றர் https://twitter.com/UthayanPrint


## நெடியவன் விவகாரம் குறித்து இலங்கை - நோர்வே பேச்சு

கொழும்பு, ஏப்.25
தமிழீழ விடுதலைப் புலிகளை மீளிணைக்கின்றார் என்று இலங்கை அரசால் குற்றஞ்சாட்டப்படும் நெடியவன் தொடர்பில் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்று நோர்வே வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் கூறுகின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என்று

21ஆம் பக்கம் பார்க்க

## இறந்துவிட்டார் என எண்ணப்பட்டவர் உயிருடன் சிறையில் சிக்கிய அதிசயம்

யாழ்ப்பாணம், ஏப்.25
கள்ளத் தோணியில் ஆஸ்திரேலியாவுக்குச் சென்றசமயம் இறந்துவிட்டார் என்று எண்ணப்பட்ட நபரின் ஒளிப்படம் பத்திரிகைகளில் வெளிவந்ததால் அவரது குடும்பத்தினர் ஆனந்தக் களிப்பில் திழைத்தனர். நேற்றைய தினம் 'உதயனில்' வெளியாகியிருந்த ஒளிப்படம் ஒன்றாலேயே குறித்த நபரை அவரது குடும்பத்தினர் கண்டுபிடித்துள்ளனர்.

21ஆம் பக்கம் பார்க்க

## முகாமிலுள்ள வலி.வடக்கு மக்களை அக்கரையில் குடியேற்ற முயற்சிகள்

### பொதுமக்களின் எதிர்ப்பால் பிசுபிசுத்தது திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25
வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை, அக்கரையில் குடியேற்றுவதற்கு இராணுவத்தினர் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்துள்ளது. அக்கரைப் பிரதேசத்தில் நலன்புரி நிலைய மக்களை குடியேற்றுவதற்காக நலன்புரி நிலையங்கள் தோறும் இராணுவத்தினர் நேரில் சென்று பதிவுகளை மேற்கொண்ட போதும் மக்கள் தமது சொந்த இடங்களிலேயே தாம் வாழ

21ஆம் பக்கம் பார்க்க

## வட மாகாண சபை அடுத்த அமர்வில் நிறைவேற்ற மறுக்கும் தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.25
வடக்கு மாகாண சபையில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்ற வென உறுப்பினர்களால் முன்மொழியப்பட்ட பிரேரணைகளில் சில வழக்கம் போன்று அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.
தமிழ் இளைஞர் யுவதிகளைக் கட்டாயப்படுத்தி இராணு வத்தில் இணைத்துக்கொள்வதை நிறுத்த வேண்டும், வடக்கில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் கைது நடவடிக்கைகளுக்குக் கண்டனம் தெரிவிப்பது ஆகிய தீர்மான முன்மொழிவுகளே நிராகரிக்கப்பட்டுள்ளன.
இந்த முன்மொழிவுகள் இரண்டும் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் ரவிகரனால் முன்

21ஆம் பக்கம் பார்க்க

# பயங்கரவாத நடவடிக்கைக்கு வெளிநாடுகளில் இருந்து நிதி

### அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, ஏப்.25
"இலங்கையில் பயங்கரவாத நட வடிக்கைகளைக் கட்ட விழ்க்க போதியளவிலான நிதி வெளிநாடுகளிலிருந்து தருவிக் கப்பட்டுள்ளது. இதற்கான ஆதாரங்கள் உள்ளன"- என்று தெரிவித்துள்ளார் வெளிவிவ கார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.


ஜி.எல்.பீரிஸ்

நேற்று நடைபெற்ற இராஜதந் திர சமூகத்துடனான சந்திப் பொன்றின்போதே அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
வெளிவிவகார அமைச்சில் நேற்று நடைபெற்ற இச்சந்திப் பில் இலங்கைக்கான வெளி நாட்டுத் தூதவர்களாக நிய மிக்கப்பட்ட தூதர்களும், உயர் ஸ்தானிகர்களும் கலந்து கொண்டனர். அத்துடன் பாது காப்பு, நகர அபிவிருத்தி அமைச்சைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மேஜர் ஜெனரல் கே.எச்.ஜி. ஹெந்த விதாரண வும் கலந்துகொண்டார்.
இதுகுறித்து ஜி.எல்.பீரிஸ் மேலும் கூறும்போது,
"அண்மைய வாரங்களாக தீவிர விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளன. இவற்றிலிருந்து பல ஆதார பூர்வமான தகவல்கள் கிடைத் துள்ளன.
அநேக சந்தர்ப்பங்களில் பயங் கரவாதத்துக்கு நிதியுதவி அளித்துள்ளவட்டாரங்கள்எவை என்பதை அரசு நன்கு அறி யும். எந்த வங்கிக் கணக்கு களில் அந்தப் பணம் இடப்பட் டுள்ளது என்பதையும் அரசு அறியும்.
ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 1373 ஆம் விதிக்கிணங்க, 16 குழுமங்களுக்கெதிராகவும் 424 தனிப்பட்ட நபர்களுக்கு எதிராகவும் அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது.
'ஆவண ஆதாரங்கள், காத்திர மான தகவல்கள், சம்பந்தப் பட்ட குழுமங்களுக்கிடையே இடம்பெற்ற தொடர்பாடல்கள் ஆகியவை தற்போது அரசின் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன" - என்று தெரிவித்தார். (ற)

# பயங்கரவாத சட்ட எதிர்ப்பு தீர்மானம் நிறைவேறும்

யாழ்ப்பாணம், ஏப். 25
இலங்கையில் தற்போது நடை முறையில் உள்ள பயங்கரவா தத் தடைச் சட்டத்தை உடனடி யாக நீக்க வேண்டும் என்று கோரி வடமாகாண சபையில் தீர்மானம் நிறை வேற்றப்பட வுள்ளது.
இதற்கான முன்மொழிவை மாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் முன்வைத் துள்ளார். எதிர்வரும் 28ஆம் திகதி நடை பெறவுள்ள அமர் வின் போதே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

**ஆளுங்கட்சி உறுப்பினரான சி.சிவமோகனால் குறித்த பிரேரணை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது**

ஆளுங்கட்சி உறுப்பினரான சி.சிவமோகனால் சமர்ப்பிக்கப் பட்டுள்ள இந்தப் பிரேரணை யில், "பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை வாழ் மக்களின் அமைதி வாழ்வை கருத்தில் கொண்டு இரத்துச் செய்யும்படி இலங்கை நாடாளு மன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளுங் கட்சித் தலைவர்களை யும், எதிர்கட்சித் தலைவர் களையும் இந்தச் சபை கோரு கின்றது" - என்று அந்தப் பிரே ரணையில் கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின் றது.
குறித்த பிரேரணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப் பினர்களின் ஏகோபித்த ஆதர வுடன் தீர்மானமாக நிறைவேற் றப்படவுள்ளது என்றும் கிடைக் கும் தகவல்கள் கூறுகின்றன.
அதேவேளை, அன்றைய தினம் 11 பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# பால் நிலைக் கல்வியை கற்க மாணவர் ஆர்வம்

### பெற்றோரும் அதை ஏற்கின்றனர் என்கிறார் வடமாகாண கல்வி அமைச்சர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
"பாடசாலை மாணவர்கள் பால் நிலைக் கல்வியைப் பெறு வதற்கு ஆர்வமுடையவர்க ளாக உள்ளனர். அவர்களது பெற்றோரும் அதனை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் உள்ளனர்" என்று தெரிவித் துள்ளார் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா.
வடமாகாண கல்வி ஆலோ சனைச்செயலமர்வின் இரண் டாம் நாள் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.
அங்கு அவர் மேலும் கூறும் போது,
"மாணவர்கள் பால் நிலைக் கல்வியை விரும்புகிறார்கள். அதனை 14 வயதில் கற்க வேண்டும் என்று கூறுகிறார் கள். மாணவர்களின் அந்தக் கருத்தை அவர்களது பெற்றோ ரும் வரவேற்கிறார்கள். மாண வர்களுக்கு அடிக்கவேண்டாம் என்று ஒருசாரார் வலியுறுத்தி வருகின்றனர். மற்றொரு சாரார் மாணவர்களுக்கு அவ்வாறு தடியால் அடித்தேனும் படிப்பிப் பதனையே விரும்புகின்றனர்"- என்று தெரிவித்தார்.
நேற்றைய ஆய்வின் பின்னர் மாணவரொருவர் உரையாற் றுகையில் "இந்தத் திட்டங் களை மாணவர்களாகிய நாங் கள் வரவேற்கிறோம். இவை விரைவில் நடைமுறைக்கு வந்தால் மாணவர்களாகிய எமக்குப் பயனளிக்கும். தாமத மாக வந்தாலும் எமக்குப் பிறகு வருபவர்களுக்குப் பயனளிக் கும். எது நடக்கிறதோ அதுநன் றாகவே நடக்கும்...." என்று கீதையின் ஆரம்பப் பகுதியை எடுத்துக் கூறிவிட்டு அமர்ந் தார். (ற-4)


யாழ். கத்தோலிக்க மறை மாவட்டத்தில் குரு முதல்வர் அருட் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் 40 ஆவது ஆண்டு குருத்துவ நிறைவு விழாத் திருப்பலி நேற்று மாலை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. இதில் குரு முதல்வருடன் அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம், அகவொளி இயக்குநர் அருட்திரு எஸ்.ஜே. இராஜநாயகம், ஈச்சமோட்டை பங்குத்தந்தை அருட்திரு ஏ.பி.தேவசகாயம் ஆகியோர் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். இதில் குருக்கள் மற்றும் கத்தோலிக்க மக்கள் பலரும் பங்கேற்றனர். (த-20)

# வடமாகாண கல்வி ஆலோசனைச் செயலமர்வு 10 விடயதானங்கள் முழுமனதாக ஏற்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப்.25
வடமாகாண கல்வி ஆலோ சனைச் செயலமர்வு இரண்டா வது நாளாக நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. செயலமர்வில் ஆராயவெனத் தெரிந்தெடுக் கப்பட்ட பிரதான 10 விடயதானங் களை மையமாகக் கொண்ட விடயங்கள் ஆலோசனைக் குழுவினரால் ஆராயப்பட்டது. அவற்றில் நிராகரிப்பதற்குஎன்று எதுவுமில்லை என்று தெரி வித்த ஆலோசனைக் குழுவி னர் அவற்றுடன் மேலதிகமாகச் சில விடயங்களையும் சேர்த் துள்ளனர்.
குறித்த ஆலோசனைச் சபை ஒவ்வொன்றிலும் மத்திய அமைச்சு, தேசிய கல்வி நிறு வகம் உள்ளிட்ட கொழும்பிலி ருந்து வந்த அதிகாரிகள் குழு வினரில் குறைந்தது ஒருவரா வது கலந்து கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. தவிர அந்தக் குழுக்களில் பல்கலைக் கழக பேராசிரியர்கள், மருத்து வர்கள், ஓய்வுபெற்றஉற மாகா ணக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பிற திணைக்களத்தினர் உட்பட பலர் ஒன்றிணைந்து ஆய்வில் ஈடுபட்டனர்.
இந்தத் திட்டம் மாகாண சபை பொறுப்பேற்றபின்னர் வடமா காண கல்வி அமைச்சரால் 6 மாதங்களுக்கு முன்னர் முன் வைக்கப்பட்டது. அதற்கான ஆலோசனைகளும் பலதரப் பினரிடமிருந்து எதிர்பார்க்கப் பட்டது. அவற்றை ஒழுங் கமைத்துச் செயற்படுத்தியவர் சிந்தனையாளர் கலாநிதி எதிர் வீரசிங்கம். அவரின் ஒழுங் கமைப்பில் 6 பேர் திணைக் களத்திடமிருந்து விடுவிக்கப் பட்டு 6 மாதகாலமாக கல்வி அபிவிருத்தி பற்றிய செயற் பாடுகளை அவர்கள் முன் னெடுத்திருந்தனர்.
அதன் வெளிப்பாடாகவே தெரிந் தெடுக்கப்பட்ட 10 விடயதானங் களை மையமாகக் கொண்டு ஆய்வு இடம்பெற்றது.
நேற்று குறித்த 10 விடயங் களையும் 10 குழுக்களாகப் பிரிந்து ஆய்வு செய்திருந்தனர். அதன்போதே திருத்தங்கள் மற்றும் மேலதிகமாகச் சேர்க் கப்படவேண்டிய விடயங்கள் என்பவற்றை குறித்த குழு வினர் ஆய்வு செய்தனர். ஒவ் வொரு குழுவிலும் 10 தொடக் கம் 18 பேர் வரை அங்கம் வகித்தனர். அவர்கள் அனை வரும் சேர்ந்து கலந்துரை யாடிய பின்னர் சகல குழுக்கள் முன்னிலையிலும் ஆய்வு களின் பின்னரான முடி வுகள் தெளிவுபடுத்தப்பட்டன.
விடயதானங்கள் உடனடியா கச் செய்யப்படவேண்டியவை, ஒருவருடகாலத்தில் செய்யப்பட வேண்டியவை, மூன்று வருட காலத்தில் செய்யப்படவேண்டி யவை என வகைப்படுத்தப் படவுள்ளன. அவற்றில் மாண வர்கள் தவறிழைக்கும் போது அல்லது வேறு காரணங்கள் காரணமாக அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டிய நிலை ஏற்படும் போது அவர் களுக்கு தடியால் அடிப்பதற்குப் பதிலாக வேறு வகைகளில் அத் தகைய தண்டனைகளை வழங்குவது பற்றி ஆராயப்பட் டுள்ளது. உடனடியாக நடை முறைப்படுத்தும் வகைக்குள் இந்த விடயமும் உள்ளடங்கு கிறது.
நேற்று திருத்தம் செய்யப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் 2 வாரகாலத்தில் ஒழுங்கமைப் புச் செய்யப்பட்டுவிடும். ஆதன் பின்னர் ஏனைய நடவடிக்கை கள் முன் னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
இதுகுறித்துக் கருத்துத் தெரி வித்த கொழும்பு கல்வி அமைச் சின் உதவிச் செயலாளர் விஜ யரத்ன, "வடமாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பான இரண்டு நாள் செயலமர்வில் முன்வைக்கப்பட்டு தீர்மானிக் கப்பட்ட 99 வீதமான பரிந் துரைகளை நான் ஏற்றுக்கொள் கிறேன்.
அதற்கு தேசிய கொள்கை களையும் இணைத்துச் செயற் படுதல் நல்லது- என்று தெரி வித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,
"கொழும்பு கல்வி அமைச்சுடன் மாகாண கல்வி அமைச்சும் இணைந்து செயற்படின் பெரு மளவு சாதிக்க முடியும். தமக் கிடையே பேதமை இன்றி இணைந்து செயற்பட வேண் டும். வட மாகாணத்தில் முன் னெடுத்ததைப் போன்று ஏனைய மாகாணங்களும் இத்தகைய செயலமர்வுகளை முன்னெடுத் தால் சிறப்பாக அமையும். மாகாணத்தில் நீங்கள் இத் தகைய பங்களிப்பை வழங்கு வதன் மூலம் தேசிய கல்வியில் வெற்றியைப் பெறமுடியும்.
வடமாகாணத்துக்குரிய கலா சார தனித்துவ அடிப்படை களுக்கு ஏற்ப இந்தப் பரிந் துரைகளை முன்னெடுப்பேன். வடமாகாண கல்விச் செயல மர்வு போன்று ஏனைய விட யங்களிலும் செயலமர்வுகளை நடத்துதல் சிறப்பாக அமையும். அதனை ஏனைய மாகாணங் களும் செயற்படுத்துதல் மேலா னது.
எமக்குப் போதிய மனித வள மில்லை. தீர்மானிக்கப்பட்ட விடயதானங்களை நடை முறைப்படுத்துவதே தற் போதுள்ள விடயம்"- என்று தெரிவித்தார். (ற-4)

## விலைப்பட்டியல் இல்லை; சிக்கினர் வர்த்தகர் 7 பேர்

### *கிராமப்புறங்களில் திடீர் வேட்டை*

தென்மராட்சி.ஏப்.25
வர்த்தக நிலையங்களில் விலைப் பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தகர்கள் 7 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று வியாழக்கிழமை தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
யாழ்.மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபை உத்தியோகத்தர்கள் தென்மராட்சிப் பிரதேசத்தின் கிராமப்புற வர்த்தக நிலையங்கள் மீது நடத்திய திடீர் பரிசோதனையின் போது விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தக நிலையங்களை நடத்திய 7 பேர் வசமாக மாட்டிக்கொண்டனர். அவர்களுக்கு எதிராக சாவ கச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு தனித்தனியாக எடுக்கப்பட்டன. வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 9 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-9)

# வடக்கில் தேக்கமடைந்த நிலையில் இடர் கடன் விண்ணப்பங்கள் 4,500

## வடமாகாண கல்வி அமைச்சின் கணக்காய்வு பிரிவின் முன்மொழிவில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.25
வடமாகாணத்தில் இடர் கடனுக்காக விண்ணப்பித்த 4 ஆயிரத்து 500 ஆசிரியர்களது விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன. அவர்களில் சிலருக்கு ஓய்வு பெற்றும் கடன்கள் கொடுக்கப்படவில்லை. கல்வித் துறைக்காக வழங்கப்படுகின்ற நிதி போதாமையே இதற்குக் காரணம் என்று வடமாகாண கல்வி அமைச்சின் கணக்காய்வுப் பிரிவு தனது முன்மொழிவுகளை முன்வைத்துள்ளது.
வடமாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி மேம்பாடு தொடர்பான மீளாய்வுச் செயலமர்வு நேற்று முன்தினம் கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது அமைச்சின் கணக்காய்வு தொடர்பான முன் மொழிவு முன்வைக்கப்பட்ட போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
பாடசாலைகளில் நிதி முகாமைத்துவம் என்பது அண்மைக்காலமாக பெரிய சவாலாக இருக்கின்றது. பாடசாலைகளில் நேரடியாக நிதி பெறுதல், மாணவர்களிடம் கட்டாயப்படுத்தி நிதியைப் பெறுதல் போன்ற முறைமைகள் பாடசாலைகளில் நடைபெறுகின்றன. நிதியை எவ்வாறு பேணுவது என்பது தொடர்பான விளக்கமின்மை இதற்குக் காரணமாகவுள்ளது. பாடசாலைகள் கிடைக்கக்கூடிய நிதியை எழுந்தமானமாகச் செலவு செய்வதால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று கணக்காய்வு செய்யும் போது இதனை அவதானிக்க முடிந்துள்ளது. பாடசாலைகள் எவ்வாறு செலவு செய்ய வேண்டும் என்ற சரியான வழிகாட்டல் பாடசாலைகளில் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு வழங்கப்படவில்லை.
குறைந்தது இரண்டாம் தரப் பாடசாலைகளுக்காவது நிதி தொடர்பான முகாமைத்துவம் செய்யக்கூடியவர்களை வழங்க வேண்டும். ஆசிரியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படும்போது நிதியை எவ்வாறு வழங்குவது என்ற பிரச்சினை உருவாகும்.
தற்போது ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் இடர்கடனை கோரிக்கைக்கு ஏற்ப கொடுக்க முடியாத நிலை உள்ளது. இதற்காக 4ஆயிரத்து500 விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றில் 1994 ஆம் ஆண்டில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களும் உள்ளன. அவர்களில் சிலர் ஓய்வு பெற்றும் சென்றுவிட்டார்கள். ஆனால் அவர்களுக்கான கடன்களைக் கொடுக்க முடியவில்லை.
கல்வித்துறைக்கு கூடுதல் நிதியை அதிகரித்துத் தந்தால் இத்தகைய தேவைகள் பூரணப்படுத்தப்படும்.
பாடசாலைகளுக்கு வழங்கப்படும் உலர் உணவுத்திட்டத்தில் உணவைவழங்கி 6 மாதத்துக்கு பின்னரே பொருள்களைக் கொடுக்கக் கூடியதாக இருக்கின்றது. அதற்கு நிதிவளமே தேவையாகவுள்ளது. உள்ளக கணக்காய்வு நடைமுறையை அமைச்சு மட்டத்தில் உருவாக்கி பாடசாலைகளில் செயற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு போதாமல் இருப்பதால் துர இடங்களுக்கு அவர்களை அனுப்ப முடியாத நிலையும் உள்ளது. எனவே கல்வி அமைச்சுக்கு போதுமான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட வேண்டியது தற்போதைய தேவையாகவுள்ளது- என்று தெரிவிக்கப்பட்டது. (வ-14)

## கடவையில் நின்ற காவலாளியை மோதித் தூக்கி எறிந்தது ரயில்

### நித்திரையில் அநியாயச் சாவு; பளையில் சம்பவம்

*பளை. ஏப்.25*
*பளை தர்மக்கேணியில் ரயில்வே கடவையில் ரயிலில் மோதுண்டு ரயில்வே கடவைக் காவலாளி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு 10.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.*
*ரயில்வே கடவைக் காவலாளியான இவர் தண்டவாளத்தின் அருகில் ரயிலின் வரவை எதிர்பார்த்துக் கதிரையில் அமர்ந்து காத்திருந்ததாகவும் கொழும்பிலிருந்து வந்த ரயில் நித்திரையில் ஆழ்ந்திருந்த இவரை மோதித் தள்ளியதாகவும் தெரிவிக்கப்பட்டது.*
*பளை இத்தாவிலைச் சேர்ந்த தங்கராசா சாந்தரூபன் (வயது-26) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.*
*இவரது சாவு தொடர்பாக பளைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு கிளிநொச்சி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ஒ-9-18-56)*



வடக்கு மாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்படும் வடமாகாண கல்வி முறைமை மீளாய்வு செயலமர்வு நேற்று யாழ்.கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் இரண்டாவது நாளாக இடம்பெற்றது. இதில் கல்வியியலாளர்கள் பத்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். (வ-21-86)

# கலைத்துறையை நாடும் மாணவர்களால் ஏனைய துறையில் 2,300 வெற்றிடங்கள்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
சுகாதாரத்துறைக்கும் மற்றும் ஆங்கிலம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களுக்கு 2 ஆயிரத்து 300 வெற்றிடங்கள் உள்ளன. அவ்வ இன்றுவரை நிரப்பப்படாதுள்ளன. இதற்குக்காரணம் இத்தகைய பாட நெறிகளை மாணவர்கள் பயிலாததே என்று மத்திய கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.
வட மாகாண கல்வி மீளாய்வு இரு நாள் செயலமர்வு கோண்டாவில் ராஜேஸ்வரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் 2 லட்சத்து35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலைப்பிரிவில் கல்வி கற்கின்றனர். அவர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க முடியாதுள்ளது. அது தவிர அவர்கள் தொழிலுக்கு ஏற்பதயாராக இயலாதுள்ளனர்.

> "மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடத்தைப் புறந்தள்ளி விட்டுச் செல்கின்றனர். அவர்கள் கலைப் பீடத்தில் படித்தால் போதும் என்றுள்ளனர். ஆனால் அவர்களுக்கு வேலையைப் பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது.

சுகாதார அமைச்சில் 10 ஆயிரம் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. ஆனால் 6 ஆயிரம் பேரே அதற்கு விண்ணப்பித்துள்ளனர். 4 ஆயிரம் பேருக்கு பற்றாக்குறை நிலவுகிறது.



*பந்துல குணவர்த்தன*

ஆங்கில ஆசிரியர்கள் ஆயிரம் பேர் வரை தேவைப்படுகின்றனர். ஆனால் 100 பேரே விண்ணப்பித்துள்ளனர். தொழில்நுட்பப் பாடத்துக்கு ஆயிரம் பேர் தேவை. 600 பேரே விண்ணப்பித்துள்ளனர். 400 பேருக்கு வெற்றிடங்கள் உள்ளன.
இதற்குக் காரணம் என்ன? மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் விஞ்ஞான பாடத்தைப் புறந்தள்ளிவிட்டுச் செல்கின்றனர். அவர்கள் கலைப் பீடத்தில் படித்தால் போதும் என்றுள்ளனர். ஆனால் அவர்களுக்கு வேலையைப் பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது. கல்வித் துறையில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும் என்று அரசு எண்ணியுள்ளது. அதன்படி அனைத்து மாணவர்களுக்கும் 16 வயதுவரை கட்டாயக்கல்வியாக்கப்பட்டுள்ளது.
ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் தொழில்நுட்பப் பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலத்திரனியல், பொறியியல், உயிரியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம், தொழில்நுட்ப விஞ்ஞானம் எனப் பலவகையுண்டு.
ஆனால் அத்தகைய பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகுதியான ஆசிரியர்களைத் தேடிக் கொண்டிருக்கிறோம். 90 பாடசாலைகளுக்கு 40 கணினிகள் கொண்ட ஆய்வு கூடங்களை நிறுவவுள்ளோம். அதன் மூலமாக புதிய பாடத் திட்டங்களை இலகுவாக்க முடியும்"- என்றார். (வ-4)

## இனந்தெரியாதோர் தாக்கியதில் குடும்பஸ்தர் மருத்துவமனையில்

வலி. வடக்கு, ஏப். 25
இனம் தெரியாதவர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி பலத்த காயங்களுடன் நல்லூரைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நல்லூரைச் சேர்ந்த குறித்த நபர் புன்னாலைக்கட்டுவனில் திருமணம் செய்துள்ளார். தொழில் நிமித்தம் தனது சொந்த ஊரில் அவர் வசித்து வருவதாகவும் தனது மனைவி பிள்ளைகளை பார்வையிட வந்துசெல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
கடந்த செவ்வாய்க்கிழமை இரவுதனது மனைவி பிள்ளைகளைக் காண வந்த வேளையில் இனம் தெரியாத நான்குக்கு மேற்பட்டவர்கள் புன்னாலைக்கட்டுவன் அற்பைச் சந்தியில் அவரை வழி மறித்து அருகில் உள்ள ஆயர் கடவை பிள்ளையார் ஆலய வெளிக்கு இழுத்துச் சென்று கம்பிகள் பொல்லுகளால் அவரைத் தாக்கி உள்ளார்கள். இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவர் சுப்பிரமணியம் ரவிகரன் (வயது-34) என்பவராவார்.
இந்த நிலையில் அவர் சத்தமிட்டதைத் தொடர்ந்து வீதியால் சென்றவர்கள் குறிப்பிட்ட இடத்துக்கு வருவதைக் கண்டதும் தாக்குதல் மேற்கொண்டோர் தப்பி ஓடியுள்ளார்கள். இது குறித்து சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-86)

## அத்திபாரத்துக்கு போடப்பட்ட கல் தவறி வீழ்ந்ததில் கை முறிந்தது

வலி.வடக்கு, ஏப்.25
வீடு கட்டுவதற்காக வெட்டப் பட்ட அத்திபாரத்துக்கு கற்கள் போட்டுக் கொண்டிருக்கையில் கல்லொன்று தவறி கை மீது வீழ்ந்ததில் கை முறிந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் குப்பிளானைச் சேர்ந்த பாலசிங்கம் மதனரூபன் (வயது- 34) என்பவருக்கே கைமுறிந்தது. (வ-86)

# கல்வி மாநாட்டுக்கு தடைகளை ஆளுநர் விதிக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஏப். 25
வடமாகாணக் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடந்த கல்வி ஆலோசனைச் செயலமர்விற்கு ஆளுநரால் எந்தவிதத் தடைகளும் ஏற்படவில்லை என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்.
ஆய்வு மாநாட்டை மாகாணக் கல்வி அமைச்சு தனித்து நடத்த அனுமதிக்கப்படவில்லை என்றும் கொழும்பு கல்வி அமைச்சினரும் வடமாகாண ஆளுநரும் அதில் தலையீடுகளைச் செய்தனர் என்றும் தகவல்கள் வெளியாகி இருந்தன.
எனினும் ஆளுநரிடம் இருந்து செயலமர்வுக்குத் தடை ஏதும் வரவில்லை என்றும் அவர் மிக ஒத்துழைப்பாகவே நடந்து கொண்டார்என்றும்கல்விஅமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.
மாநாட்டின் இரண்டாவது நாள் அமர்வு நேற்று நடைபெற்றது. அதன் இடையே உதயன் செய்தியாளரை அழைத்த கல்வி அமைச்சின் செயலாளர், இந்தச் செயலமர்வை நடத்துவதற்கு தான் பூரண ஆதரவை வழங்குகிறார் என்றும் அதில் கலந்து கொள்வதற்குத் தான் யாருக்கும் தடை ஏதும் விதிக்கவில்லை என்றும் அது தொடர்பில் தான் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்றும் கூறினார் என்று தெரிவித்தார்.
தனது இந்தக் கருத்தை உதயன் பத்திரிகையிடம் தெரிவிக்குமாறு ஆளுநர் தன்னிடம் கேட்டுக் கொண்டார் என்றும் அவர் கூறினார்.
இதேவேளை, மாநாட்டின் நேற்றைய அமர்வில் பேசிய வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, இந்தச் செயலமர்வில் கலந்து கொள்வதற்கு மாகாண சபை உறுப்பினர் அரியரத்தினத்தைத் தவிர வேறு எவரையும் அழைக்கவில்லை என்றும் இந்தநிகழ்வை அரசியலாக்கத்தான் விரும்பவில்லை என்றும் தெரிவித்தார்.
மாநாட்டின் பரிந்துரைகளை உள்ளடக்கித் தயாரிக்கப்படும் நூலின் வெளியீட்டு விழாவின்போது அரசியல் வாதிகளைஅழைப்பதற்குத் தான் தீர்மானித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (உ-4)

## நிறை குறைந்த குழந்தைகள் கடந்த ஆண்டு மட்டும் 223

### கிளிநொச்சி மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஏப்.25
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் கடந்த 2013 ஆம் ஆண்டு 223 குழந்தைகள் போஷாக்குக் குறைவான குழந்தைகளாகப் பிறந்துள்ளன.
கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் கடந்த 2013 ஆம் ஆண்டு ஆயிரத்து 959 பிறப்புகள் இடம்பெற்றுள்ளன. இதில் 223 குழந்தைகள் நிறைகுறைவான குழந்தைகளாக பிறந்துள்ளன.
இதைவிட கடந்த 2012 ஆம் ஆண்டு இரண்டாயிரத்து 288 பிறப்புக்கள் இடம்பெற்றுள்ள நிலையில் 280 குழந்தைகள் நிறைகுறைவாகப்பிறந்துள்ளன.
வன்னிப் பகுதியில் நிலவும் வாழ்வாதார நெருக்கடி காரணமாக போஷாக்கு குறைபாடான நோய்கள் ஏற்படல், குழந்தைகளின் போஷாக்கு இன்மை ஆகியன ஏற்படுகின்றன. இந்த நிலையில் மேற்படி இரு ஆண்டுகளிலும் நிறை குறைவான பிறப்புக்களில் மாற்றங்கள் எதுவும் காணப்படவில்லை.
இவ்வாறான பிறப்புக்கள் தொடர்பான விவரங்கள் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையின் வைத்திய அத்தியட்சகர் ப.கார்த்திகேயனால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதுசமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-55)



யாழ்.மாவட்டத்தில் சிறுவர் மற்றும் முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கொரிய நாட்டு பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று கலந்துரையாடினர். சர்வதேச ரீதியில் சிறுவர்கள் மற்றும் பெற்றோரை இழந்த பிள்ளைகள் , முதியவர்கள் ஆகியோரது பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்இந்தக்குழுவினர் யாழ்.மாவட்டத்தில் இது தொடர்பான ஆய்வினை மேற்கொள்வதற்காக வந்துள்ளனர். (ற-14)

## வலி.வடக்கு இணைப்புக் குழுக் கூட்டம் 19 மாதங்களாகக் கூட்டப்படவில்லை

### நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிறார் சபையின் தவிசாளர்

யாழ்ப்பாணம், ஏப்.25
வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 19 மாதங்களாகக் கூட்டப்படவில்லை. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படாமல் இரண்டு தடவைகள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றுள்ளது. அடுத்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு முன்னதாகவாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்"- என்று தெரிவித்துள்ளார் வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன். வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் கூட்டப்பட்டது.
அதன் பின்னர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படவில்லை.
இதனால் அந்தப் பகுதியின் அபிவிருத்தி பணிகள் தொடர்பில் மீளாய்வுகள் செய்யப்படவில்லை என்பதுடன், அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளுக்கான அனுமதிகளும் தன்னிச்சையாக வழங்கப்படும் நிலைமை தோன்றியுள்ளது.
அத்துடன் மிக முக்கியமான வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பில் எதுவுமே ஆராயப்படவுமில்லை. மீள்குடியமராமல் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் தமது நிலைமைகளை வெளிப்படுத்துவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. காணி சுவீகரிப்பு அறிவித்தல்கள் ஒட்டப்பட்ட பின்னர் இரண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன.
ஆனாலும்சம்பந்தப்பட்ட பிரதேசபைக்குரிய கூட்டம் இன்னமும் நடத்தப்படவில்லை.
வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே இருந்து வருகின்றார்.
கடந்த 2012 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம் பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், மூன்று மாதங்களினுள் மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்துவதாக உறுதியளித்திருந்தார்.
அவரது உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டியுள்ள பிரதேச சபைத் தலைவர், இதற்காகத்தான் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றதா என்று கேள்வியெழுப்பியுள்ளார்.
எதிர்வரும் மே மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தொடர்ச்சிக் கூட்டத்தை நடத்துவதற்கு முன்னதாக, வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்துமாறு அவர் கோரியுள்ளார்.
இது தொடர்பில் வலி.வடக்கு பிரதேச செயளாளருடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போது, அவரது தொலைபேசி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (ற-5)

## இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
குடாநாட்டில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் வடமராட்சியைச் சேர்ந்த இருவர் விசேட புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.
இதுகுறித்து பொலிஸார் தெரிவிக்கையில்,
வடமராட்சி கரவெட்டி காட்டுப் புலத்தைச்சேர்ந்த ஒருவரும் துன்னாலையைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். '- என்று தெரிவித்தனர். (ற-14)

## யாழ்.பல்கலை துணைவேந்தராக மீண்டும் வசந்தி அரசரட்ணம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25
யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மீண்டும் தெரிவாகியுள்ளார். அவருக்கான நியமனக்கடிதம் நேற்று வழங்கப்பட்டது என்று கூறப்படுகின்றது.
யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பதவிக்கு இந்த முறை பலர் போட்டியிட்டிருந்தனர். அவர்களில் கூடுதல் வாக்குகளைப் பெற்ற மூன்று பேரினது பெயர்கள் பல்கலைக்கழக குழுவினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். ஜனாதிபதியே துணைவேந்தர் யார் என்பதனைத் தீர்மானிப்பார். (ற-4)


## 'அதிபர் நிதி மோசடி' என்று உபயோகிக்கக் கூடாது

### ஆலோசனைச் செயலமர்வில் விசித்திர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
பாடசாலைகளது அதிபர்கள் நிதி மோசடியில் ஈடுபடும் போது 'அதிபர்கள் நிதி மோசடி' என்ற வாசகம் உபயோகிக்கக் கூடாது என்று விசித்திர கோரிக்கை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது. நேற்று நடத்த கல்வி ஆலோசனைச் செயலமர்விலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டள்ளது.
கோரிக்கை விடுக்கப்பட்டதும், "அவ்வாறு தவறிழைப்பவர்களை வேறு எப்படி அழைப்பது?" என்று வடக்குக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கேள்வியெழுப்பினார்.
"அதிபர்கள் அவ்வாறு தவறிழைக்கும் போது அதனை 'அதிபர்கள் நிதி மோசடி' என்று சொல்லாது வேறு எப்படிச் சொல்ல வேண்டும்? ஒருசிலர் தவறிழைப்பதனை மன்னித்தால் ஏனையவர்கள் திருந்தி விடுவார்கள் என்று கருதுகிறபோதும் அதனை ஏனையவர்கள் உணர்கிறார்களில்லை. பொதுமக்கள் பாடசாலை அதிபர்களை தற்பொது நன்றாகவே கண்காணிக்கிறார்கள். 'அவர்கள் எங்காவது அப்படி தவறிழைக்கும் போது உடனே தமக்கு அறிவிக்கிறார்கள். தவிர அவ்வாறான வெளிமுயற்சியில் ஈடுபட்டால் கூட அதுபற்றி உடனே கூறுகிறார்கள். அந்தளவுக்கு நிதி மோசடி செய்யப்படக்கூடாது என்ற விடயத்தில் பொது மக்கள் கண்ணும் கருத்துமாக உள்ளனர் - என்று மேலும் தெரிவித்தார் கல்வி அமைச்சர். (ற-4)

## மரண அறிவித்தல்

### குட்டப்பன் யஜிந்திரதாஸ் (R.V.G பிடி மாஸ்டர்)



சிலாபத்தைப் பிறப்பிடமாகவும், பாசையூர் யாழ்ப்பாணத்தைப் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டப்பன் யஜிந்திரதாஸ் நேற்று (24.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டப்பன் - கல்யாணி தம்பதியரின் அன்புமகனும் யோசேப் - பவுண்ணம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கிறிஸ்ரபெல் (ஜெயலின்) அன்புக்கணவரும் கிருஷ்ணன், சந்திரபோஸ் காலஞ்சென்ற அரியதாஸ் மற்றும் குமார், லாலிதா (சிலாபம்), காலஞ்சென்ற சிறீதரன் மற்றும்மோகனதாஸ் (கனடா), பத்மினி, றகினி (சிலாபம்), இந்திரராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரனும் சிந்துஜா, டிலக்சினி, கஜன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

9, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி

தகவல்:
குடும்பத்தினர்

சித்த வைத்தியம்
அனைத்து நாட்பட்ட நோ, வலி, குத்து, வேதனை, Asthma, Exzima, குழந்தைப் பேறின்மை.
26, 27ஆம் திகதிகளில் நல்லூரில் சந்திக்கலாம்.
ஆலோசனை இலவசம்
077 730 1669
Dr.R.Sivagurunathan

DMI COMPUTER EDUCATION
COMPUTER COURSES
Diploma in Computerized Accounting — Tally, Quick Book, Accpack, M.Y.O.B
Diploma in Video Editing — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,
Diploma in AutoCAD — 2D & 3D Modeling
Advanced Diploma in Hardware & Networking
Java (for Developers) | 3D-MAX
முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, ... வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி ... Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, ... வீதி. HNB அருகில் Tel. :021-227 0775
சுன்னாகம் KKS வீதி. NSB அருகில் Tel. :021-224 1970

## நெல் அழிவுக் காப்புறுதிக்கு 6,381 பேர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்.மாவட்டத்தில் 6 ஆயிரத்து 381விவசாயிகள் நெல் அழிவுக்கான காப்புறுதியைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும், அவர்களது விண்ணப்பங்களின் ஒரு பகுதி தேசிய காப்புறுதி நிதியத்துக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் நிறைஞ்சன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கமநல சேவைகள் திணைக்களத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

"யாழ்.மாவட்டத்தில் கடந்த மற்றும் இந்த ஆண்டு நெல் உற்பத்தியில் பெரிய அழிவு ஏற்பட்டுள்ளது. இந்த அழிவுக்குரிய நட்ட ஈட்டைப் பெறுவதற்கு விவசாயிகளை விண்ணப்பிக்குமாறு கோரியிருந்தோம். அதற்கமைய விவசாயிகளிடமிருந்து 6 ஆயிரத்து 381 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன. 3 ஆயிரத்து 481 ஹெக்ரேயர் பரப்பில் நெல் அழிவு ஏற்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் பிரதேச செயலாளர் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டே கொழும்பிலுள்ள தேசிய காப்புறுதி நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

> கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் பிரதேச செயலாளர் ஊடாக மதிப்பீடு செய்யப்பட்டே கொழும்பிலுள்ள தேசிய காப்புறுதி நிதியத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதன் பிரகாரம் கிடைக்கப்பெற்ற 6 ஆயிரத்து 381 விண்ணப்பங்களில் 2 ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், தேசிய காப்புறுதி நிதியமே அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

## பொருளாதார நெருக்கடிக்குள் தொடர்ந்தும் இரும்பு வியாபாரிகள்

யாழ்ப்பாணம், ஏப்.25

சிலாபம் மாதம்பை இரும்பு உற்பத்தி நிலையம் இன்னமும் திறக்கப்படாத நிலையில் யாழ். மாவட்ட இரும்பு வியாபாரிகள் தொடர் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் இரும்பு விலை வீழ்ச்சி அடைந்துள்ள நிலையில் இரும்பு வியாபாரத்தில் ஈடுபடுவோர்தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

> மாதம்பையில் உள்ள இரும்பு உற்பத்தி நிலையம் கம்பிகள் விற்பனை ஆகவில்லை என்ற காரணத்தைக் காட்டி மூடப் பட்டு விட்டது.



இந்த நிலை குறித்து யாழ். மாவட்டத்திலுள்ள இரும்பு வியாபாரிகள் கூறுகையில்;

'மாதம்பை இரும்பு உற்பத்தி நிலையம் மூடப்பட்டதில் இருந்து எமக்கு இந்த நிலை தான். எங்களுக்கு இரும்பு விற்பனைதான் தெரிந்த தொழில். அது கைவசம் இல்லாத நிலையில் எங்களால் வேறு தொழில்களை மேற்கொள்ள முடியாதுள்ளது.

வாழ்வாதாரத்துக்காக இரும்புத் தொழிலையே நம்பியுள்ளோம். எங்களில் நூற்றுக்கு 80 சதவீதமானோர் இரும்புத் தொழிலில் ஈடுபடுபவர்களாகவே இருக்கிறோம்.

மாதம்பையில் உள்ள இரும்பு உற்பத்தி நிலையம் கம்பிகள் விற்பனை ஆகவில்லை என்ற காரணத்தைக் காட்டி மூடப்பட்டு விட்டது.

வெளியில் இருந்து பார்ப்போருக்கு இது சாதாரணமாகத் தெரிந்தாலும் இந்தத் தொழிலில் ஈடுபடும் எமக்குத்தான் இதனால் ஏற்படும் பெரும் நட்டங்கள் தெரியும். இதனால் நேரடியாக பாதிக்கப்படுவது நாங்கள்தான்.

விரைவில் உற்பத்தி நிலையம் திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் அடுத்த கட்டமாக என்ன செய்வதென தெரியாமல் இரும்பை களஞ்சியப் படுத்துகின்றோம்.

விலை அதிகரித்தால் விற்பனை செய்வதற்கான முன்னாயத்தமாகத்தான் இவ்வாறு களஞ்சியப்படுத்துகின்றோம். ஆனாலும் வறுமை மட்டுமே எஞ்சியுள்ளது' என்றனர். (வ-10)

## குடாவில் செவ்விளநீருக்கு தட்டுப்பாடு

### தற்போது நிலவும் வறட்சியால்



தாகத்தைத் தீர்க்க செவ்விளநீர் பருகும் இளைஞர்கள்.....

யாழ்ப்பாணம், ஏப்.25

தற்போது நிலவும் கடும் வறட்சியால் மக்கள் தமது தாகத்தை போக்குவதற்கு செவ்விளநீரைப் பருகி வருகின்றனர். இதனால் குடாநாட்டில் செவ்விளநீருக்கு பற்றாக்குறை நிலவி வருகின்றது.

வியாபாரிகள் தென்பகுதியில் இருந்து வாகனம் மூலம் செவ்விளநீர் தருவித்து மக்களின் தாகத்தை தீர்த்து வருகின்றனர். செவ்விளநீர் ஒன்று 60 ரூபா முதல் 80 ரூபா வரைக்கும் விற்கப்படுகின்றது. நகருக்கு வரும் மக்கள் முனீஸ்வரன் வீதி மற்றும் பல இடங்களிலும் செவ்விளநீரை வாங்கிப் பருகி தமது தாகத்தைப் போக்கி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. (வ-17)

## தந்தை, மகன் செலுத்தினர் அபராதம்

தென்மராட்சி, ஏப்.25

வயது குறைந்த மகனிடம் மோட்டார் சைக்கிளோட்டக் கொடுத்த தந்தைக்குச் சாவகச்சேரி நீதிமன்றால் செவ்வாய்க்கிழமை மூவாயிரம் ரூபா அபராதமும், மோட்டார் சைக்கிள் செலுத்தி வீதி விபத்தை ஏற்படுத்திய மகனுக்கு 9 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டன.

சாவகச்சேரி பெரியமாவடியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் மோட்டார் சைக்கிள் செலுத்தி மற்றொரு மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்தியமை தொடர்பாக சாவகச்சேரி பொலிஸாரால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்தியமைக்காக 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், சிறுவனின் தந்தை மன்றுக்கு அழைக்கப்பட்டு மகனுக்கு சிறுவயதில் மோட்டார் சைக்கிள் கொடுத்தமைக்கு எச்சரிக்கை செய்ததுடன் 3 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். (வ-9)

## இடமாற்ற விவரங்களை அறிய திரண்ட ஆசிரியர்கள்

தென்மராட்சி, ஏப்.25

தென்மராட்சி வலய கல்வி அலுவலகம் திங்கட்கிழமை ஆசிரியர்களால் நிறைந்து காணப்பட்டது.

வன்னிப் பிரதேசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் வலயக் கல்வி அலுவலக அறிவித்தல் பலகையில் வெளியிடப்பட்டதை அறிந்து பெருமளவு ஆசிரியர்கள் அங்கே வந்து தமது பெயர் பட்டியலில் உள்ளதா என்று பார்த்துச் சென்றனர்.

பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்களை வைத்திருக்க வேண்டாம் என்று மாகாண கல்வி அமைச்சால் அறிவிக்கப்பட்டதை அடுத்து இடமாற்றப் பட்டியல் நேற்று அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப் பட்டது.

இந்தப் பட்டியலில் வலயத்தைச் சேர்ந்த 36 ஆசிரியர்களின் பெயர்களும் அவர்கள் இடமாற்றம் செய்யப்படும் வலயங்களின் விவரங்களும் குறிப்பிடப்பட்டிருந்தன. (வ-9)

## அதிபர் சேவைத் தரமுடையோர் தொடர்ந்தும் ஆசிரியப் பணியில்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்.மாவட்டத்தில் அதிபர் சேவைத் தரத்திலுள்ள 8 பேர் தொடர்ந்தும் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருப்பதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கல்வி அபிவிருத்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் மற்றும் வடமராட்சி கல்வி வலயங்களில், அதிபர் சேவைத் தரத்திலுள்ள 8 பேர் தொடர்ந்தும் ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களுள் சிலர், பாடசாலையின் பிரதி அதிபர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்ட கல்வி அமைச்சின் செயலாளர், பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் ஏற்படுகின்றபோது, அவர்களை அந்த வெற்றிடத்துக்கு நியமிக்க நட வடிக்கை எடுத்து வருகின்றோம் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் யாழ்.மாவட்டத்திலுள்ள ஆசிரிய ஆலோசகர் வெற்றிடம் முப்பத்தேழும் நிரப்பப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இருப்பினும் கிளிநொச்சி மாவட்டத்தில் அதற்குத் தகுதியான ஆசிரியர்கள் இல்லாமையால் அங்கு இன்னமும் வெற்றிடங்கள் நிரப் பப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். (வ-5)

## இரு மீனவர் சங்கங்களிடையே மாதகலில் முறுகல் நிலை

### பிரதேச சபை உறுப்பினரால் மோதல் தடுத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப்.25

நயினாதீவு துறையைச் சேர்ந்தவர்களை, மாதகல் கடற்பகுதியில் மீன்பிடிக்க அனுமதித்தமையால், மாதகல் பகுதியிலுள்ள இரண்டு மீனவ சங்கங்களுக்கிடையில் செவ்வாய்க்கிழமை மோதல் நிலைமை உருவாகியது.

இருப்பினும் மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினரின் தலையீட்டை அடுத்து அது தடுத்து நிறுத்தப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

மாதகல் பிரதேசத்தில் மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்பு மற்றும் மாதகல் மேற்கு கிராமிய கடற்றொழில் அமைப்பு என்று இரண்டு பிரதான கடற்றொழில் அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

இதில் மாதகல் மேற்கு கிராமிய கடற்றொழில் அமைப்பின் கீழ் துறைமுக விநாயகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், சூசையப்பர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், உதய தாரகை கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம், ராஜராஜேஸ்வரி கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் என்பன செயற்பட்டு வருகின்றன. இதில் துறைமுக விநாயகர் கடற்றொழில் அமைப்பின் உறுப்பினர்களுக்கும், மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்பு உறுப்பினர்களுக் கும் இடையிலேயே செவ்வாய்க்கிழமை காலை மாதகல் துறைமுக ஏல விற்பனை நிலையத்தில் மோதல் நிலைமை உருவாகியது.

மாதகல் கடற்பிரதேசத்தில் நயினாதீவு தெற்குத் துறையைச் சேர்ந்தவர்கள் மாதகல் கடற்பகுதியில் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

அவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மாதகல் மேற்கு கிராமிய கடற்றொழில் அமைப்பின் கீழ் இயங்கும், துறைமுக விநாயகர் கடற்றொழில் அமைப்பைச் சேர்ந்தவர்கள் நயினாதீவில் மீன்பிடி நட வடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதற்கு நயினாதீவு தெற்கு கடற்றொழில் அமைப்பினர் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில், நயினாதீவு தெற்கு கடற்றொழில் அமைப்பைச் சேர்ந்தவர்கள் மாதகல் கடற்பரப்பில் திங்கட்கிழமை இரவு மீன்பிடியில் ஈடுபட்டமைக்கு துறைமுக விநாயகர் கடற்றொழில் அமைப்பைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இதற்கு மாதகல் கடற்றொழில் கிராமிய அமைப்பினர், நயினாதீவு தெற்கு கடற்றொழில் அமைப்புக்குத் தாம்தான் அனுமதி வழங்கியதாகவும், அவர்களுக்கும் தமக்குமிடையே இது குறித்து ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். தாம் அங்கு சென்ற போது மீன்பிடிக்க அனுமதிக்கவில்லை என்று துறைமுக விநாயகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங் கத்தினர் தெரிவித்தனர்.

அவர்களை மீன் பிடிக்க அனுமதிக்க முடியாது என்று அவர்கள் விடாப்பிடியாக இருந்தமையால் மோதல் நிலைமை தோன்றியது.

அதனை அடுத்து மானிப்பாய் பிரதேச சபையின் உறுப்பினரும் வடக்கு மாகாண கடற்றொழில் அமைப்பின் முன்னாள் தலைவருமான வி.சுப்பிரமணியம், இந்தப் பிரச்சினையில் தலையிட்டு நிலைமையை சுமுகமாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பிரச்சினை தொடர்பில் நயினாதீவு தெற்கு கடற்றொழில் அமைப்புடனும் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## கங்கை மாதா அழைத்ததால்தான் புனித பூமியில் போட்டியிடுகிறேன்

நரேந்திர மோடி தெரிவிப்பு



கூட்டத்தில் உரையாற்றும் மோடி

வாரணாசி,ஏப். 25


கங்கை மாதா அழைத்ததால்தான் புனித பூமியான வாரணாசியில் போட்டியிடுகிறேன் என பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வாரணாசி மக்களவைத் தொகுதியில் போட்டியிட நரேந்திர மோடி நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தார். வேட்புமனு தாக்கல் செய்தபோது அவருடன் மதன் மோகன் மாளவியா. மகன் கிரிதர் மாளவியா, பத்ம விபூஷண் விருது பெற்ற சந்துலால் மிஸ்ரா, படகோட்டி நிஷாத் ஆகியோர் உடன் இருந்தனர்.


வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் மோடி செய்தியாளர்களிடம் பேசியதாவது: வாரணாசியில் போட்டியிடுவது குறித்து யோசிக்கும் போதெல்லாம், பா.ஜ.கவினர் விருப்பத்தின் பேரிலேயே இந்தத் தொகுதியில் போட்டியிடப்போகிறேன் என நினைத்திருந்தேன். ஆனால், இப்போது தான் எனக்குப் புரிகிறது, பா.ஜ.கவினர் விருப்பமோ அல்லது என் சுய விருப்பமோ என்னை வாரணாசியில் போட்டியிட வைக்கவில்லை. கங்கை மாதா அழைத்ததால்தான் புனித பூமியான வாரணாசியில் நான் போட்டியிடுகிறேன்.

அன்னை மடியில் தவழும் குழந்தை பெறும் உணர்வை வாரணாசியில் நான் பெறுகிறேன். காசியை, உலக நாடுகளின் ஆன்மிகத் தலைநகராக மாற்றுவேன். காசி நகரின் ஏழை நெசவாளர்கள் வாழ்க்கைத் தரம் உயரச் செய்வேன். இவற்றை நிறைவேற்றக் கடவுள் எனக்கு துணை நிற்க வேண்டும் இவ்வாறு மோடி பேசினார். (த)

# தமிழகம் மற்றும் புதுச்சேரியில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு



வாக்களித்த இளம் வாக்காளர் ஒருவர்



தள்ளாத வயதிலும் வாக்களிப்பு

சென்னை,ஏப்.25

தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்றது.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தமிழகத்திலும் புதுச்சேரியிலும் நேற்றுக் காலை 7 மணிக்கு ஆரம்பமாகியது. தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளுக்கும் புதுச்சேரியில் உள்ள ஒரு தொகுதிக்கும் நேற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. காலை ஏழு மணிக்கு ஆரம்பமான வாக்குப்பதிவு மாலை ஆறு மணிக்கு நிறைவுபெற்றது.

காலை 9.10 மணியளவில் முதலமைச்சர் ஜெயலலிதா சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியில் அமைந்திருந்த வாக்குச்சாவடியில் வாக்களித்தார். வாக்களித்ததற்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்குப்பதிவு அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதைத் தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தமிழகத்தில் சில வாக்குச் சாவடிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் கோளாறு ஏற்பட்டதால் வாக்குப்பதிவில் தாமதம் ஏற்பட்டது. இருந்தபோதும், தாமதமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் நேரம் வழங்கப்பட மாட்டாது என்றும் மாலை ஆறு மணிக்குள் வாக்குச்சாவடிக்கு வரும் வாக்காளர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு அவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார்கள் என்றும் தமிழகத் தலைமைத் தேர்தல் அதிகாரி பிரவீண்குமார் தெரிவித்தார்.

தமிழகத்திலுள்ள 39 மக்களவைத் தொகுதிகளிலும் 845 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 5 கோடியே 51 லட்சத்து 14ஆயிரத்து 867 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றனர்.

தமிழகம் முழுவதும் இருந்து தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை அனைத்துத் தரப்பினரும் சொல்வதற்குச் சென்னைத் தலைமைச் செயலகத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலேயே அதிகபட்சமாக 42 வேட்பாளர்கள் தென் சென்னைத் தொகுதியில் போட்டியிடுகின்றனர். இதனால் இந்தத் தொகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் 3 வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. வடசென்னையில் 40 பேர் போட்டியிடுவதால். இங்கும் 3வாக்குப்பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

புதுச்சேரி மக்களவை தொகுதியிலும் சுமார் 9 லட்சம் பேர் வாக்களிக்க ஏதுவாக 905 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. (கு)

## வை.எஸ்.ஆர் வேட்பாளர் ஷோபா கார் விபத்தில் சாவு

ஹைதராபாத்,ஏப். 25

ஆந்திர மாநிலம் ஆலகண்டா மக்களவைத் தொகுதி வேட்பாளர் ஷோபா நாகிரெட்டி கார் விபத்தில் அகால மரணமடைந்தார்.

ஆந்திர மாநிலம் ஆலகண்டா தொகுதியின் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியின் எம்.எல்.ஏயாக இருந்த ஷோபா நாகிரெட்டி, அசே தொகுதியில் மீண்டும் வேட்பாளராகவும் அறிவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நந்தியாவில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்துக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது அவரது கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

சாலையில் தானியங்கள் பரப்பி இருந்ததால் அதன் மீது சென்ற கார் கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானது. இதில், காரின் உள்ளே இருந்த ஷோபா நாகிரெட்டி



ஷோபா நாகிரெட்டி

தலையில் படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் இரவு சேர்க்கப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், அவருடன் இருந்த 2 பொலிஸ் அதிகாரிகளும் கார் சாரதியும் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

1996ஆம் ஆண்டு முதல் தீவிர அரசியலில் ஈடுப்பட்ட ஷோபா நாகிரெட்டி, தெலுங்கு தேசம் கட்சியின் முன்னாள் அமைச்சர் எஸ்.வி சுப்பா ரெட்டியின் மகள் ஆவார்.

அவரது மறைவு குறித்த செய்தி அறிந்ததும் கட்சி தொண்டர்கள் மருத்துவமனைக்கு விரைந்துள்ளனர். தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் மரணமடைந்ததால் தேர்தல் விதிப்படி ஆலகண்டா தொகுதிக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (கு)


**யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)**

**கூறுவிலை அறிவித்தல்**

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் கீழ்க் காண் வகையான வெற்றுப்பொருள்கள் விற்பனைக்காக கூறுவிலைகள் கோரப்படுகின்றன. தங்களின் கூறுவிலை விவரத்தை தலைமை அலுவலகத்தில் உள்ள படிவத்தில் பூரணப்படுத்தி 2014.04.30 ஆம் திகதிக்கு முன்னாதாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| அரிசி வெற்றுப்பை | 50 கிலோ கிராம் | - 1872 பை |
| மாவு வெற்றுப்பை | 25 கிலோ கிராம் | - 2575 பை |
| சீனி வெற்றுப்பை | 50 கிலோ கிராம் | - 990 பை |
| வேறு வகை வெற்றுப்பை | 25 கிலோ கிராம் | - 1150 பை |
| சாக்கு | 50 கிலோ கிராம் | - 100 பை |

(சி/13542)(3.6.4) பொது முகாமையாளர்,

யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்(வ-து)



**இறை பணியில் 40 ஆண்டுகள்**

பற்றீஷியன் நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினரும், குருமுதல்வரும் ஆகிய


கலாநிதி

**ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**

அவர்கள் குருத்துவ நிறைவின் 40 ஆண்டுகள்

பிரகாசித்த நாயகனே!

உங்கள் இறைபணி இன்னும் வலுப்பெற மனதார வாழ்த்துகின்றோம்.




Best Wishes Best Wishes

Patrician Institutes

பதிவாளர், அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள்.

(C/13550)(7.6.3)



**தொடர்பு கொள்ளவும்**

NP JZ 8173, Passion Plus மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் தொடர்பாக கதைப்பதற்கு, உரியவர்/வைத்திருப்பவர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

078 769 2692

(47138)(7.6.3)

**நிரந்தர தொழில் வாய்ப்பு**

இலங்கையில் முகாமைத்துவ பயிற்சியிலும், சந்தைப்படுத்தல் துறையிலும் சிறந்து விளங்கும் எமது வவுனியா S.D.M கிளைக் காரியாலயத்திற்கு க.பொ.த.சா.தரம் கற்ற இருபாலாருக்கும் உங்கள் திறமைக்கேற்ப பயிற்சியளிக்கப்பட்டு பயிற்சியுடன் வேலை வாய்ப்பும், பயிற்சிக் காலத்தில் சம்பளமும், பயிற்சி முடிவில் டிப்ளோமா சான்றிதழுடன் நிரந்தர வேலை வாய்ப்பும் 45000/= சம்பளமும் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு நேரில் வரவும்.

(13266)(7.6.3) தொ.பே: 077 367 8472

**வேலை ஆள்கள் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு விற்பனையாளர் தேவை. தங்குமிட வசதியும் மூன்று நேர உணவும் வழங்கப்படும். ஆரம்ப வேதனம் ரூபா 10000/= விலிருந்து வழங்கப்படும். ஆண்கள் மட்டும். வயது 18 - 22 வரை.

தொ.பே: 11A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. : 021 222 3857



CEYLON THEATRES

இப்பொழுது திரையில்

MAJESTIC CINEMA - CARGILLS SQUARE

(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

உதயன்
25.04.2014




## பலஸ்தீனக் குழுக்கள் இடையே நல்லிணக்கம்

காசாவில் நடந்த பேச்சுக்களை அடுத்து, பலஸ்தீன போட்டிக் குழுக்களான பத்தா அமைப்பும், ஹமாஸும் நல்லிணக்க உடன்படிக்கை ஒன்றை அறிவித்துள்ளன.

இந்த உடன்படிக்கையின்படி, 5 வாரங்களுக்குள் ஓர் ஒருமைப்பாட்டு அரசு அமைக்கப்படும். அதன் பின்னர் 6 மாதங்களில் பொதுத் தேர்தலும், அதிபர் தேர்தலும் நடக்கும். இஸ்ரேலுக்கும், அதிபர் மஹ்முட் அப்பாஸின் பத்தா கட்சிக்கும் இடையிலான சமரசப் பேச்சு தோல்வியடைந்ததை அடுத்து இந்த உடன்படிக்கை வந்துள்ளது.

அதிபர் அப்பாஸ் இஸ்ரேலை விட, ஹமாஸுடன் சமாதானம் செய்து கொள்ளவே விரும்புகிறார் என்று இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு கூறியுள்ளார். (த)

## மின்வேலி அகற்றப்பட்டும் எல்லை கடவாத மான்கள்



பேர்ளின்,ஏப் .25


இரும்புத்திரை வீழ்ச்சிகண்டு கால் நூற்றாண்டு ஆகிவிட்ட பின்னரும் கூட, ஜேர்மனிக்கும், செக் குடியரசுக்கும் இடையிலான எல்லைப் பகுதியில் வாழும் மான்கள், இன்னமும் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லையைக் கடப்பதில்லை என்று இரு நாட்டு ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லையில்மின்வேலிஅமைக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போதும் கூட அந்த இரு நாடுகளின் எல்லையில் வாழும் செம்மான்கள் அந்த எல்லைப் பகுதியைக் கடப்பதில்லை என்று, அவற்றில் சுமார் 300 மான்களை பின் தொடர்ந்து பார்த்தபோது தெரியவந்திருக்கிறது. அவற்றைக் கண்காணிக்கும் சில கருவிகள் மூலம் அவற்றின் நடமாட்டம் கண்காணிக்கப்பட்டுள்ளது.

இப்போது மின்வேலி அகற்றப்பட்டு அந்தப் பகுதி ஒரு திறந்த வெளியாக இருக்கின்றபோதிலும், இரு நாடுகளிலும் பனிப்போர் காலகட்டத்துக்குப் பின்னர் பிறந்த மான்கள்கூட நாடுகளின் எல்லையைக் கடந்து செல்வதில்லையாம்.

மான் குட்டிகள் தமது முதலாவது வயதில் தமது தாய் மான்களை பின்தொடர்ந்து பழகியதால், அவை அதனைக் கொண்டு எங்கு போவது, எங்கு போகக் கூடாது என்று வகுத்து, வாழ்கின்றனவாம்.(த)

## நவீன ரக விமானங்களை வாங்கும் ஆஸ்திரேலியா



கான்பரா,ஏப் .25

பல்வேறு தாக்குதல்களை நடத்தும் ஆற்றலைக் கொண்ட எவ்-35 ஜே.எஸ்.எவ். ரகவிமானங்களை ஆஸ்திரேலியா கொள்வனவு செய்யவுள்ளது.

இத்தகைய 58 விமானங்களைக் கொள்வனவு செய்வதற்காக 12 பில்லியன் டொலரைச் செலவிடுவதற்கு மத்திய அரசு அங்கீகாரம் அளித்துள்ளது. புதிதாகக் கொள்வனவு செய்யப்படவுள்ள வானூர்திகளுடன், ஜே.எஸ்.எவ் ரக விமானங்களின் எண்ணிக்கை 72ஆக மாறும். இவற் றின் முதற்தொகுதி விமானங்கள் 2020ஆம் ஆண்டில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

பிரதமர் ரோனி அபாட் விமானங்களைக் கொள்வனவு செய்யும் திட்டம் பற்றி உத்தியோகபூர்வமாக அறிவித்தார். உலகின் எந்தப் பாகத்தை எடுத்துக் கொண்டாலும், ஜே. எஸ்.எவ் என்பது மிகவும் முன்னேற்றகரமான தாக்குதல் விமானமாகும் -என்றார். (த)




உக்ரைய்ன் விவகாரத்தை அடுத்து போலந்தின் பால்டிக் மாகாணத்துக்கு தனது துருப்புக்களை முதற்கட்டமாக அனுப்பி வைத்துள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது. 600 துருப்பினர் இவ்வாறு அனுப்பப்பட்டுள்ளனர். (த)

## பிரேஸிலில் ஆயுததாரிகள் அடாவடி 34 பஸ்களுக்குத் தீ வைத்து எரிப்பு

ரியோடி ஜெனிரோ,ஏப். 25

பிரேஸில் தனியார் பஸ் நிலையத்துக்குள் புகுந்த ஆயுததாரிகள், அங்கிருந்த பஸ்களுக்குத் தீ வைத்துள்ளனர்.

பிரேஸிலின் மிகப்பெரிய நகரமான சாவ் பவுலாவில் உள்ள ஒசாச்சோ என்ற இடத்தில் செயற்பட்டு வந்த தனியார் பஸ் நிலையத்துக்குள் ஆயுதம் ஏந்திய போராளிகள் திடீரெனப் புகுந்தனர். அங்கு நிறுத்தப்பட்டிருந்த பஸ்களைத் தாக்கித் தீ வைத்து எரித்தனர். இதில் 23 பஸ்கள் முற்றிலுமாக எரிந்து சாம்பராகின. 11 பஸ்கள் சேதம் அடைந்தன.



கைத் துப்பாக்கிகளுடன் ஆயுததாரிகள்

இந்தப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை போதைப்பொருள் கடத்தல்காரர் ஒருவர் கொல்லப்பட்டார். இதன் பின்னணியில் பஸ் எரிப்புச் சம்பவம் நடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரேஸிலில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாகப் போராடி வரும் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து பஸ்களுக்குத்தீ வைக்கும் சம்பவங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இதுவரை 364 பஸ்கள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (த)

## ஜப்பான் பிரதமரை சந்திக்கிறார் ஒபாமா

ரோக்கியோ,ஏப் .25

பிராந்திய பாதுகாப்பு தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கும் ஜப்பான் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது.



ஆசியாவுக்கான பயணத்தில் முதல் கட்டமாக பராக் ஒபாமா ஜப்பானுக்கு பயணம் செய்துள்ளார்.

தென் சீனக் கடற்பரப்பிலுள்ள தீவுகளின் உரிமைப் பிரச்சினையில் தமது நாட்டுக்கு ஒத்துழைப்பை வழங்குவது தொடர்பிலானஉறுதிமொழியை அமெரிக்க ஜனாதிபதியிடம் இருந்து பெறுவதற்கு ஷின்சோ அபே முயற்சிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வர்த்தக உடன்படிக்கை மற்றும் வடகொரிய விவகாரங்கள் குறித்தும் இரண்டு நாட்டுத் தலைவர்களும் கலந்துரையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜப்பானை தொடந்து தென் கொரியா, மலேஷியா மற்றும் பிலிப் பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா பயணம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (த)

### விளையாடியது குற்றமா? மகனைக் கொன்ற தந்தை

பாரிஸ்,ஏப் .25

பிரான்ஸ் நாட்டில் விளையாடியதற்காக மகனைக் கொன்ற தந்தையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

வட கிழக்கு பிரான்ஸில் உள்ள ஓர்பியோ என்ற சிறியகிராமத்தைச் சேர்ந்த 43 வயது தந்தை தனது 23 வயதாகிய மகனை, ஒன்லைன் விளையாட்டுக்கு அடிமையாக்கியதாகக் கோபமடைந்து கழுத்தை நெரித்துக் கொன்றுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார், அந்தச் சிறுவனின் தந்தையை கைது செய்துள்ளனர்.

மேலும், சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் தந்தை, மகனின் கழுத்தை நெரித்து கொன்றது தெரிய வந்துள்ளது. (த)


## தென்கொரிய கப்பல் மூழ்கியது; *இதுவரை 11 பேர் கைதாகினர்*

சியோல்,ஏப் .25

தென்கொரிய கடற்பரப்பில் கப்பலொன்று மூழ்கியமை தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் மேலும் 04 கப்பல்பணியாளர்களைத்தென்கொரிய அதிகாரிகள் கைது செய்துள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில், மொத்தமாக 11 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். தென்கொரியக் கடற்பரப்பில் கடந்த 16ஆம் திகதி இந்தக் கப்பல் மூழ்கியது. இதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 150 ஆக அதிகரித்துள்ளது. 152 பேர் காணாமற் போயுள்ளனர். இதில் தனியொரு பாடசாலையின் பதின்ம வயது மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இன்னமும் சடலங்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கப்பல் உரிமையாளர்களுடன் தொடர்புடைய நிறுவனங்களின் அலுவலகங்களில் பொலிஸார் சோதனை மேற்கொண்டுள்ளனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக புதன்கிழமை அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. நண்பர்கள், குடும்ப அங்கத்தவர்கள் உயிரிழந்தவர்களின் புகைப்படங்களுக்கு முன்பாக மலர்கள் தூவி தங்களது அஞ்சலியைச் செலுத்தினர்.

மேலும், கப்பல் கவிழ்ந்தமைக்கான காரணத்தைக் கண்டுபிடிக்கவேண்டும்என்ற பொதுமக்களின் அழுத்தத்தின் கீழ் அரசு உள்ளதாக வெளிநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த)



# சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
## புனராவர்த்தன நவகுண்ட பக்ஷ ஸ்வர்ண பந்தன ஸ்தாபித பிரதிஷ்டா
# மஹாகும்பாபிஷேக சிறப்புமலர் – 25.04.2014

### பிரதம குருக்களின் ஆசிச்செய்தி



உலகின் தாயாகவும், சுதுமலை அரசியாகவும் எங்கள் அனைவரினதும் அன்னையாகவும் சுதுகிரியில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளுக்கும் விநாயகாதி சண்டேஸ்வரியுள்ள பரிவார தேவதைகளுக்கும், வானளாவிய அழகிய ராஜகோபுரத்திற்கும் இன்று மிகவும் பக்திசிரத்தையுடன் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. இதனையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றோம். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மஹாகும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென சிவாகமங்கள் விதந்து கூறுகின்றன. எனவே இறை சாந்நித்தியத்திற்காகவும் உலக சுபீட்சத்திற்காகவும், கிராம மக்களின் நலத்திற்கும், கும்பாபிஷேகம் செய்யப்பட்டு கும்பாபிஷேக பிரதிபலன் எங்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டுமென ஸ்ரீமாதா ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை அனுதினமும் வேண்டி ஆசிச்செய்தியை வழங்குகின்றேன்.

*"ஸர்வே ஜனாக சுகிநோ பவந்து"*

*"எல்லா ஜீவராசிகளும் சுகமாக வாழட்டும்"*

அதிவந்தனீய சர்வதேச இந்துமத பீடாதிபதி
சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்கள்.

### ஆலயங்கள் சமூகப்பணியும் ஆற்றவேண்டும்



ஈழத்தில் புகழ் பூத்த சுதுமலை அம்பாள் ஆலயத்தில் 12 வருடங்களுக்குப்பின்னர் புனருத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு அம்பாள் திருவருள் பாலித்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஆலயம் என்பது ஒரு வழிபாட்டுத் தலம் மட்டுமன்றி ஓர் அறச் சாலையாக அடியவர்களுக்கு பல்வேறு சமூகப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டியது அவசிய மானதாகும். காலத்துக்கேற்றவாறு நமது ஆலயங்களில் அறநெறிப் பாடசாலைகள், அன்னதான நிகழ்வுகள், ஆயுர்வேத வைத்தியப் பணிகள் போன்ற சமூகப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு அடியவர்களும் அவற்றில் ஈடுபடுவது சாலச் சிறந்ததாகும். அம்பாளின் ஆசியுடன் சுதுமலை அம்பாள் ஆலயத்தில் இது போன்ற திருப்பணிகள் நிகழ அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ரிஷி தொண்டுநாதன்
ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டம், பழம் வீதி, கோப்பாய்.

### செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை



வரலாற்றுப் பெருமைமிக்க சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் மஹா கும்பாபிஷேகம் காண இருப்பதையறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். மானிப்பாய், சுதுமலை, இணுவில், தாவடி போன்ற அனைத் துக் கிராமங்களினதும் கண்கண்ட குல தெய்வமாக விளங்கும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாளே. மகோற்சவ காலங்களில் இக்கிராமங் கள் அனைத்துமே அம்பாள் ஆலயத்தில் அக மகிழ்ந்து வழிபடுவர். வைகாசி பூரணை தினத்திற்கு முதல் நாள் நடைபெறும் இரதோற்சவக் காட்சி அற்புதம் மிக்கது. அடியார்கள் வீதியெங்கும் சுளகு மடை வைத்து தேரேறிவரும் அம்பாளை நன்றியோடு வரவேற்பர். நாலூர் மக்களும் அரோகரா அரோகரா என ஆர்ப்பரிக்க அழகிய சித்திரத் தேரில் அம்பாள் பவனி வருவாள். அம்பாளின் அருளாட்சியால் ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தன் முதுமையிலும் தளராது முறைப்படி வேத பாராயணம் பண்ணும் அழகே தனித்துவமானது. தெய்வீகமானது.

அம்பாளின் அருளால் சுதுமலை மக்கள் பார்போற்றும் கல்விமான்களாகவும், பல்துறை விற்பன்னர்களாகவும் அன்று தொட்டு அகிலமெங்கும் புகழ் பரப்பி வாழ்கின்றனர். புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் புவனேஸ்வரி அம்பாளைப் போற்றியே தம் பணி ஆற்றுகின்றனர். மஹோற்சவ காலங்களில் அம்பாளைத் தரிசிக்க ஓடோடி வருகின்றனர். சக்தி கடாட்சத்துடனேயே சுதுமலை மக்கள் தங்கள் நாளாந்த கடமைகளை செய்வர். புகழ்பூத்த கல்விமான்கள், பரம்பரை வைத்தியர்கள் இந்த மண்ணில் அன்று தொட்டு வாழ்ந்து வந்தமைக்கு அம்பாளின் கடாட்சமே காரணம். எம்மையெல்லாம் காத்தருளும் அம்பாளின் மஹாகும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்து இந்நாட்டு மக்கள் வாழ்வு சிறக்க அம்பாளை வேண்டிப் பணிகிறேன். அம்பாள் ஆலயத்தின் புனருத்தாரண பணிகளை பயபக்தியோடு மேற்கொண்ட அடியவர்கள், அவர்களை வழிப்படுத்திய ஆன்மீக தொண்டர்கள் ஆலய அறங்காவலர்கள் பெரும் மதிப்பார்ந்த பிரம்மஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர் அனைவர்க்கும் அம்பாளின் அருள் நிறைவாகக் கிட்டுமெனக் கூறி அம்பிகையைப் பணிந்து அமைகிறேன்.

ஆறு.திருமுருகன் தலைவர்,
ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

### இஷ்டசித்தி கிடைக்கட்டும்

யாழ். குடாநாட்டின் வடபால் அமைந்துள்ள சுதுலை என்னும் புண்ணிய பூமியிலே புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி ஆலயத்தினையும் முருகப்பெருமான் ஆலயத்தினையும் அருகிற்கொண்டு அடியவர்களுக்கு அருளாட்சியினை வழங்கி வருகின்றமை அற்புதமானது. மிகவும் பழமைமிக்கதும் புதுமைகளை அடியவர்களுக்குச்செய்து இறைபக்தியையும் அன்பின் புனிதத்துவத்தையும் அள்ளி வழங்கிக்கொண்டிருக்கும் தாயானவளுக்கு இன்றைய ஜய வருட சித்திரைத் திங்களில் மகாகும்பாபிஷேக குடமுழுக்கை காண இருக்கும் அம்பாளின் இஷ்ட சித்திகள் எம் அடியவர்களுக்கு வழங்கி நாட் டில் சாந்தியும் சமாதானமும் நிலைத்திருக்க வேண்டி வாழ்த்துகிறேன்.

திருமதி மாலினி கிருஷ்ணானந்தன்
உதவி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், வலி. தென்மேற்கு,சண்டிலிப்பாய்.

### மூர்த்தி தலம் தீர்த்தம் சிறப்புமிகு பழைமை வாய்ந்த ஆலயம்

யாழ்ப்பாண நகரின் வடபால் நான்கு மைல் தூரத்தில் உள்ளது சுதுமலை. இதனை சுதுவையம்பதி, சுதுவை நகர், சுதுகிரி என்றும் அழைப்பதுண்டு. குளம் சூழ்ந்த வயல்களும், வான் பயிர்களும் செய்பயிர்களும்,வேம்பு, அரசு, ஆல், மகிழ், மருது, கடம்பு போன்ற சோலை விருட்சங்களும் இக்கிராமத்தை அழகுபடுத்துகின்றன. இக்கிராமத்தின் மையத்திலே ஆகம விதிகளுக்கமைய கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசன மண்டபம், ஸ்தம்ப மண்டபம், இராஜ கோபுரம் ஆகியவற்றுடன் புவனேஸ்வரி அம்மை அருள்பாலித்து வருகின்றாள்.

இவ் ஆலயத்தை சூழ சிவன் கோயில், முருகன் கோயில், வைரவர் ஆகியனவும் அமைந்து அருள் செய்கின்றன. பழைமை வாய்ந்த இந்த ஆலயம் 1775ஆம் ஆண்டு மண்ணால் கட்டப்பட்டதாகவும், 1822ஆம் ஆண்டு கல்லால் கட்டப்பட்டது எனவும், யாழ்ப்பாண கச்சேரிப் பதிவுகள் கூறுகின்றன. இக்காலத்தில் இவ் ஆலயம் பர்வதவர்த்தனி அம்மன் கோயில் என்று அழைக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது. கண்ணகித் தெய்வம் மதுரை மாநகரை அழித்துவிட்டு அவ்வேகத்துடன் ஈழம் நோக்கி நவாலி களுவோடை ஊடாக இங்கு வந்து தங்கியதாகவும் கருதப்படுகிறது. இதனால் தங்கு சங்களை எனவும் அழைக்கப்படுகிறது.

கண்ணகி வழிபாட்டை போற்றி கண்ணகிக்கு விழா எடுத்து வரும் சமயம் அவ்வூர் அன்பரான கதிர்காமர் வேலாயுதர் எனும் அடியவர் தனது வயலில் உச்சி வேளையில் உழுதுகொண்டு நின்றவரர் அம்மூதாட்டியிடம் சென்றார். அம்மூதாட்டி தனக்கு தாகம் அதிகம் எனவும் குடிப்பதற்கு நீர் தேவை எனவும் கூறினார். சிறிது நேரம் தங்கும்படி கூறிவிட்டு தனது வீட்டிற்கு சென்று இளநீருடன் வந்து பார்த்தபோது மூதாட்டியைக் காணவில்லை. எங்கும் தேடிக் காணாது மனம் சோர்ந்தார். அன்றிரவே அம்பாள் காட்சி கொடுத்து என்னை இவ்விடத்தில் வைத்து ஆதரிக்கும்படி ஆஞ்சையிட்டு மறைந்தருளினார். அம்பாள் தோற்றமளித்த இடத்தில் அம்பாளை வழிபட்டு வைகாசி மாதத்தில் பொங்கல், குளிர்த்தி, சுளகு மடை, படையல் வைத்து தேவி வழிபாடு செய்து வந்தனர்.

அம்பிகையின் திருவருளால் 1999ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப்பட்டு அருமையான குடமுழுக்கை நிறைவேற்றினர். ஒவ்வொரு வருடமும் நன்கு திட்டமிட்டு திருப்பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். இவ்வாறு முழுமைபெற்ற ஆலயமாக உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தாலும் பெரும் பகுதி புதுப்பொலிவுடன் மஹா கும்பாபிஷேகத்தை நடத்துகின்றனர். தொகுப்பு : வி. கிரிதரன்

### அருள் கடாட்ஷம் கிட்டட்டும்



எங்கள் குலதெய்வம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார தெய்வங்களுக்கும், அழகிய ராஜகோபுரத்திற்கும் மிகவும் சிறப்பாக மஹா கும்பாபிஷேகம் நிகழும் தினத்தில் வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் சந்தோஷமடைகின்றேன்.

பல இலட்சம் ரூபா செலவில் அம்பாளின் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, புதிதாக எழுந்தருளி அம்பாளுக்குச் சபாமண்டபமும் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்வது மனத்திற்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது. சுதுமலை வாழ் அம்பாளின் அடியவர்களினதும் வெளியூர்வாழ் மக்களினதும் பங்களிப்பும், ஒத்துழைப்பும் பாராட்டத் தகுந்தவை. நாமெல்லோரும் ஒற்றுமையாகவும், அன்பாகவும், பண்பாகவும், பணிவாகவும், பக்தி சிரத்தையுடன் மேன்மேலும் பல திருப்பணி வேலைகளை மேற்கொண்டு எங்கள் அம்பாளின் ஆலயத்தை முதன்நிலை ஆலயமாகக் கொண்டுவரச் செய்வது எல்லோரினதும் கடமையாகும். எங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்ஷம் கிட்டட்டும். எல்லோரும் ஆனந்தமாக வாழ்வோமாக.

*மங்கலம் உண்டாகட்டும்*

வைத்தியகலாநிதி ஆ.சிவபாதம்
தலைவர், ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள், ஆலய தர்மகர்த்தாசபை
சுதுமலை, மானிப்பாய்.

### காப்பாற்றும் அன்னை



சுதுமலைக்கிராமத்திலே வாழ்கின்ற மக்களை இடையறாது காப்பாற்றி சௌகரியமாக வாழவைத்துக் கொண்டிருக்கும் நமது புவனேஸ்வரி அம்பாளின் சக்தியை எப்படி வர்ணிப்பதென்றே தெரியவில்லை.

எமக்குத் தெரிந்த பலருடைய வாழ்க்கை அனுபவங்களைக் கேட்கும்போது அம்பாளின் கருணையை என்னவென்று விவரிப்பது. இந்தப்பூமியிலே எத்தனை முறை விஞ்ஞானிகளும், வானசாஸ்திரிகளும் பூவுலகம் அழியப்போகிறது என ஊகம் தெரிவித்தும் இந்தப்பூமி இன்றும் நிலைத்து நின்று எத்தனை புதுவருடங்களைக் கொண்டாடி மகிழ்ந்திருக்கக் காப்பாற்றியிருக்கிறா. அதேபோலத்தான் புவனேஸ்வரி அம்பாள் எத்தனை பேரருளைப் புரிந்து சுதுமலை வாழ் மக்களை எந்தவித தீங்கும் வரவிடாது காப்பாற்றி இருக்கிறா. என்னால் அவளின் மகிமையை என்னவென்று சொல்வது.

எமது கிராம மக்களின் நம்பிக்கை காரணமாக கோயில் வளர்ச்சி கண்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக நமது இளைஞர்கள் தாமாக வந்து பல தொண்டுகளைச் செய்வதை பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இது அவர்களுக்கு அம்பாள் கடந்த காலத்தில் காட்டிய அருளும் வருங்காலத்தில், நிகழ்காலத்தில் எங்களை எல்லாம் காப்பாற்றுவாள் என்ற நம்பிக்கையுமே.

நாம் இந்த ஆலயத்தைப் புனரமைக்கத் தொடங்கியபோது நமது கிராமத்து மக்களால் கிடைக்கப்பெற்ற ஆதரவும், மிகக்குறுகிய காலத்திற்குள்ளேயே பண உதவிகள் மட்டுமல்ல தாம் தொண்டுகள் ஆற்றியது மட்டுமல்லாமல் கிராம மக்கள்மட்டுமல்ல வெளிநாட்டிலுள்ளவர்களும் காட்டிய அக்கறை என்ன என்று சொல்வது. இனிவரும் காலங்களிலும் அம்பாளின் வளர்ச்சியில் எமது கிராமத்து மக்களின் ஒத்துழைப்பும், பண உதவியும் தொடர்ந்து கிடைக்க வேண்டும்.

***அம்பாளின் வளர்ச்சி எமது கிராமத்தின் வளர்ச்சி.***

பே.வாதவூரர், உபதலைவர், தர்மகர்த்தா சபை.

### அருளாசிச் செய்தி



ஆதிபராசக்தியான அம்பிகை சுதுமலை எனும் புண்ணியப் பதியிலே ஸ்ரீ புவனேஸ்வரித் தாயாக எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள். அந்த அருள்மிகு அம்பிகைக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். எல்லாம்வல்ல தாயான அம்பாள் இந்தச் சுதுமலை வாழும் தமது அடியவர்களை சகல சௌபாக்கியமும் தந்து வாழ வைக்கும் அருள் தன்மை சொல்லில் அடங்காது.

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே என்பதற்கிணங்க இன்றைய கும்பாபிஷேக நாளில் எல்லோருக்கும் அருளை அள்ளி வழங்கி அருள்பாலிக்க வேண்டுமென பாதக்கமலம் பணிந்து அருளாசிகள் நல்கி வாழ்த்துகின்றோம். ஜய வருஷ சித்திரைப் புத்தாண்டு பிறந்து அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் கும்பாபிஷேகம் நிகழ்வது உள்ளத்துக்கு நிறைவைத் தருகின்றது.

இன்று நடைபெறும் கும்பாபிஷேகம் சிறப்புற எமது நல்லாசிகள். இப்பெருஞ் சாந்தியைக் காணும் பேறு பெற்றவர்கள் பெரும் பாக்கியசாலிகள். இந்த அம்பிகையின் அருட்கடாட்ஷம் எங்கும் பல்கிப் பெருகிட வேண்டி வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

ஆதீன குருமுதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமகா சந்நிதானம், திருஞானசம்பந்தர் ஆதீனம்.

### ஆசிச் செய்தி



பழைமையும், பெருமையும் கொண்டு சக்தி பீடத்தில் ஸ்ரீ புவனேஸ்வரி மூர்த்தமாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாளுக்கு மஹாகும்பாபிஷேகம் இன்று நடைபெறுவது மட்டற்ற மகிழ்ச்சியாகும்.

நவ (ஒன்பது) யாகங்களும், ஒன்பது அக்கினி குண்டங்கள் மூலமூர்த்திக்கு அமைக்கப்பட்டுக் கண்கவரும் அழகிய சுவர்ண யாகசாலையும் நிர்மாணிக்கப்பட்டு வெகு சிறப்பாக கும்பாபிஷேகம் நிகழ்வது ஆனந்தமாக இருக்கின்றது.

எமது அம்பாள் ஆலய அனைத்து அடியார்களுக்கும் நிறைந்த வாழ்வும், லக்ஷ்மி கடாட்ஷமும், சந்தோஷமான வாழ்வும் கும்பாபிஷேக பலன்கள் கிடைக்கப்பெற்று மேன்மேலும் பல தெய்வீக கைங்கரியங்களும் நிகழ வேண்டுமென அம்பாள் பாதம் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

**"மங்களானி பவந்து"**

தேவி அலங்கார விபூஷண விசாரதா
சிவஸ்ரீ ச.சர்வேஸ்வரக்குருக்கள்
(ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம் சுதுமலை)

### அம்பாளின் அருள் கிடைக்கட்டும்



ஈழவளத் திருநாட்டின் வடபாலமைந்த சைவமும் தமிழும் தளைத்தோங்கும் யாழ்நகரில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களுள் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயமும் ஒன்றாகும், இவ் ஆலயத்தில் ஜய வருஷம் சித்திரைத் திங்கள் 12ஆம் நாள் (25.04.2014) அதாவது வெள்ளிக்கிழமையாகிய இன்று ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் ஐந்து தளங்களைக்கொண்ட அழகிய வானளாவிய ராஜகோபுரத்திற்கும் பிரதிட்ஷா மஹாகும்பாபி ஷேகம் நடைபெறுகின்றமை சிறப்பம்சமாகும்.

பொதுவாக இந்து ஆகம விதிமுறைகளுக்கு அமைவாக இந்து ஆலயங்களில் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகா கும்பாபிஷேக நிகழ்வு நடைபெறுவது வழமையாகும். அவ்வகையில் இன்று இந்த ஆல யத்தில் நடைபெறும் இம் மஹாகும்பாபிஷேக நிகழ்வினை முன்னிட்டு வெளியிடப்படும் குப்பாபிஷேக சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைவதுடன் அம்பாளின் அருளாசி அனைவருக்கும் கிடைப்பதற்கும் நாட்டில் அமைதி, சமாதானம் என்பன நிலவுவதற்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளை பிரார்த்திப்போமாக.

சு. முரளிதரன் பிரதேச செயலர்,
பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்.

அம்பிகை அடியார்கள் இத்தெய்வீக
திருநாளில் வருகைதந்து அம்பிகையின்
திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம்
வேண்டப்படுகின்றனர். கும்பாபிஷேகத்தைத்
தொடர்ந்து மண்டலாபிஷேகம் நடைபெறும்
அனைவரும் வருக!
அம்பிகையின் அருள் பெறுக!

**தர்மகர்த்தா சபையினர்**

சுதுமலை அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்
தேவஸ்தானம்.

## போக்குவரத்து வசதிகளின்றி முல்லையில் பல கிராமங்கள்

### மக்கள் கவலை

முல்லைத்தீவு.ஏப்.25

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாத்தளன், செம்மன் குன்று, அம்பலவன் பொக்கணை ஆகிய கிராமங்களில் வசிக்கும் 354 குடும்பங்களும், முள்ளிவாய்க்கால் மேற்கு கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள வலைஞர்மடம் கிராமத்தில் வசிக்கும் 73 குடும்பங்களும் போக்குவ ரத்து வசதிகள் இன்மையால் நாளாந்தம் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றன.

இந்த மக்கள் தமது தேவைகளின் நிமித்தம் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், மாவட்ட பதிவாளர் திணைக்களம் ஆகியவற்றுக்குச் செல்வதாயின் 18 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

இதேவேளை நோயாளிகளும், மாதாந்த சிகிச்சைகளுக் காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளனர்.

30 வருடங்களுக்கு முன்னர் மாத்தளன்- முல்லைத்தீவு வழித்தட பஸ் சேவையை இலங்கைப் போக்குவரத்து சபை செயற்படுத்தி வந்தது. தற்போது இந்தப் பஸ் சேவை இடம்பெறுவதில்லை என்று மக்கள் தெரிவித்தனர்.

எனவே போக்குவரத்து வச தியை ஏற்படுத்தித்தர சம்பந் தப்பட்ட அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-102)

## போக்குவரத்து சீரின்மை குறித்து மாணவர், பெற்றோர் வீதிமறியல்

மன்னார், ஏப்.25

மன்னார் பிரதேசச்செயலர் பிரிவுக்குட்பட்ட கொண்ணை யன் குடியிருப்பு கிராமத்துக் கான அரச போக்குவரத்துச் சேவைகள் உரிய முறையில் இடம் பெறாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தக் கிராமத் தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும், பெற்றோ ரும் இணைந்து நேற்றுக் காலை வீதி மறியலில் ஈடு பட்டனர். தற்போது குறித்த கிராமத்தைச் சேர்ந்த 35 பேர் வரையான மாணவர்கள் தரம் ஒன்று தொடக்கம் உயர்தரம் வரையான வகுப்புக்களில் கல்வி கற்று வருகின்றனர்..அவர்கள் அங்கிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தாராபுரம் கிராமத்தில் உள்ள பாட சாலையிலே கல்வி கற்று வருகின்றனர்.



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர்

இந்த நிலையிலே அந்தக் கிரா மத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும், பெற்றோ ரும் இணைந்து குறித்த பஸ்ஸை நேற்றுக் காலை 7 மணியளவில் அந்தக் கிரா மத்தில் இடை மறித்து போராட் டத்தில் ஈடுபட் டனர். எனினும் சம்பவம் குறித்து விசாரித்தறிய உரிய அதிகாரிகள் எவரும் சம்பவ இடத்துக்குச் செல்ல வில்லை.

இந்தநிலையில் தமிழ் தேசி யக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் செல்வம் அடைக்கல நாதனுக்கு தகவல் வழங்கப் பட்ட நிலையில் நாடாளு மன்ற உறுப்பினரின் மாவட்ட இணைப்பாளர் இராசேந்திரம் பற்றிக் வினோ சம்பவ இடத் துக்குச் சென்று அந்த மக்களு டன் கலந்துரையாடினார். அவர்களது பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கை எடுப் பதாகவும் உறுதியளித்தார். அதை அடுத்து போராட்டத் தைக் கைவிட்டனர். (வ-56)

## ஆழ் மீன்பிடியில் ஈடுபட மீனவருக்கு ஆர்வமில்லை

### உதவிப் பணிப்பாளர் இரவீந்திரன் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு, ஏப்.25

நாம் இன்றும் பாரம்பரியத் துக்குள்ளேயே இருக்கின் றோம். பலநாள் கலங்களில் சென்று ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு யாரும் முன் வருவதில்லை. இதனால் மீன வர்கள் மத்தியில் தொழில் ரீதியில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வாறு கிளி நொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்கள் திணைக் கள உதவிப் பணிப்பாளர் சு. இரவீந்திரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கிடையில் இடம் பெற்று வரும் தொழில் சம் பந்தமான கலந்துரையாட லில் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே அவர் இவ் வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இரு மாவட்ட மீனவர்களுக் கிடையில் தொழில் செய்யும் இடங்களில் ஏற்படுகின்ற பிரச் சினைகள் தொடர்பாக நல்ல இணக்கப்பாட்டை எட்டுவ தற்கு இந்தக் கலந்துரையா டல் சிறந்த வாய்ப்பாக அமைந் துள்ளது. இதனை அனை வரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

நாம் அனைவரும் பாரம்பரி யத்துக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றோம். மாற்றுத் தொழில் நடவடிக்கையில் அக்கறையின்மையும் கலங் களில் சென்று ஆழ் கடலில் பல நாள்கள் தங்கி மீன்பிடி யில் ஈடுபடுவதற்கு யாரும் முன்வருவதில்லை.

துறைமுக வசதியில்லாவிட் டாலும் காரைநகர் இறங்கு துறையில் கலங்களைக் கட் டலாம். இந்த நடவடிக்கை களை ஆரம்பிப்பதன் மூலமே துறைமுக் வசதிகளைப் பெற் றுக்கொள்வதற்கு எமது திணைக்களத்துக்கு வலிமை யான கோரிக்கையை முன் வைக்க முடியும்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபடு வோர்கள் நீள் துண்டல் முறை மூலம் மீன்பிடி நடவ டிக்கையில் ஈடுபடுவது சாலச் சிறந்தது. இதன் மூலம் பிடி படும் மீன்களுக்கு சேதம் ஏற் படுவதில்லை. ஏனைய மீன் வளங்கள் தொடர்ந்தும் அழி வடையாமல் பேணப்படும்.

இந்த முறை மூலம் மீன்பிடி நடவடிக்கையை மேற்கொள் ளுவதையே எமது திணைக் களம் ஊக்குவிக்கின்றது- என்றார். (ச-115)



பிரிட்டனில் இயங்கும் கராத்தே அமைப்பின் ஏற்பாட்டில், வவுனியா மாதர் பணிச்சங்குளம் கிராமத்தில் வறுமை கோட்டின் கீழ் வாழும் பெண் ஒருவருக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கறவை மாடுகளை சர்வதேச இந்து இளைஞர் பேரவை தலைவர் சிவ.கஜன் வழங்கினார். (ச-421)

## சட்டவிரோதமாக மணல்ஏற்றி சென்றோர் கைது

முல்லைத்தீவு.ஏப்.25

முல்லைத்தீவு, முள்ளிய வளை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட வீதிச் சோதனை யின்போது, சட்டவிரோத மாக மணல் ஏற்றிச் சென்ற 4 பேரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்துள் ளனர்.

மணலை ஏற்றிச் செல்வ தற்கான அனுமதிப்பத்திரங் களை வைத்திருக்காத குற் றச்சாட்டிலேயே இந்த நான்கு பேரையும் பொலிஸார் கைது செய்தனர். (ச)

## பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை பெற நடமாடும் சேவை

### எதிர்வரும் 29 முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.25

பிறப்பு, இறப்பு, விவாகச் சான் றிதழ்கள் பெறுவதற்கான நடமாடும் சேவை மற்றும் விழிப்புணர்வுச் செயற்பாடு கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் தற்போது நடத்தப்பட்டு வருகிறது என்று பிரதேச செயலர் தெரிவித்தார்.

இதில் மக்கள் கலந்து கொண்டு பயன்பெற இயலுமென அவர் கூறினார். பிறப்பு, இறப்பு, விவா கச் சான்றிதழ்களின் பிரதி, பிறப்புச் சான்றிதழிலுள்ள பெயர் மாற்றம் அது தொடர் பான பிரச்சினைகள், காலங் கடந்த பிறப்பு, இறப்பு பதிவு, உத்தேச வயதுச் சான்றிதழ் ஆகியவற்றை இந்த நடமா டும் சேவையினூடாகப் பெற் றுக் கொள்ள முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி முத்துஐயன்கட்டுக்குளம் பொதுநோக்கு மண்டபத்தில், முத்துஐயன்கட்டுக்குளம் கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட மக்களுக்கும்- எதிர் வரும் மே மாதம் 6 ஆம் திகதி பேராறு பொதுநோக்கு மண் டபத்தில், பேராறு கிராம மக்களுக்கும்- மே மாதம் 8 ஆம் திகதி வித்தியாபுரம் பொதுநோக்கு மண்டபத்தில், வித்தியாபுரம், தட்டையர் மலை கிராம மக்களுக்கும்- மேமாதம் 20 ஆம் திகதி, முத்து விநாயகபுரம் பொதுநோக்கு மண்டபத்தில், முத்து விநா யகபுரம் கிராம மக்களுக்கும்- மே மாதம் 22 ஆம் திகதி, ஒதியமலை பொதுநோக்கு மண்டபத்தில், ஒதியமலை மற்றும் பெரியகுளம் கிராம மக்களுக்கும்- மே மாதம் 27 ஆம் திகதி தண்டுவான் பொது நோக்கு மண்டபத்தில் பெரிய இத்திமடு, தண்டுவான் கிராம மக்களுக்கும்- மே மாதம் 29 ஆம் திகதி பழம் பாசி பொதுநோக்கு மண்ட பத்தில் பழம்பாசி கிராம மக்களுக்கும் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையும், விழிப்புணர்வுச் செயற்பாடும் காலை 9 மணி முதல் பி.ப. ஒரு மணிவரையும் மேற் கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

## மன்னார் ஆயரைச் சந்தித்தனர் உலமா சபையினர்

### வீட்டுத்திட்டம் குறித்தும் ஆராய்வு

மன்னார்,ஏப்.25

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண் டகைக்கும் வன்னி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபை யினருக்கும் இடையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் ஆயர் இல்லத்தில் விசேட சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் வன்னி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி முபாரக் ரசாபி தலைமையில் சென்ற வன்னி மாவட்ட ஜம்இய்யத் துல் உலமா சபை தலைவர் மௌலவி எம்.அசீம், சமாதான பேரவையின் தலை வர் வைத்தியர் எம்.எலியாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் வடமாகா ணத்தில் உள்ள தமிழ்,முஸ் லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

முசலி பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட முள்ளிக்குளம், மறிச்சுக் கட்டி ஆகிய கிராமங்களில் மீள் குடியேறியுள்ள தமிழ்,முஸ் லிம் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வும் விரிவாக ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பில் வடமாகா ணத்தில் உள்ள தமிழ்,முஸ் லிம் மக்களை ஒன்றிணைக் கும் வகையில் அமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாகவும் கலந்துரையா டப்பட்டது. இதேவேளை மன்னார் மாவட்டத்தில் தன் னிச்சையாகவும், பக்கச் சார் பாகவும் அமைக்கப்பட்டு வரும் வீட்டுத்திட்டங்கள் தொடர் பில் குறித்த மதத் தலைவர் களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இனிவரும் காலங்களில் மன் னார் மாவட்டத்தில் மேற் கொள்ளப்படும் வீட்டுத் திட் டங்கள் உட்பட எவ்வித திட் டங்களாக இருந்தாலும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன் றிணைக்கப்பட்டு நீதியான முறையில் திட்டங்களை நடை முறைப்படுத்த நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்ட வேளை தமிழ்,முஸ்லிம் மக்களை ஒன்றிணைக்க விரைவில் அமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபைத் தலைவர் மௌலவி முபாரக் ரசாபி மன்னார் ஆயரி டம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்குத் தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை உறுதி யளித்தார்.

இந்தச்சந்திப்பில் மன்னார் பிர சைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை,மன்னார் மறை மாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை அன்ரனி விக்டர் சோசை ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-56)



உலமா சபை உறுப்பினர்கள் ஆயர் இராயப்பு ஜோசேப் ஆண்டகையை சந்தித்தபோது....

## வெள்ளரிப்பழ விற்பனை மட்டக்களப்பில் அதிகரிப்பு



வெள்ளரிப்பழ விற்பனை அமோகம்

மட்டக்களப்பு,ஏப்.25
நாட்டில் நிலவும் வெப்பமான காலநிலையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளரிப்பழம் மற்றும் வத்தகைப் பழங்கள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.
ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிரான் குளம், புதுக்குடியிருப்பு, தாளங்குடா மற்றும் கொக்கட்டிச்சோலைப் பகுதிகளிலும் வெள்ளரிப்பழம் அதிகளவில் செய்கை பண்ணப்படுகின்றது.
வெள்ளரிப் பழம் ஒன்று 75 ரூபா முதல் 150 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (ச)

## சைக்கிளுடன் லொறி மோதி ஒருவர் சாவு

மட்டக்களப்பு,ஏப்.25
மட்டக்களப்பு, வாகரைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரவெளியில் நேற்று வியாழக்கிழமை காலை லொறி ஒன்று, சைக்கிளொன்றுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த விபத்து நேற்று காலை 6 மணிக்கு திருகோண மலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் கதிரவெளி, பால்சேனை பாடசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.
இந்த விபத்தில் கதிரவெளியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்வம் புலேந்திரன் (வயது- 35)என்பவரே உயிரிழந்துள்ளார் என்று வாகரைப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த நபர் நேற்று மீன் எடுப்பதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது வன்னியில் இருந்து வாழைக்காய் ஏற்றி வந்த லொறியொன்று அவர் மீது மோதியுள்ளது. (ச)

# திட்டமிட்ட செயற்பாடுகள் கிழக்கில் அரங்கேற்றம்

## தமிழ் இனத்தை முடக்கவும் முயற்சி என்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு.ஏப்.25
கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட காணி அபகரிப்புகள் , பெரும்பான்மையின குடியேற்றங்கள், ஆலயங்கள் உடைப்பு, தமிழர் பிரதேசங்களில் திடீரென் பௌத்த விகாரைகள் முளைப்பு என பல்வேறு செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறான செயற்பாடுகள் எமது இனத்தை முடக்குவதற்கு திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசன்னா இந்திரகுமார் குற்றம் சாட்டியுள்ளார்.
மட்டக்களப்பு, படுவான் கரைப் பிரதேசங்களின் எல்லைப்புற ஆலயங்களுக்குச் சென்று அங்கு அந்த ஆலயங்களின் நிலை பற்றி ஆலய நிர்வாகிகளுடன் கலந்துரையாடலை அவர் மேற்கொண்டதையடுத்தே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
எல்லைப்புற கிராமங்களின் ஆலயங்களைப் பாதுகாப்பதன்மூலமே தமிழரின் மதத்தின், இனத்தின் பாரம்பரியத்தை பாதுகாக்க முடியும்.
இன்று எமது நாட்டில் எமது இனம் மாத்திரம் முடக்கப்படவில்லை. எமது கலை, கலாசாரம், பாரம்பரியம் என எமது அடையாளங்கள் ஒவ்வொன்றாகப் பறிபோகக் கூடிய சூழ்நிலைதான் நிலவுகின்றது.
கடந்த காலத்தில் நேரடியாக எமது இனத்தின் மீது அடக்குமுறையை பிரயோகித்தவர்கள் இன்றும் அதனையே மறைமுகமாக எமது அடையாள அழிப்பு மூலம் மேற்கொள்கின்றனர்.
அதுவும் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இவ்வாறான செயற்பாடுகள் அதிகளவில் இடம்பெற்றுக் கொண்டே இருக்கின்றன.
திட்டமிட்ட காணி அபகரிப்புகள் , பெரும்பான்மையினக் குடியேற்றங்கள் மூலம் எமது இனத்தை முடக்குவதற்கு திட்டமிட்ட வகையில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இவ்வாறான செயற்பாடுகளில் அதிகம் பாதிப்புறுபவை மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களே.
இங்கு நடைபெறுகின்ற திட்டமிட்ட குடிப்பரம்பல்மூலம்எமது மதச் சின்னங்களும் மாற்ற முறும் நிலை தோன்றுகின்றது.
ஓர் இனத்தின் அடையாளங்கள் மாற்றப்படுகின்ற



பிரசன்னா இந்திரகுமார்

போது அந்த இனத்தின் வரலாறும் மாற்றமுறும். எமது வரலாற்றை மாற்றுவதற்காகவே இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த விடயங்களில் எமது மாவட்ட எல்லைப்புற கிராம ஆலயங்களின் நிர்வாகத்தினர் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.
எமது இனத்தின், மதத்தின் பாரம்பரியம், வரலாறு, கலாசாரங்களை இன்னமும் பேணிக் காப்பதில் கூடிய பங்கு செலுத்துபவை இவ்வாறான கிராமப்புற ஆலயங்களே ஆகும். எல்லைப்புற கிராமங்களில் இருக்கும் ஆலயங்களைப் பாதுகாப்பதன் மூலமே எமது மதத்தின், இனத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாக்க முடியும். அவற்றைப் பேணிக்காப்பது எம் அனைவரதும் தலையாய கடமை.
நாம் ஆலயத்தில் அரசியல் பேசவில்லை. ஆனால் தற்போது அரசு மதங்களினூடாகவே அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொள் கின்றது. எனவே நாங்களும் இங்கு அரசியல் பேசும் நிலைமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.
எங்கோ இருக்கும் தென் ஆபிரிக்கா எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளை அழைத்து பேச்சை நடத்துகிறது.
ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பில் நடுநிலை வகித்த நாடு அது. எனினும் எமது தமிழர் பிரச்சினை தொடர்பிலான பேச்சை தென் ஆபிரிக்கா மேற்கொள்ளும்போது அரசால் எமக்கான ஒரு தீர்வை மேற் கொள்வதற்கு பேச்சை மேற் கொள்ள முடியாமல் இருக்கின்றது.
எனவே எமது கலை, கலாசார அடையாளங்களை நாம் பேணிக்காக்க வேண்டும். அவற்றை சிந்தித்து எமது மக்கள் செயற்பட வேண்டும். அதன் மூலமே எமது லட்சியத்தை நாம் அடைய முடியும்.-என்றார். (ச)

## எரிவாயு சிலிண்டர் வெடித்து நான்கு மீனவர்கள் காயம்

மட்டக்களப்பு,ஏப்.25
மட்டக்களப்பு வாழைச்சேனையிலிருந்து ஆழ்கடலுக்குச் சென்ற படகிலிருந்த சமையல் எரிவாயுச் சிலிண்டர் வெடித்ததால் 4 மீனவர்கள்காயமடைந்துள்ளனர் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவத்தில் படகின் மேல் கூரைப்பகுதி சேதமடைந்துள்ளது.
ஒரு வாரத்துக்கு கடலில் தங்கியிருந்து மீன்பிடிப்பதற்கு



சேதமடைந்த படகு

ஆயத்தமாக குறித்த படகில் 4 பேர் சனிக்கிழமை ஆழ்கடலுக்குச் சென்றுள்ளனர். இந்த நிலையில், குறித்த படகிலிருந்த சமையல் எரிவாயுச் சிலிண்டரில் கசிவு ஏற்பட்டு துர்நாற்றம் வீசிய நிலையில் அந்தச் சமையல் எரிவாயு சிலிண்டர் செவ்வாய்க்கிழமை இரவு வெடித்ததாக பொலிஸில் மீனவர்கள் வாக்குமூலம் அளித்துள்ளனர்.
இந்தச் சம்பவத்தையடுத்து மற்றுமொரு படகில் இருந்தவர்களின் உதவியுடன் காயமடைந்தவர்கள் சேதமான படகுடன் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை கரைக்குக் கொண்டுவரப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர். (ச)

ஈரவிழிகளுடன் 2 ஆம் ஆண்டு நினைவலைகள் அப்பா!



தோற்றம் 20 ✻ 05 ✻ 1939
மறைவு 16 ✻ 04 ✻ 2012

அமரர் இராமநாதன் அரசரட்ணம்

திதி:ஏகாதசி

ஆண்டுகள் இரண்டு ஆனதப்பா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
நினைவழியா உங்கள் நினைவுத் தடயங்கள்
நித்தம் எம்மைக் கலங்க வைக்குதப்பா!
நிழல்படத்தில் உங்கள் நிஜ வதனம்
தேடுகின்றோம் மீண்டும் ஒருமுறை
வருவீர்கள் என்று மாண்டு மடிகின்றோம்
உங்கள் வரவுக்காயப்பா!
எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகளை
எம் நெஞ்சில் அணையாத தீபமாய்
இருப்பீர்கள் என்று
வணங்குகின்றோம் அப்பா!




(47073)(2.6.3)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
வேலாயுதபிள்ளை பத்மநாதன்

மலர்வு
16.08.1961

உதிர்வு
26.03.2014

கடந்த 26.03.2014 புதன்கிழமை சிவபதமடைந்த வேலாயுதபிள்ளை பத்மநாதன் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால்

தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'றமேஸ் கிரி'
கொக்குவில் மேற்கு.

(46836)(5.6.3)

குடும்பத்தினர்.

## புத்தர் 'பச்சை'யுடன் இலங்கை செல்லாதீர்

### பிரிட்டன் பயண எச்சரிக்கை

புத்தரின் உருவத்தை உடலில் பச்சை குத்திக் கொண்டு இலங்கை செல்ல வேண்டாம் என்று தனது நாட்டுக் மக்களுக்கு பிரிட்டன் பயண எச்சரிக்கை விடுத்துள்ளது.
பிரிட்டன் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இதுதொடர்பான அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.
கையில் புத்தரின் உருவத்தை பச்சை குத்திய நிலையில் இலங்கை சென்ற பிரிட்டன் சுற்றுலாப் பயணியான நயொமி மிச்சேல் கோல்மன் என்ற பெண், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதனையடுத்தே இந்த எச்சரிக்கையை பிரிட்டன் வெளியிட்டுள்ளது. புத்தரின் உருவத்தை உடலில் பச்சை குத்திய நிலையில் செல்லும் பிரிட்டன் பயணிகள், இலங்கையில் நுழைய அனுமதி மறுக்கப்படும் . புத்தர் சிலைகளுக்கு முன்பாக நின்று படம்பிடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் பிரிட்டனின் புதிய பயண எச்சரிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலங்கையில் உள்ள அசாதாரண நிலையைக் காரணம் காட்டி பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் ஏற்கெனவே பயண எச்சரிக்கையை விடுத்துள்ளன. இந்தநிலையிலேயே, தற்போது புதிய பயண எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஈழப் போராட்டத்தில் மீளவும் புலிகள்; அதற்குப் பொறுப்பு ராஜபக்ஷ அரசே

## புனர்வாழ்வுத் திட்டக் குறைபாடே அதற்கு காரணம் என்கிறார் சரத் பொன்சேகா

கொழும்பு.ஏப்.25
விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கு முறைப்படி புனர்வாழ்வு வழங்கப்படவில்லை. இதன் விளைவாகத்தான், அவர்களில் சிலர் ஈழப் போராட்டத்தில் மீண்டும் இறங்குகின்றனர் என்று ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குற்றஞ்சாட்டியுள்ளார்.


சரத் பொன்சேகா

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
புனர்வாழ்வுத் திட்டங்களுக்காக பெறப்பட்ட வெளிநாட்டு நிதி தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
ராஜபக்ஷ அரசின் உயர்மட்டத்தினர் அதனை முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளனர். போர் முடிவுக்கு வந்த பின்னர், நலன்புரி நிலையங்களில் 280,000 மக்கள் தங்கியிருந்தனர். அவர்களில் சிறு தொகையினரே விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களாக அடையாளம் காணப்பட்டனர். அவர்கள் அரசால் நடத்தப்பட்ட புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு எல்லா அடிப்படை வசதிகளும், முழுமையான தொழிற் பயிற்சி, உடற் பயிற்சி, மற்றும் உளவளப் பயிற்சி என்பன வழங்கப்பட்டதாக அரசு கூறியுள்ளது.
எனினும் அரசால் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட சில போராளிகள், புலிகள் இயக்கத்துக்கு மீள உயிர்கொடுக்க முயன்றதாக கேள்விப்படுகிறோம். இதற்கு புனர்வாழ்வுத் திட்டத்தின் குறைபாடே காரணம்.
முன்னாள் விடுதலைப் புலிகள் மீண்டெழ முயன்றதற்கு அரசும் பொறுப்பாகும். வடக்கிலுள்ள தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள தேவையான முயற்சிகளை அதிகாரத்தில் உள்ளவர்கள் மேற்கொள்ள வில்லை.
தடுத்து வைக்கப்பட்ட புலிகளின் முன்னாள் ஆயுதக் கொள்வனவாளர் குமரன் பத்மநாதன் மூலம், இலங்கை அரசு புலிகளின் பணத்தைக் கொள்ளையிட்டது. படுகொலைகளுக்குக் காரணமான புலிகளின் முன்னாள் தலைவர்களான கருணா, பிள்ளையான் போன்றவர்களுக்கு சுதந்திரக் கட்சியில் உயர் பதவிகள் அளிக்கப்பட்டன.
மாகாண சபைத் தேர்தலின் போது வாக்குகளைப் பெறுவதற்காக ராஜபக்ஷ அரசு இனப் பதற்றநிலையை ஊக்குவித்தது. ஒவ்வொரு தேர்தலின் போதும், ராஜபக்ஷ அரசு தெற்கிலுள்ள சிங்கள -பௌத்த மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பௌத்த இனவாதத்தை ஊக்குவிக்கிறது. அதேவேளை, வடக்கிலுள்ள தமிழ் மக்களுடனான நல்லிணக்கத்துக்கு ஊக்கமளிப்பதில்லை. ஆனால், ஏனைய கட்சிகள் தான் இனவாதத்தை ஊக்குவிப்பதாக அரசு கூறி வருகிறது-என்றார். (ச)

## இணைய விளம்பரங்கள் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

கொழும்பு,ஏப்.25
இணைய விளம்பரங்களின் மூலம் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. சிறுவர், சிறுமியரை கவரக்கூடிய வகையில் இணையத்தில் விளம்பரம் செய்து, அவர்களுடன் பேசி, அவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைத்து துஷ்பிரயோகம் செய்வதாகவும் ,வேறு நபர்களுக்கு அவர்களை விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இந்த சம்பவம் குறித்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் தோட்ட அதிகாரியும் கணினி தொழில்நுட்பவியலாளருமான ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ச)

## இந்தியப் பொலிஸார் இலங்கைக்கு வரலாம்

### உத்தியோகபூர்வ அனுமதி கோரினால்

கொழும்பு.ஏப்.25
இலங்கையில் சிறுநீரக விற்பனை இடம்பெற்றமை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு இந்தியப் பொலிஸார் உத்தியோகபூர்வமாக அனுமதி கோரினால் அதற்கு இடமளிக்கப்படும் என்று இலங்கை பொலிஸ்துறை தெரிவித்துள்ளது.
ஹைதராபாத்தைச் சேர்ந்த தீனேஸ் மாரு என்ற இளைஞர் இலங்கையில் சிறுநீரக விற்பனைக்காக அழைத்து வரப்பட்டு அறுவைச் சிகிச்சையின் போது உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன.
அதனையடுத்து இது தொடர்பில் 3 பேரை ஹைதராபாத் பொலிஸார் கைது செய்தனர். அவர்களின் தகவல்படி, 21 பேரை தாம் இலங்கைக்கு சிறுநீரக விற்பனைக்காக அனுப்பியமை தெரியவந்துள்ளது.
இந்த விசாரணைக்காக இந்திய பொலிஸ் குழு ஒன்று இலங்கை செல்லவுள்ளது என்று நேற்றுமுன்தினம் இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது.
இது தொடர்பில் கருத்துரைத்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன, உத்தியோகபூர்வ கோரிக்கை விடுக்கப்பட்டால் அது ஏற்றுக் கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். (ச)

ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் ஆங்கில பயிற்சி வகுப்புக்கள்
Professional English Training Program at Angel International School
சர்வதேச உச்சரிப்புடன் ஆங்கிலம் பேச,எழுத, வாசிக்க
இலங்கை மற்றும் வெளிநாடுகளில் அனுபவம் பெற்ற ஆசிரியர்களின் பயிற்சியில்...



ANGEL INTERNATIONAL SCHOOL
Manipay

நேர்முகப்பரீட்சை 2 .04.2014 முதல் 26.04.2014 சனிக்கிழமை
காலை 09.00 மணி முதல் மதியம் 12.00 வரை

E201: SPOKEN ENGLISH
Ideal for Beginners
E301: PROFESSIONAL ENGLISH
Ideal for employment and Higher Studies

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY
In God we trust

★ An Oral Interview will be reqired for E201 & E301
★ The Course is presented by qualified and experienced English teachers with both overseas and local experience
★ Every course includes theory and application
★ For those completing the courses a certificate will be offered.

Prefered A/L Qualified
உயர்தரம்(A/L) தோற்றியவர்கள் விரும்பத்தக்கது.
(C/13530)(5.6.3)

பதிவுகளுக்கும் மேலதிக விவரங்களுக்கும் நிர்வாகி 021225-5628

**Faculty of Management Studies and Commerce**
**University of Jaffna - Sri Lanka**
**Notice**

The Orientation Programme for the newly admitted first year students to the Faculty of Management Studies and Commerce, University of Jaffna for the academic year 2012/2013 will be held from 05th of May 2014 till 09th May 2014 at 09.00 a.m. The new students are requested to participate in the Orientation programme without fail.

Academic activities for all students (1st, 2nd, 3rd and 4th year students) of the Faculty of Management Studies and Commerce will commence on 19th May 2014.

**Registrar,**

(சி13537)
(12.3.6)

**முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**

**நுண்நிதியியல் டிப்ளோமாக் கற்கைநெறிக்கான மூன்றாம் அரையாண்டுப் பரீட்சை-மே 2014**

மேற்படி கற்கைநெறிக்கான பரீட்சைகள் 2014 மே மாதம் 17, 18, 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறும் என பீடாதிபதி அறிவித்துள்ளார்.
மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்று 30.04.2014 இற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
திட்ட அறிக்கை(Project Report)யினை 23.05.2014 இற்கு முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைகள் கிளையில் சமர்பித்தல் வேண்டும்.
நேரசூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.
பதிவாளர்.
(சி/13538)(3.8.4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நல்லதொரு முயற்சி ஏகமனதாக நிறைவேற்றுக

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும்படி கேட்டு வடக்கு மாகாண சபையில் தீர்மானம் ஒன்றை நிறை வேற்றுவதற்கான முன்மொழிவு பேரவைச் செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபைக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மருத்துவர் க.சிவமோகன் இந்த முன்மொழிவைச் சமர்ப்பித்திருக்கிறார். இது காலப் பொருத்தமானது; சாலச் சிறந்தது. வரவேற்கத்தக்கது.

அரசியல், இராஜதந்திரம், நல்லிணக்கம் என்ற சொற்களை முன்வைத்து இந்த முன்மொழிவையும் புறந்தள்ளி விடாமல், அதனைப் பேரவைச் செயலகம் விவாதத்துக்கு அனுமதித்திருப்பதற்கும் தனியாகப் பாராட்டுச் சொல்ல வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மாகாணங்களாக வடக்கு – கிழக்கைத் தவிர வேறு எவையும் இலங்கை என்கிற நாட்டில் இருக்க முடியாது.

30 வருடங்களுக்கு மேலாக அவசரகாலத் தடைச் சட்டத்தால் வடக்கு – கிழக்கு மாகாணங்களும் தமிழ் மக்களும் பட்ட துன்பங்கள், துயரங்கள் சொல்லொணாதவை. இந்தச் சட்டத்தின் கீழே கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கானவர்கள் இன்றும் விசாரணைகள் ஏதும் இன்றி தெற்குச் சிறைகளில் வாடுகின்றனர்.

போர் முடிந்து 5 வருடங்கள் ஆகிவிட்டபோதும், அவர்களை விடுவிப்பதற்கு இதுவரையில் சாதகமான சமிக்ஞை எதனையும் இலங்கையின் ஜனாதிபதியும்கூடக் காட்டவில்லை.

யாரை வேண்டுமானாலும் எந்தத் தருணத்திலும் கைது செய்வதற்கும் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தாமல் நீண்ட காலம் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கும் அவசரகாலச் சட்டம் பாதுபாப்புப் படையினர் அனைவருக்கும் அனுமதி அளித்தது.

இலங்கை நாட்டின் அரசமைப்பு தனது மக்களுக்கு வழங்கியுள்ள ஒன்றுகூடும் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பவற்றை மிக மோசமாகக் கட்டுப்படுத்தி, ஜனநாயகத்தை ஆட்டம் காணச் செய்வதாகவும் நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கி நடத்தி செல்வதாகவும் இந்தச் சட்டம் கடந்த காலத்தில் திகழ்ந்தது.

இதனை நீக்கி விடுமாறு மனித உரிமை அமைப்புக்கள் தொடர்ச்சியாகக் குரல் எழுப்பி வந்தபோதும், ஒரு சில மாதங்கள் தவிர ஒவ்வொரு மாதமும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நீடிக்கப்பட்டு சுமார் 30 ஆண்டுகாலம் அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தது. வஞ்சகம் இல்லாமல் மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் சரி, ஐக்கிய தேசிய முன்னணியும் சரி இந்தச் சட்டத்தை தொடர்ந்து கடைக் கொண்டன.

போர் முடிந்து விட்டதாகவும் விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் இலங்கை அரசு அறிவித்துவிட்ட நிலையில், அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் அந்தச் சட்டத்தைக் கைவிட்ட மஹிந்த அரசு, ஏற்கனவே இருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன், அவசர காலச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பலவற்றையும் சேர்த்து புதுப்பொலிவுடன் நடைமுறைப்படுத்தியது.

இதனால் அவசரகாலச் சட்டம் பொலிஸாருக்கு வழங்கிய தான்தோன்றித்தனமான, மனித உரிமைகளுக்குக் கேடு விளைவிக்கும் அதிகாரங்கள் அனைத்தும் அப்படியே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மூலம் தக்கவைக்கப்பட்டன.

இந்தச் சட்டம் மீண்டும் தமிழர்களுக்கு எதிராகவே முழு வீச்சில் செயற்படுத்தப்படுகிறது. போர் முடிந்த கடந்த ஐந்து ஆண்டுகளில் இரண்டு கட்டங்களாக இந்தச் சட்டம் வடக்கு – கிழக்கில் உள்ள தமிழர்களின் மீது வெற்றிகரமாகப் பிரயோகித்துப் பார்க்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டில் ஒரு தடவை இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். அப்படிக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையைக்கூட அதிகாரிகள் இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வரும்கூட இந்தச் சட்டத்தின் கீழேயே கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள்.

கடந்த சில வாரங்களாக பயங்கரவாதத் தடைச் சட்டம் இரண்டாம் கட்டமாகப் பெரும்மெடுப்பில் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தடவை 65 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். அவர் இந்த எண்ணிக்கையைக் கூறியபின்னரும் பல கைதுகள் இடம்பெற்றுள்ளன. சிலர் விடுவிக்கப்பட்டும் உள்ளனர்.

எனவே இந்தத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி தீர்மானம் நிறைவேற்றும் உரிமை வடக்கு மாகாண சபையை விட வேறு எதற்கும் இருக்க முடியாது. எனவே ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை சபையின் அனைத்து உறுப்பினர்களும் சேர்ந்து நிறைவேற்ற வேண்டும். ஒரு பகுதித் தமிழர்கள் அல்லர்; எல்லாத் தமிழ்பேசும் மக்களுமே இந்தச் சட்டத்தால் பெருந் துயரை அனுபவித்தார்கள் என்பதை உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மனங்கொள்க!

அத்துடன் வெறுமனே தீர்மானத்தை நிறைவேற்றுவதுடன் நின்றுவிடாது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக அகற்றுவதற்கான முழு முயற்சிகளிலும் வடமாகாண சபை உறுப்பினர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

அந்த வகையில் மருத்துவர் சிவமோகனின் முயற்சி பாராட்டப்படவேண்டியது; வரவேற்கப்படவேண்டியது.

# எவர் மூலமாவது நீதி கிடைக்கட்டும்

ராமு மணிவண்ணன்

> இறுதிப் போரின் முடிவில் பிடிபட்ட இளம் பெண்களை, சுமார் 60 பஸ்களில் ஏற்றிச் சென்றது இலங்கை இராணுவம். அந்தப் பஸ்களோ, அதில் பிடித்துச் செல்லப்பட்டவர்களோ என்ன ஆனார்கள் என இன்று வரை தெரியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கை தொடர்பான அமெரிக்கத் தீர்மானம் நிறைவேறிவிட்ட சூழலில், உலகெங்கிலும் உள்ள முக்கியமான 16 தமிழ் அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகளாக அறிவித்து, உலக நாடுகளிடம் அவை மீதான தடையையும் கோரியிருக்கிறது இலங்கை அரசு!

அத்துடன், இலங்கைக்குள் புலிகள் அமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப முயன்றதாக நெடுங்கேணிப் பகுதியில் கோபி, அப்பன், தேவிகன் ஆகிய மூவரைச் சுட்டுக் கொன்றிருக்கிறது.

சர்வதேச அழுத்தங்கள் வெறும் பேச்சளவில் உருவானதுமே, இலங்கையில் இருக்கும் நிராயுதபாணித் தமிழர்களை விதவிதமாக வதைக்கத் தொடங்கிவிட்டது இலங்கை அரசு.

இது 2009 ஆம் ஆண்டுக்குப் பிந்திய போராகப் பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், சென்னைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் பொது நிர்வாகத் துறையின் பேராசிரியரும், தலைவருமான ராமு மணிவண்ணன், ஈழத் தமிழர் படுகொலைக்கான ஆதாரங்களை SRI LANKA HIDING THE ELEPHANT' என்ற தமது நூலில் 1,000 பக்கங்களுக்கு அடுக்கியிருக்கிறார்.

**கடந்த மூன்று வருடங்களாக இலங்கை தொடர்பான ஐ.நா. அமர்வுக்குச் சென்று வரும் ராமு மணிவண்ணன் இது தொடர்பாக தெரிவித்ததாவது:-**

நான் தொடர்ந்து ஈழத்துக்குச் சென்று வருபவன். கொத்துக்குண்டுகள் பற்றிய செய்திகள் வருவதற்கு முன்னரே, அதன் விளைவுகளை அங்கு நேரில் கண்டவன். ஆதலால், 2008 ஆம் ஆண்டு இறுதியில் இருந்தே இந்த நூலுக்கானத் தயாரிப்புப் பணிகளைத் தொடங்கி விட்டேன்.

அப்போது முதல் இப்போது வரை இறுதிப் போரில் காணாமற் போன குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என அந்தப் பயங்கரத்தின் நிழலையும் நிஜத்தையும் இந்த நூலில் தொகுத்திருக்கிறேன்.

இறுதிப் போரின் முடிவில் பிடிபட்ட இளம் பெண்களை, சுமார் 60 பஸ்களில் ஏற்றிச் சென்றது இலங்கை இராணுவம். அந்தப் பஸ்களோ, அதில் பிடித்துச் செல்லப்பட்டவர்களோ என்ன ஆனார்கள் என இன்று வரை தெரிய வில்லை.

இந்த மாபெரும் இனப்படுகொலையை, போர்க் குற்றம் என்றும், மனித உரிமை மீறல் என்றும் உலகம் விவாதித்துக் கொண்டிருந்த சமயத்தில், இல்லை இது அப்பட்டமான இனப் படுகொலை என்று உலகுக்கு உணர்த்த, போர் நடந்த விதம், பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள், கொல்லப்பட்ட மக்கள் என இந்த இன அழித்தொழிப்பு தொடர்பான முக்கியமான ஆவணங்கள் அனைத்தையும் இந்த நூலில் தொகுத்திருக்கிறேன்.

இனிமேலாவது ஐ.நா. மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு ஏதேனும் நிவாரணம் கிடைக்குமா?

2009 இல் போர் முடிந்தபோது, இலங்கை அரசைப் பாராட்டி ஒரு தீர்மானத்தை இந்தியாவின் ஆதரவோடு நிறைவேற்றியது ஐ.நா.

பின்னர், 2012 ஆம் ஆண்டு இலங்கை அரசே தன் பிரச்சினைகளை விசாரித்துத் தீர்த்துக்கொள்ளும் விதத்தில், ஐ.நா. சபையினால் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்துக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டு இந்த ஆணைக் குழுவின் விசாரணையிலும் மனித உரிமை தொடர்பான விசாரணைகளிலும் முன்னேற்றம் இல்லை என்று அறிவிக்கப்பட்டது.

பின்னர், ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நவிப்பிள்ளை, இலங்கைக்கே நேரடியாகச் சென்று சூழலை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தார்.

இப்போது சர்வதேச விசாரணை தேவை என, ஐ.நா. மனித உரிமை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஓர் இனப்படுகொலையை வேடிக்கை பார்த்த சர்வதேச சமூகம், தமிழர்களின் பிரச்சினைகளைக் காதுகொடுத்துக் கேட்க ஐந்து ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

ஈழத் தமிழர் பிரச்சினை, படிப்படியாக சர்வதேச சமூகத்தின் கைகளுக்குச் சென்றுவிட்டது.

இந்தத் தீர்மானங்கள் இன்னும் வலுவாக வேண்டும் என்பதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், ஐ.நா. நடவடிக்கைகளால் நன்மையே இல்லை என்று சொல்லிவிட முடியாது!

ஆனால், இதுவரை வெளிவந்த ஐ.நா. அறிக்கைகள் போர்க் குற்றம், மனித உரிமை என்றுதான் பேசுகிறதே தவிர, எங்குமே இனப் படுகொலை என்ற வார்த்தையைக் கூடப் பயன்படுத்தவில்லையே?

போர் முடிந்த புதிதில் அயர்லாந்தில் நடந்த மக்கள் தீர்ப்பாயத்தில் போர்க் குற்றம், இனப்படுகொலை என்றுதான் பேசினார்கள். ஆனால் உறுதியான ஆதாரங்கள் வெளிவந்த பின்னர், ஜேர்மனியில் நடந்த மக்கள் தீர்ப்பாய மாநாட்டின் முடிவில் இலங்கையில் நடந்தது இனப் படுகொலைதான் என்று அறிவித்தார்கள்.

இந்த நிலையில் நாம் ஐ.நா. தீர்மானத்தை இனப் படுகொலை என்று திட்டவட்டமாக வரையறுக்கப் போராட வேண்டுமே தவிர, ஐ.நாவே வேண்டாம், அமெரிக்கா எந்த நன்மையும் செய்யாது என்று பிரச்சினையைத் திசை திருப்புவது குழப்பும் வேலையாகப்படுகிறது.

தொடர்ந்து போராடுவதன் மூலம் மட்டுமே சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்து, ஈழத் தமிழர்களுக்குத் தேவையான அரசியல் தீர்வினைப் பெற முடியும்.

செப்ரெம்பர் மாதத்தில் இருந்து இலங்கை மீதான விசாரணைக்குரிய ஆயத்தப் பணிகள் தொடங்கும் என நம்புகிறேன்.

இந்த விசாரணைகளுக்கு, இலங்கை அரசு உரிய முறையில் ஒத்துழைப்பு வழங்காவிட்டால், இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் வரும் என எதிர்பார்க்கலாம். ஐ.நா. போன்ற அமைப்புகளால் மட்டுமே அது சாத்தியமாகும்!

ஆனால், எண்ணெய் வளமோ, சுரண்டக் கூடிய வேறு வளங்களோ இல்லாத இலங்கை மீது அமெரிக்காவுக்கோ, மேற்கு உலகுக்கோ என்ன அக்கறை இருக்கும் என்று எதிர்பார்க்க முடியும்?

தெற்கு ஆசியாவின் அரசியல் ஸ்திரத் தன்மைக்கு இந்தியாவின் பங்கு முக்கியமானது. ஆனால், ஆசியாவில் தன்னை ஒரு சூப்பர் பவர் ஆக நிறுத்திக் கொள்ள இந்தியா எதையுமே செய்யவில்லை.

குறிப்பாக, இலங்கை விவகாரத்தைத் தவறான கண்ணோட்டத்துடன் அணுகுகிறது.


13ஆவது சட்டத் திருத்தத்தின் மூலம் ஈழத் தமிழர்களுக்கான குறைந்தபட்ச தீர்வைக் கூடப் பெற்றுக் கொடுக்காமல், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தோம், கழிப்பிடம் கட்டிக் கொடுத்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இலங்கையைத் தனது பிராந்திய நலன்களுக்கு ஆதாயமாகப் பயன்படுத்திக்கொள்ளும் சீனா, இந்து மகா சமுத்திரம் முழுக்க தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி வருகிறது.

**என்னைப் பொறுத்தவரை அமெரிக்கா என்று இல்லை, ரஷ்யா, இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் கொண்டுவந்தாலும் அதை ஆதரிப்பேன். நமக்குத் தேவை நீதி. அது யார் மூலம் கிடைத்தால் தான் என்ன?**



# மலேரியா நோயை ஒழித்துக்கட்டுவோம்




உலக மலேரியா தினம் இன்றாகும். மலேரியா என்பது நோய் பரப்பி அல்லது நோய்க்காவி வாயிலாக பரவும் தொற்றுப்பண்புடைய ஒரு தொற்றுநோயாகும். இது முதற்கலவுரு ஒட்டுண்ணிகள் மூலம் ஏற்படுகிறது.

அமெரிக்கா, ஆசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய பகுதிகளையும் சேர்த்து வெப்பமண்டலம் சார்ந்த மற்றும் மிதவெப்ப மண்டல பிரதேசங்களிலும் இது பரவலாகக் காணப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 350 முதல் 500 மில்லியன் வரையிலான மக்கள் மலேரியா நோயினால் பாதிக்கப்படு கிறார்கள். அவற்றில் ஒன்றிலிருந்து மூன்று மில்லியன் மக்கள் இந்த நோயினால் இறக்கிறார்கள்.

இந்த நோயின் காரணமாக இறப்பவர்களில் அதிகமானவர்கள் ஆபிரிக்காவில் இருக்கும் இளம் குழந்தைகளாவர். மலேரியா தொடர்பாக ஏற்படும் இறப்புகளில் 90 சதவீத இறப்பு சப்-சஹாரா ஆபிரிக்காவில் நிகழ்கிறது. மலேரியா பொதுவாக வறுமையுடன் தொடர்புள்ளதாக இருக்கிறது. இதனால் இது வறுமைக்கு காரணமாகவும் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய தடையாகவும் இருக்கிறது.

பொதுவான தொற்றுநோய்களில் மலேரியாவும் ஒன்றாகும். இது பொதுச்சுகாதாரத்திற்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பேரினம் பிளாஸ்மோடியம் (மலேரியா நோய்க்காரணி) என்னும் முதற்கலவுரு ஒட்டுண்ணிகளினால் இந்த நோய் ஏற்படுகிறது. பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணியின் ஐந்து வகை இனங்கள் மனிதர்களுக்கு நோய்த்தொற்றை ஏற்படுத்தலாம்.

நோயின் மிகவும் கடுமையான தன்மை பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணிகளால் ஏற்படுத்தப்படுகிறது. மனிதர்களுக்கு நோய்விளைவிக்கும் தன்மையைக் கொண்ட பிளாஸ் மோடியம் இனங்கள் வழக்கமாக மலேரியா ஒட்டுண்ணிகள் என்று கருதப்படுகின்றன.

2010 ஆம் ஆண்டு மட்டுமே உலகெங்கும் 6,55,000 பேர் மலேரியா நோயினால் உயிரிழக்க நேர்ந்தது. இதில் பெரும்பான்மையானோர் குழந்தைகளும் கர்ப்பிணிப் பெண்களும் ஆவர் என மலேரியா தொடர்பான ஆராய்ச்சித் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

**இலங்கையில் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக கடந்த வருடத் தில் 23 மலேரியா நோயாளர்களே இனங்காணப்பட் டுள்ளனர்.**

**இதேவேளை கடந்த வருடம் இலங்கைக்கு வந்த வெளி நாட்டவர்கள் 70 பேர் வரையில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டமை கண்டறிப்பட்டதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இதேவேளை மலேரியாவினால் ஏற்படும் பாதிப்பை விளக்கவும் அது குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தவும் உலகம் முழுவதும் ஏப்ரல்-25 ஆம் திகதி உலக மலேரியா தினமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.**

**ஒவ்வொரு ஆண்டும் இதற்கென முழக்கங்களை முன்னிறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது ஐ.நா அமைப்பு. அதன்படி இந்த ஆண்டும் மலேரியாவைத் தோற் கடிப்போம்! எதிர்காலத்தை முதலீடு செய்வோம்! என்ற முழக் கத்தை முன்னிறுத்திப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**



**அறிவியல் கண்டுபிடிப்புகள், ஆயுதங்கள் தயாரிப்பில் நாடுகள் போட்டி போட்டு வரும் நேரத்தில் சிறிய அளவிலான உருவம்** கொண்ட மலேரியா நோயை உண்டாக்கும் நுளம்புகளை ஒழிக்க இன்னும் முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. அதன் விளைவுதான் இன்று ஆபிரிக்க மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் காணப்படும் பாதிப்புகள் எனக் கூறலாம்.

தேங்கிக் கிடக்கும் குப்பை கூளங்கள், தேங்கி கிடக்கும் நீர், கழிவுநீர் சாக்கடை போன்றவை மூலம் நாம் நுளம்பு உற் பத்தியைப் பெருக்கி வருகிறோம். மேலும் அழு கும் பொருள் களின் அழிப்புத் தன்மையில் நாம் காட்டும் மெத்தனம் இவை யாவும் நுளம்பை உருவாக்கும் மூலதனமாக அமைந்து விடுகிறது.

மலேரியா நோய், நுளம்புகள் மூலம் பரவுகிறது என்பதை ரொனால்டு ரோஸ் என்ற பிரிட்டன் டாக்டர் கண்டுபிடித்தார். மருத்துவத்தில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக இவர் 1902 ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்றார். அனோபிலஸ் வகை பெண் நுளம்புகள் மலேரியா நோய்க்கு காரணமான பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணியை மனிதர்களி டம் பரப்பு கின்றன. இந்த நோய் தொற்று நோய் வகையை சேர்ந்தது. ஆகவே இதற்கு முறையான சிகிச்சை அளிக்கா விட்டால் மரணத்தைத் தழுவ நேரிடும்.

**மலேரியாவின் நோய் அறிகுறிகளாவன:**

காய்ச்சல், அதிகமான குளிர், வியர்த்துக் கொட்டுதல், தசை வலிகள், தலைவலி, சில நேரங்களில் வாந்தியும் பேதியுமாதல், சிறு நீரகம் செயலிழத்தல், வலிப்பு, உணர்ச்சி இழந்த ஆழ்ந்த உறக்க நிலை (கோமா) ஆகியவையாகும்.

நுளம்புகள் கடித்து, மலேரியா நோயின் அறிகுறிகள் தோன்று வதற்கும் பொதுவாக 7 முதல் 21 நாள்கள் இடைவெளி இருக்கும்.

இந்த நோயினால் உலகம் முழுவதும் ஆண்டுக்கு 35 கோடி பேர் பாதிக்கப்படுகின்றனர். இதில், சுமார் 8 லட்சத்து 50 ஆயிரம் பேர் மரணமடைகின்றனர். இதில் ஆபிரிக்க நாடுக ளைச் சேர்ந்தவர்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என யுனிசெப் நிறுவனம் கூறுகிறது. ஆபிரிக்க நாடுகளில் இறக்கும் 5 குழந்தைகளில் ஒன்று மலேரியாவால்தான் இறக்கிறது. ஆபிரிக்க நாடுகளான கொங்கோ, கானா, கென்யா, ஸாம்பியா, மொசம்பிக் உள்ளிட்ட நாடுகள் மலேரியாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

இது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் ஏற்படுத்தும் வகையில் இன்றைய தினம் உலக அளவில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்தியாவில் மலேரியாவி னால் இறப்பவர்களின் எண் ணிக்கை சுமார் 1.5 மில் லியன் என்று உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிவரம் தெரிவிக் கிறது. ஆனால், மற்றொரு புள்ளி விவரம், இந்தி யாவில் 2 மில்லியனுக்கும் அதிகமானோர் மலேரியாக் காய்ச்சலால் இறக்கிறார்கள் என்கிறது.

**இந்தியாவில் ஒரிசா, ஜார்கண்ட், சட்டீஸ்கர் , மேற் குவங்கம் உள்ளிட்ட மாநிலங் களில் இதன் தாக்கம் அதிகம் இருக்கிறது. குறிப்பாக இந்தியாவில் சேரிகள் மற்றும் குடிசை வாழ் பகுதி மக்களுக்கு மலேரியாத் தாக்கம் அதிகம்** உள்ளது. இந்தியாவில் மலேரியா ஒழிக்க பல்வேறு திட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கென பல கோடிக்கணக் கான பணம் செலவிடப்படுகிறது.

நுளம்பு மற்றும் மலேரியாவை ஒழிக்க கூடுதல் நிதி தேவைப்படுகிறது என்கிறது உலக சுகாதார அமைப்பு. தென்கிழக்கு ஆசியாவில் மலேரியா ஒழிக்கும் பணி திருப்தி அளிக்கிறது என்கிறது அந்த அமைப்பு. உலக வங்கி மூலம் இது வரை 200 மில்லியனுக்கும் அதிகமான நுளம்பு வலைகள் உலக வங்கி நிதி மூலம் வழங்கப் பட்டுள்ளது. இன்னமும் இவற்றை கூடுதலாக தயாரிக்க தற்போதும் நிதி அளிக்க ஐ.நா வின் வேண்டுகோளை ஏற்று முன்வந்னதுள்ளது உலக வங்கி என்பது குறிப்பி டத்தக்கது.

**ஆகவே மலேரியா குறித்த விழிப்புணர்வை பெறுவதோடு மட்டுமல்லாமல் நம்மால் முடிந்த அளவு அதனைக் மற்றவர்களிடமும் நாம் ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். மலேரி யாவைத் தோற்கடிப்போம், ஆரோக்கியமான எதிர்காலத்தை முதலீடு செய்வோம்.**

> “
> **இலங்கையில் மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக கடந்த வருடத் தில் 23 மலேரியா நோயாளர்களே இனங்காணப்பட் டுள்ளனர். இதேவேளை கடந்த வருடம் இலங்கைக்கு வந்த வெளி நாட்டவர்கள் 70 பேர் வரையில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டமை கண்டறிப்பட்டதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன**

## “வளமான எதிர்காலத்துக்காக மலேரியாவை தோற்கடிப்போம் ”

01.மலேரியா காணப்படும் நாடொன்றுக்குச் செல்வதற்கு முன்னர் மலேரியா தொற்றப் படுவதிலிருந்து தவிர்த்துக் கொள்வதற்கான தடுப்பு மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவும்.

02. மலேரியா காணப்படும் நாடொன்றில் இருந்து வருகை தரும்போது மலேரி யாவை இனங் கண்டு கொள்வதற்கான குருதிப் பரிசோதனை செய்து கொள்ளவும்.

03. காய்ச்சல் இருப்பின் மலேரியாவை இனங் காண்பதற்கான எளிமையான குருதிப் பரிசோதனை செய்துகொள்ளவும்.

04. நுளம்புக் கடியிலிருந்து பாதுகாப் படைவதற்கு நுளம்பு எதிர்ப்பு (நுளம்புகளை விரட்டும் மருந்து) பூசப்பட்ட நுளம்பு வலைகளைப் பயன்படுத்தப் பழகிக் கொள்ளவும்.

*மருத்துவர் அ.ஜெயகுமரன்*
*பிராந்திய மலேரியா தடை இயக்கம்,*
*யாழ்ப்பாணம்*



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: வேலைவாய்ப்பில் இருந்த தாமதம் மாறும். உங்களது வாக்கு வன்மைகூடும். தைரியம் கூடும். படிப்பில் கவனம் தேவை. மிகவும் எச்சரிக்கையுடன் படித்தால் சாதனைகள் புரிய வாய்ப்புண்டு.



**இடபம்**: கணவன் மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும். கவனம் தேவை. வீண் வாக்குவாதம் வேண்டாம். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும்.



**மிதுனம்**: தேவையற்ற வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம். யாரைப் பற்றியும் விமர்சனம் செய்ய வேண்டாம். வேலை செய்யும் இடங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.



**கடகம்**: பண விடயங்களில் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யவும். தேவையற்ற வீண் குழப்பங்கள், கற்பனைகள் வேண்டாம். எதைப் பேசினாலும் அவமானம் என்று இருந்த நிலை மாறும்.



**சிங்கம்**: உங்களது மேலான யோசனைகளைச் சொல்லத் தயாராகுங்கள். சொன்ன வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவித்த நிலையும் மாறப்போகிறது. இனியாவது வாக்குக் கொடுப்பதற்கு முன் யோசித்துக் கொடுக்கவும்.



**கன்னி**:உத்தியோகத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். நல்ல விடயங்களைத் தள்ளிப்போட வேண்டாம். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுக்கவும்.



**துலாம்**: தாய்வழி உறவினர்களுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புண்டு. கவனம் தேவை. குழந்தைகள் இல்லாதவர்களுக்கு சந்தான பாக்கியம் கிட்டும். அவர்களைக் கழிந்துகொள்ள வேண்டாம். எடுத்துச் சொல்லுங்கள்.



**விருச்சிகம்**: சிறிய நோய் என்றாலும் உடனடியாக மருத்துவரை அணுகுவது நல்லது. மருத்துவம் சார்ந்த செலவுகள் காத்திருக்கின்றன. கவனம் தேவை. குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது.



**தனுசு**: நண்பர்கள் உதவிகள் செய்வர். தந்தையார் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்படும். வேலைசார்ந்த் விடயங்களில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணங்கள் கிடைக்கக் கூடும்.



**மகரம்**: உங்கள் வாக்கு வன்மை கூடும். உங்கள் பேச்சுக்கு மதிப்புக் கிடைக்கும். எந்தக் காரியத்தையும் செய்ய முன்னர் ஒரு முறைக்கு இரு முறை யோசித்துச் செயற்படவும்.



**கும்பம்**: தாயார், தாய் வழி உறவினர்களுடன் தேவைப்படும்போது மட்டும் பேசுங்கள். நிகழ்காலத்தில் இருக்கப் பழகிக் கொள்ளுங்கள். மாணவர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் படிக்க வேண்டும்.



**மீனம்**: உத்தியோகத்தில் மந்த நிலை ஏற்படலாம். தங்களது முழுத் திறனையும் பயன்படுத்தினால் வெற்றி நிச்சயம். அவ்வப்போது நோய்கள் வரும். மருத்துவம் பார்த்தால் சரியாகும்.

## நாளை

**சித்திரை-13 சனிக்கிழமை | 26.04.2014**

திதி: துவாதசி பி.ப. 03.52 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி
மு.ப.11.07 வரை

சுபநேரம்: 02.59-04.29 வரை
இராகுகாலம்:.08.59-10.29 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



## சொற்போர் வளர்க்கும் கூற்றுக்கள்

இந்துத் துறவியான சுவாமி விவேகானந்தர் அவ்வளவு அதிர்ஷ்டம் இல்லாதவர் போலும்! நகைச்சுவை உணர்வையே இழந்தவர் போல அவர் காணப் பட்டார். அவர் செம்மஞ்சள் நிற உடையுடனும், வெளுத்த மஞ்சள் நிறத் தலைப்பாகையுடனும் பொலிந் தார். கிறிஸ்தவ நாடுகளைக் கடு மையாகத் தாக்கும் முறையில் அவர் வாதப் போரில் குதித்தார். பின்வரும் சொற்கள் அவர் உதடு களிலிருந்து சீறிக் கிளம்பின. "கீழை நாட்டிலிருந்து வந்து இந்த அரங்கில் நாள் தவறாமல் அமர்ந் திருக்கும் எங்களிடம் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவியே தீர வேண்டும் என்று சலுகை காட்டும் முறையில் பேசி வருகிறார்கள். ஏனெனில், கிறிஸ்தவ நாடுகள் தழைத்து ஓங்கி நிற்கின்றனவாம். நாங்கள் சுற்றிப் பார்க்கின்றோம். உலகின் கிறிஸ்தவ நாடுகளுள் மிகவும் செழிப்புற்றிருப்பதாக நாம் காண்பது இங்கிலாந்துதான். மேலும் அந்த நாடு 250,000,000 ஆசிய நாட்டினரின் தலைகள் மீது அமர்ந்து ஆணை செலுத்துகின் றதாம். முன் நிகழ்ந்த சரித்திரக் காட் சிகளுக்கு எங்கள் கண்கள் விரைந் தன. கிறிஸ்தவ ஐரோப்பாக் கண்டத் தின் செல்வச் செழிப்பு ஸ்பெயின் நாட்டோடு தொடங்கிற்று. ஸ்பெயின் செல்வத் தொடக்கம் மெக்ஸிக்கோ மீது படை எடுத்ததிலிருந்து பிறந் தது. கிறிஸ்தவர்களின் செல் வமோ சகோதரர்கள் ஒருவரை ஒருவர் வெட்டி மடிவதால் எழு கிறது. இத்தகைய கொடிய விலை கொடுத்துத் தனது செல்வச் செழிப்பைப் பெருக்க எந்த இந்துவும் விரும்பவே மாட்டான். இத்தகைய சொற்கள் விரிந்து கொண்டே போயின. அடுத்தடுத் துப் பேசும் சொற்பொழிவாளர் களும் இந்த உணர்ச்சியை வளர்த்துக் கொண்டே போவது போலிருந்தது.

# கண்ணாமூச்சி விளையாட்டில் மறைந்திருக்கும் இரகசியங்கள்



குழந்தைகளுக்கு கண் ணாமூச்சி விளையாட்டு என்றால் அலாதிப் பிரியம். பெரியவர்களும் குழந்தைகள் போன்று சில நேரங்களில் விளையாடிக் கொண்டு இருப் பதைப் பார்த்திருப்பீர்கள்.

இந்த விளையாட்டுக்குள் இருக்கிற இரகசியங்களை யும், அது குழந்தைகளின் மன வளர்ச்சிக்கு எப்படி உபயோ கமாக இருக்கும் என்பதை யும் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்து கூறியுள்ளார்கள்.

குறிப்பாக சிறு குழந்தைகளின் மனதில் உள்ள பயத்தை முற்றி லுமாக நீக்கிவிட உபயோக மாக இருக்கும் என்பது அவர் களின் கருத்தாகும்.

இதுதொடர்பாக மூன்று வயதுக் குழந்தைகளிடம் கண்ணா மூச்சி விளையாட்டை விளை யாடச் சொல்லி ஆய்வாளர் கள் ஆய்வு செய்துள்ளனர். குழந்தைகளின் கண்களைக் கட்டிவிட்டு, சிறு தொலைவில் அவர்களின் பெற்றோர் நின்று பெயர் சொல்லி அழைக் கிறார்கள்.

உடனே குழந்தைகள் சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றுள்ளனர், அவர்களைப் பின்தொடர்ந்து ஆய்வாளர்கள் சென்றுள்ளனர்.

இதில் மொத்தம் 37 குழந் தைகள் பங்கெடுத்தாலும் 7 குழந்தைகளால் மட்டுமே தங்களது பெற்றோர்களைக் கண்டு பிடிக்க முடிந்துள்ளது.

இதுகுறித்து ஆய்வாளர்கள் கூறுகையில், குழந்தைகளின் மகிழ்ச்சி, சிரிப்பொலி, முக மலர்ச்சி போன்ற உணர்வு களை மேம்படுத்த இந்த வகையான விளையாட்டுகள் உதவும்.

இந்த விளையாட்டுகளை 6 மாத பருவத்திலிருந்து மூன்று அல்லது நான்கு வயதுவரை விளையாடும்போது தனது பெற்றோரின் அடையாளங்க ளையும், குரல் ஒலியையும் அடையாளம் தெரிந்து கொண்டு அவர்களிடம் சென்றடைய மனரீதியான மேம்பாட்டுக்கும், மன வளர்ச்சிக்கும் உதவும் என்றும் தெரிவித்துள்ளனர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | 7 | | | 9 | | 1 |
| | | | | | 9 | 3 | | |
| 3 | 6 | | 5 | | | 2 | 8 | |
| 8 | 4 | 6 | | 5 | 2 | | | |
| | 3 | | | 9 | | | 1 | |
| | | | 3 | 7 | | 6 | 5 | 8 |
| | 5 | 1 | | | 7 | | 9 | 3 |
| | | 8 | 6 | | | | | |
| 4 | | 3 | | | 8 | | 2 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 8 | 9 | 7 | 1 | 6 | 2 | 3 |
| 1 | 2 | 9 | 6 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 6 | 7 | 3 | 2 | 5 | 4 | 1 | 9 | 8 |
| 8 | 6 | 2 | 4 | 3 | 9 | 5 | 7 | 1 |
| 7 | 1 | 4 | 5 | 6 | 8 | 2 | 3 | 9 |
| 3 | 9 | 5 | 1 | 2 | 7 | 8 | 4 | 6 |
| 9 | 3 | 1 | 8 | 4 | 5 | 7 | 6 | 2 |
| 4 | 8 | 6 | 7 | 9 | 2 | 3 | 1 | 5 |
| 2 | 5 | 7 | 3 | 1 | 6 | 9 | 8 | 4 |

## இறைவன் நாமத்தை சொன்னால் ஆன்மிக பலம் அதிகரிக்கும்

எல்லாம் வல்ல இறைவனுடைய நாமமே நமக்கு நற்பயனை அளிக்க வல்லது. அதற்கு நிகராக வேறு எதுவுமே கிடையாது. இறைவனுடைய நாமத்தைச் சொல்லச் சொல்ல எமக்கு ஆன்மிக பலம் அதிகரிக்கும். இயமன் கிட்டவர அஞ்சுவான். அத்துணை சக்தி வாய்ந்தது இந்த இறை நாமம்.

பூவுலக வாழ்வில் மனிதப் பிறவியாகிய புனிதப் பிறவியை எடுத்த ஒவ்வொருவரும் பாக்கியசாலியே. இந்த மனிதப் பிறவியில் மாத்திரமே தெய்வீக நாமத்தை இனிமையுடனும் தெளிவுடனும், உணர்வுடனும் சொல்ல முடியும். 'அரிது அரிது மானுடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் ஒளவையார். ஆகவே இந்தப் பிறவி எடுத்தவர்கள் உடம்பு இருக்கும் போதே நல்லனவற்றைச் செய்து புண்ணியத்தைத் தேடிக் கொள்ள வேண்டும்.

ஞானக்கதிர்

# சன சமூக நிலைய ஆண்டு விழாவில் பல்வேறு நிகழ்வுகள்; கைதடியில் வீடு கையளிப்பு, புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

கைதடி,ஏப். 25

கைதடி மேற்கு-சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை நிலையத் தலைவர் ப.செல்லத்துரை தலைமையில் காலை 6 மணி தொடக்கம் நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் சிற்றம்பலம் துரைராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபை உறுப்பினர்களான சங்கரன் தாங்கராசா, திருமதி இ.ஜானகி, கு. சிறிசபாநாதன், வே. கந்தையா ஆகியோரும் கலந்து கொள்வர். முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செல்வராணி ஜெகதீசனும் கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் சி.சதீஸனும் கலந்து கொள்வர்.

நிலைய அங்கத்தவர்களால் பிரதேசத்தில் வீடற்ற வறிய குடும்பங்களுக்கு அமைக்கப்பட்டுவரும் வீடமைப்புத் தொகுதியின் முதலாவது வீட்டை பிரதேச செயலர் வைபவரீதியாக கையளிக்கும் நிகழ்வும் சனசமூக நிலையத்துக்கு புதிதாக அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்துக்கு சங்கத்தினதும் கிராமத்தினதும் மூத்த உறுப்பினர்களால் அடிக்கல் நடப்படும் நிகழ்வுகளும் இடம்பெறும்.

நாளை சனிக்கிழமை இரவு 7 மணிக்கு நிலையத்தின் ஆண்டுவிழா தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் நிலைய மண்டபத்தில் இடம்பெறும். நிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் கலந்து கொள்வார். (வ-9-288)

உடனடி வேலை வாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் உள்ள எமது செறண்டிப் நிறுவனத்துக்கு உடனடியாக ஆண்/பெண் இருபாலாரும் தேவை.
தொடர்பு: 179, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்,
071 664 7692 (47141)(3.6.4)




அறிவித்தல்
இங்கு காட்டப்பட்டிருக்கும் குடும்ப மருத்துவ க்காப்புறுதி அட்டை விநியோகித்தல் நிறுத்தப் பட்டுள்ளது. ஆதலால் எவரும் கொள்வனவு செய்ய வேண்டமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
24.04.2014இற்குப் பின்பு கொள்வனவு செய்யப் படும் அட்டைகளுக்கு நொதேண் சென்றல் வைத்தியசாலை பொறுப்பல்ல என்பதை அறியத்தருகின்றோம். (C/13531)(7.6.3)
நொதேண் சென்றல் வைத்தியசாலை
021 222 2263

## பாராட்டிக் கௌரவிக்கின்றோம்

மாவிட்டபுரம்,சாயுடையைச் சேர்ந்த
உயர்திரு.
**எல்லுப்போலை சின்னத்தம்பி**
BA (Cey) ,J.P
(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவியாணையாளர்)
14.03.2014 இல் சமாதான நீதிவானாக பதவி ஏற்றமையையிட்டு நாம் மனதாரப் பாராட்டி அவரின் சேவைகள் தொடர இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




பாராட்டி வாழ்த்துவோர்:
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்,
மாவை பாரதி சனசமூக நிலையம்,
மாவை சித்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தா சபை,
மாவை அம்பாள் ஆலய தர்மகர்த்தா சபை,
சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசமும்,
புனர்வாழ்வுக் கல்வி அபிவிருத்தி நிதியமும்.
(47148)(5.6.9)

## முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா கற்கை நெறிக்கான மூன்றாம் அரையாண்டுப் பரீட்சை-மே 2014

மேற்படி கற்கைநெறிக்கான பரீட்சைகள் 2014 மே மாதம் 10, 11, 17, **18ஆம் திகதிகளில்** நடைபெறும் எனபீடாதிபதி அறிவித்துள்ளார்.
மேற்படி பரீட்சைகளுக்குரிய விண்ணப்பப்படிவங்களை **முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்று 30.04.2014 இற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு** கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.
திட்ட அறிக்கை(Project Report)யினை 16.05.2014 இற்கு முன்னர் **யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பரீட்சைகள் கிளையில்** சமர்பித்தல் வேண்டும்.
நேரசூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.
**பதிவாளர்.**
(சி/13539)(3.6.4)




இலங்கை வங்கியில்
பொன் அரும்பு(Ran Kekulu)
சிறுவர் சேமிப்பு கணக்கை
பேணும் மாணவர்களில்
வடமாகாணத்தில்
176 புள்ளிகளுக்கு மேல் பெற்ற
142 மாணவர்கள்
இலங்கை வங்கியால்
கௌரவிக்கப்படவுள்ளனர்.

இவர்களை கௌரவித்து
பரிசில் வழங்கும் நிகழ்வு
இன்று யாழ் மத்திய கல்லூரியிலும்
வவுனியா சுத்தானந்த இந்து
இளைஞர் மன்றத்திலும்
பி.ப 2.30 மணியளவில்
நடைபெறவுள்ளது.



BANK OF CEYLON
BOC
Bankers to the Nation
(47168)
உதவிப்பொது முகாமையாளர்
இலங்கை வங்கி, வட மாகாணம்




சாணுகா நகைமாடம்
SHANUGA NAGAIMAADAM
64D, Kasthuriyar Road, Jaffna.
Tel : 021 222 3700,
021 222 4687
(C/13540)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை கலைப்பீடம்

**கலைப்பீடப் பரீட்சைகள் 2012 - இரண்டாம் அரையாண்டு (பழைய பாடத்திட்டம்)**

கலைமாணிப் பட்டக் கற்கை நெறியை பழைய பாடத்திட்டத்தில் பயின்று பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய மீள் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. கலை முதற்தேர்வு, இரண்டாம் அரையாண்டு - 2012
02. இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2012
03. மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் - 2012

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களைக் கலைப்பீடாதிபதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 05.05.2014 ஆம் திகதிக்கு முன்னராகப் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும்.

**பதிவாளர்.**
(சி/13544)(3.6.2)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**M.A.N. ANTONY**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்- புனித பத்திரிசியார் கல்லூரி)

மண்ணில் 06 . 08 . 1948

விண்ணில் 26 . 03 . 2014

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (26.04.2014) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு அடைக்கல அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். எமது குடும்பத்தின் ஒளி விளக்கு அணைந்த துயரச்செய்தி யறிந்து நேரில் வந்து பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இறுதி நிகழ்வின் போது மலர் வளையம், துண்டுப்பிரசுரம், பதாகைகள் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் தொலைபேசி மற்றும் இணையத்தி னூடாக துக்கத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் இறுதி நிகழ்வுகள் சிறப்புற நடைபெற உதவிய யாழ்/புனித பத்திரிசியார் சமூகத்தினர், அருட்தந்தையர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

24, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(47068 (4.6.3)

## ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 196 ஆவது இதழ் வெளியீடு

வடமராட்சி, ஏப்.25

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளி யீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 196 ஆவது, இவ்வாண்டுக்கான சித்திரை மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவை உறுப்பினர் எஸ்.அருணகிரிநாதன் தலை மையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டு ரையை மருத்துவர் வி.பாலகிருஷ்ணனும், மதிப் பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதனும் நிகழ்த்துவார்கள். (வ-173)


## கருத்தமர்வும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், ஏப். 25

இலங்கைத் திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினால் சமூக ஒருமைப்பாடு தொடர்பான கருத்தமர்வு, கலந்துரையாடல் மற் றும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் ஆரம்பமாகி நடை பெறும் என்றும்-

தொடர்ந்து நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கலைநிகழ்வுகளும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என்றும் இதில் சமூக ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறும் அந்த நிகழ்வின் சிரேஷ்ட இணைப்பாளர் கலாநிதி ஏ.எஸ்.சந்திர போஸ் அறிவித்துள்ளார். (ஒ)

## தந்தை செல்வாவின் 37 ஆவது நினைவு நாள் 26.04.2014 அஞ்சலியும் நினைவுரையும்



**காலம்:**
26.04.2014 சனிக்கிழமை
மு.ப.9.30 மணி.

**இடம்:** தந்தை செல்வா நினைவிடம்
தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.

**தலைவர்:** அதி.வண.கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள்
(தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயர்)
(தலைவர் - தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு)

**நிகழ்ச்சிகள்**

தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலைகள் அணிவித்தலும் மலர் அஞ்சலி செலுத்தலும்

வரவேற்புரை:
பெ. கனகசபாபதி அவர்கள் (தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு உறுப்பினர்.)

அஞ்சலியுரைகள்:
மௌலவி M.I.மஹ்மூத் (பலாஹி), அருட்தந்தை C.G.ஜெயக்குமார் அடிகள்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

நினைவுப் பேருரை:
"தந்தை செல்வா இன்று இருந்தால்..."
விகடகவி மு.திருநாவுக்கரசு அவர்கள் (ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி)

நன்றியுரை:
பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள் (செயலாளர்,தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு)

தமிழ் தேசியத்தின் தந்தை அவர்களை நினைவுகூரும் இந்த அஞ்சலி நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(47142)(2.3.6) தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு.

# நன்றி நவிலலும் பிறந்தநாள் நினைவும்



# அமரர் இராதா அருளானந்தம்

(சிரேஸ்ட தாதிய போதனாசிரியர்)

அன்னை மடியில் பூவாக — ஆண்டவன் அடியில் புகழாக
25★04★1956 — 05★04★2014

எங்கள் குடும்ப குல விளக்கே!
உடன் பிறப்பே!
தாதிய தீபமேந்திய சீமாட்டியே!
உன் அன்பு நிறைந்த பார்வையால்
அனைவரையும் அரவணைத்தாய்
உன் பிரிவால் உறவுகள் தவிக்கின்றோம் அம்மா
நின் பிறந்த நாளில் விழிநீர் சொரிகின்றோம்

கடந்த 05.04.2014 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரி

**அமரர் இராதா அருளானந்தம்**

அவர்கள் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்ட வேளையில் சகோதரியைப் பராமரித்த யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை சுகாதார குழுவினர் மற்றும் தாதிய பயிற்சிப் பாடசாலை சமூகத் தினர் அனைவருக்கும் அன்புச் சகோதரியின் பிரிவுச் செய்தியை அறிந்தவுடன் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை விடுதியில் வந்து அன்னாரின் குடும்பத் தினருடன் தமது துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், அன்னாரின் புகழுட லைப் பேழையில் வைத்து சுமந்து சென்ற யாழ்.போதனா வைத்தியசாலை தாதி யர் சமூகத்தினருக்கும், தாதியர் பயிற்சிக் கல்லூரிச் சமூகத்தினருக்கும் அதனைத் தொடர்ந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி உரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், தாதிய பயிற்சிக் கல்லூரி அதிபர், தாதிய பரிபாலகர், விடுதி முகாமைத்துவமும் மேற்பார்வையும், தாதிய மேற்படிப்பு தகைமைச் சான்றிதழ் பழைய மாணவர்கள், பிரதிநிதிகள், பரிசாரர்கள் பிரதிநிதிகள், சிற்றூழி யர்கள் பிரதி நிதிகள்,பஞ்சபுராணம் ஓதியவர்கள், தலைமை உரையை நிகழ்த்திய தாதிய பயிற்சிக் கல்லூரிப் போதனாசிரியர், அங்கு தொடர்ந்து அலை அலையா கக் கண்ணீர் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும், பேழையில் ஏந்திய புக ழுடலை அன்னாரின் இல்லத்துக்கு எடுத்து வருவதற்குப் பல வழிகளிலும் உதவியவர்கள் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு தமது துயரைக் கண்ணீர் அஞ்சலிகள், பிரதிகள் மூலம் வெளிப்படுத்திய 1999 ஆம் ஆண்டு தொடக்கம் தாதிய பயிற்சி பெற்ற தாதிய உத்தியோகத்தர்கள், விடுதி முகாமையும், மேற்பார்வையும், பயிற்சி நெறி மாணவர்கள், சங்கானை பிரதேச வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி, வவுனியா, முல் லைத்தீவு, மன்னார் வைத்தியசாலைகளில் இருந்தும், ஏனைய பிரதேசங்களில் இருந்தும் நேரடியாக வருகை தந்து அஞ்சலி செலுத்திய தாதிய உத்தி யோகத்தர்கள், வவுனியா தாதியர் பயிற்சிக் கல்லூரிச் சமூகத்தினர், புலம்பெயர் வாழ் தாதிய மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கல்வியியற் துறையினர், ஆசிரிய மாணவர்கள், சுரேஸ் மோட்டோர்ஸ் அன் என்ஜினியர்ஸ் நுணாவில், ராம்கொன்ஸ்ரக்சன் நிறுவனத்தினர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இளைப்பாறிய மருத்துவர்கள், மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை சமூகத்தினர், ஊழியர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர், வவுனியா வளாக முதல்வர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிப ர்கள், ஆசிரியர்கள், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எம்முடன் துயர் பகிர்ந் தவர்கள் மற்றும் அயலவர்கள், மதகுருமார்கள், நண்பர்கள், உறவினர்கள் அன் னாரின் இறுதிக் கிரியைகளைச் சிறப்புற நடத்தியவர்கள் அன்னாரின் இறுதி யாத்திரையின்போது அவரின் புகழுடல் தாங்கிய பேழையைத் தமது தோளில் நீண்ட நடைப்பயணம் மூலம் மயானம் வரை இறுதிக்கிரியைக்காக சுமந்து சென்ற தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சகல வழிகளிலும் உதவியவர்கள் அனை வருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேவாலய வீதி, நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. 021 227 0783

(47145) (2.6.3)

உன் பிரிவால் துயருறும் சகோதரிகள்
செல்வி சுசீலாதேவி அருளானந்தம்
செல்வி மனோரதி அருளானந்தம்

# 'பெயின்ற்' அடிக்க வந்தவர் சுருட்டினார் சங்கிலியை!

*கைதடி கிழக்கில் சம்பவம்*

கைதடி.ஏப். 25
கூலிக்காக வர்ணம் (பெயின்ற்) பூசச் சென்ற இளைஞர் ஒருவர் அந்த வீட்டிலிருந்த மூன்று பவுண் எடை கொண்ட சங்கிலியை திருடிய சம்பவம் ஒன்று அண்மையில் கைதடி கிழக்கில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

கைதடிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தனது புதிய வீட்டுக்கு வர்ணம் பூசவென அந்தப் பகுதியிலுள்ள ஒப்பந்தகாரர் ஒருவருடன் தொடர்பு கொண்டார். அதை அடுத்து அவரும் தனது வேலையாள்கள் நால்வரை அனுப்பி வர்ணம் பூசும்வேலையைத்தொடக்கியிருந்தார். வீட்டுக்காரரும் தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் என்ற காரணத்தினால் வீட்டிலுள்ள பொருள்களை அப்புறப்படுத்தாது நம்பிக்கையின் பேரில் வேலைகளை மேற்கொள்ள அனுமதித்திருந்தார். இவ்வாறான நிலையில் நெல் மூடைகளுக்கு இடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நகைப் பெட்டியில் இருந்த நகைகளில் மூன்று பவுண் நிறை கொண்ட சங்கிலி திருட்டுப் போய்விட்டது.

'பெயின்ற் அடிக்கும்' வேலைகள் நடந்து கொண்டிருந்த இரண்டாம் நாளில் வீட்டிலுள்ள பெண்மணி கொண்டாட்டம் ஒன்றுக்குச் செல்வதற்காக நகைப்பெட் டியை எடுத்துள்ளார்.

அப்போதுதான் சங்கிலி ஒன்று காணாமல் போனமை தெரியவந்தது. அதிர்ச்சியடைந்தார் அந்தப் பெண். யாரிடம் சொல்வது, யாரைச் சந்தேகிப்பது என்று தெரியாமல் ஏக்கத்தில் தடுமாறினார். பின் ஒருவாறு வீட்டில் சொல்ல வீட்டுக்காரரும் ஒப்பந்தகாரருக்குச் சொல்ல கதை ஒரு வழியாக வெளியே வந்தது. இந்த நிலையில் அந்த வீட்டில் வர்ணம் பூசும் வேலைக்கு ஒப்பந்த காரரால் நியமிக்கப்பட்டவர்களில் மூன்று இளைஞர்கள் தம்முடன் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட நான்காவது இளைஞர் மீது சந்தேகப்பட்டனர். அவரை எச்சரிக்கும் வகையில் துருவி விசாரித்தனர். முதலில்தான் திருடவில்லை என சத்தியம் செய்த அந்த நபர் ஏனையோரின் ஆத்திரத்தைக் கண்டு மிரண்டு சங்கிலியைத் தானே திருடியதாக ஒப்புக்கொண்டு விட்டார்.

"நகையை யாழ். நகரில் 15 ஆயிரம் ரூபாவுக்கு அடைவு வைத்து விட்டேன்" என அவர் கூற ஒப்பந்தகாரரும் உடனடியாக 15 ஆயிரம் ரூபாவை கொடுத்து நகையை மீட்பித்து உரியவரிடம் கையளித்தார்.

நகையைத் திருடிய இளைஞர் சில வருடங்களுக்கு முன்னர் கைதடி சித்த மருத்துவத்துறை விடுதியில் திருடச் சென்றவேளை இராணுவத்தினரால் காலில் சுடப்பட்டு காயமடைந்தவர் என்று கூறப்பட்டது. (ஒ-288)

## மரண அறிவித்தல்

### திருமதி தனேஸ்வரி சோமசுந்தரம்



யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனேஸ்வரி சோமசுந்தரம் 23.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பசுபதி - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சோமசுந்தரத்தின் (P.S) அன்பு மனைவியும், காலஞ்சென்ற கமலரெட்ணவதி மற்றும் சிவராஜசிங்கம், தருமகுணசிங்கம் (மாமா), ரகுலபாஸ்கரன், சகஸ்தினாவதி (சித்திரா), லோகஜீவி (ஜீவா) ஆகியோரின் பாசமிகு தாயும், சுந்தரலிங்கம், சிவசக்தி, ரேணுகாகாந்தி, சிவானந்தவல்லி, பத்மநாதன், தவராஜசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.236, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.


(47170)(12)(3.6)

தகவல்:
தருமகுணசிங்கம். (மகன்)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்கள் இடம் பெறவுள்ளன. வர்த்தகப் பிரிவு ஆசிரியர்களுக்கு இன்றும், கலைப்பிரிவு ஆசிரியர்களுக்கு அடுத்த மாதம் இரண்டாம் திகதியும் வலயத்தின் கேட்போர் கூடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெறுமென தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-9)

## மரண அறிவித்தல்



### கந்தசாமி குமரவேள்
(வட்டு வடக்கு சித்தன்கேணி)

வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், லண்டன் (UK)ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி குமரவேள் (குமரன்) 17.04.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - தங்கமலர் தம்பதியரின் அன்புப் புதல்வரும், கந்தவேள் (சுவிஸ்), கடம்பவேள் (பிரான்ஸ்), தாமரைவேணி (வவுனியா ) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வேணுகா (சுவிஸ்), சபிதா (பிரான்ஸ்), பிரபாகரன் (அபுதாபி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜந்தன், வர்த்தனி ஆகியோரின் அருமைச் சிறியதந்தையும், தேஜஸ்விகாவின் குட்டிப் பெரியப்பாவும், ராகவி, வேளினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை லண்டனில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கூமாங்குளம்,
வவுனியா.

(47169)(12)(3.6)

தகவல்:
குடும்பத்தினர்.
024 222 6475

# மரண அறிவித்தல்

## கதிர்காமு உமாமகேஸ்வரன் (அமுது)
## (கதிர்வெல்டிங் வேர்க்ஸ்)



யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட **கதிர்காமு உமாமகேஸ்வரன்** கடந்த 19.04.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாணிக்கம்-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், துஷ்யந்தி (கனடா), மிதுலா, யுரேன் (கனடா), குஜாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தின பூபதி, காலஞ்சென்ற துவாரகாம்பாள் மற்றும் புஸ்பராணி, சத்தியசீலன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுரேந்திரன், செந்தூரன், லிங்கன், யசோதா, வசீகரன், கிரிதரன், தனுசியா, நிரோஜன் ஆகியோரின் பாசமிகு மாமனும், மதிவாணன், ஜெனனி, அர்ச்சனா, தயாளரூபன் ஆகியோரின் சிறிய தந்தையும், கஜலக்சனாவின் ஆசைப் பெரியப்பாவும், அபிஷனா, ஆதிரன், கவினாஷ், லதுஜன், கனிஸ்கரன், பிரிந்தா, சுகந்தா, அஜந்தா, டரிஷ், கஜானன், கிரிஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் குறுக்குத்தெரு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(சி.13549) (45.3.6)

தகவல் :
குடும்பத்தினர்.
077 406 7331

## ஊதுபத்தி உற்பத்தி பயிற்சி நெறி

நெல்லியடி, ஏப். 25

கரவெட்டி பிரதேச செயலக விதாதா வள நிலைய கேட்போர் கூடத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஊதுபத்தி உற்பத்தி தொழிற் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கென பதிவு செய்யப்பட்ட பயனாளிகளும், இந்தப் பயிற்சி நெறியில் பங்குபெற விரும்பும் பயனாளிகளும் குறித்த நேரத்துக்கு கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலைய கேட்போர் கூடத்துக்கு சமுகம் தந்து பயனடையுமாறு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார். (ஓ)

## நல்லூரில் இன்று அருளுரை

யாழ்ப்பாணம், ஏப். 25

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணியிலிருந்து 7.30 மணிவரை "சிவபுராணம்" என்ற கருப்பொருளிலான அருளுரையும் 15 நிமிடங்களுக்கு அது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா சுவாமிகளால் நடத்தப்படும்என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

## ஆறாம் ஆண்டின் நிறைவினிலே....



மலராய் 05 . 06 . 1949

சருகாய் 01 . 05 . 2008

**திருமதி திலகவதி கனகசபாபதி (உசன்)**

திதி: ஏகாதசி 25.04.2014

கனிவான பேச்சாலே கவர்ந்திழுக்கும் தாயே
இனிய பண்புகள் நிறைந்த எம் தெய்வமே - வந்த
பிணி தாங்காது எமைப் பிரிந்தாயோ அம்மா -
எமக்கு இனியும் வழிகாட்டி நீங்கள்தானம்மா!

"காவேரி"
உசன், மிருசுவில்.

நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.

(#7680)(12.3.6)

## மரண அறிவித்தல்

### தம்பிராசா (வீரசிங்கம்) சந்திரமோகன்

(உரிமையாளர் - நியூவே றெக்கோடிங்பார் - பருத்தித்துறை வீதி, நல்லூர், உரிமையாளர் - ராகம்ஸ் இசைக்குழு)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், மிசன் பாடசாலை வீதி, கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா (வீரசிங்கம்) சந்திர மோகன் நேற்றுமுன்தினம் (23.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் (ராஜி) அன்புக் கணவரும், ரிசானாவின் (யா/ சுண்டுக்குளி மகளிர் பாடசாலை A/L - மாணவி) பாசமிகு தந்தையும், வசந்தமோகன் (ஜேர்மனி), பத்மினி, பகீரதி (ரதி) ஆகியோரின் நேசமுள்ள சகோதரனும், நந்தினி (ஜேர்மனி), நவரத்தினம், மைக்கல், காலஞ்சென்ற சோதிராசா மற்றும் சிவகுமாரன், ஆனந்தராசா, செல்வராசா (ஜேர்மனி), தயானந்தன் (சுவிஸ்), யோகேஸ்வரி (சுவிஸ்), யோகராணி (சுவிஸ்), யோகேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4.00 மணிக்கு தகனக்கிரியைக்காக கோண்டாவில் ஆலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிசன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

தகவல்:
மனைவி

(47144) (45.3.6)

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவசங்கரப்பிள்ளை



யாழ்ப்பாணம்,கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், தொட்டிலடி, சங்கானையை வசிப்பிடமாகவும், தற்பொழுது Mississauga, Canada இல் வசித்து வந்தவருமான கந்தையா சிவசங்கரப்பிள்ளை 22.04.2014 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசி கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதி(ரதா)யின் அன்புக் கணவரும்,சாந்தினி (கனடா), சிவகுமார்(கனடா), தர்சினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் சிவப்பிரகாசம்(சிவா-கனடா),ஜெயந்தி(கனடா), முரளிதரன்(ஜெயா-சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் சிவபாதம்(குஞ்சர்-கனடா),சிவராசா(குட்டி), சிவநேசம் ஆகியோரின் பாசமுள்ள சகோதரரும், நாகராசா,கிருஸ்ணபிள்ளை, மகாலட்சுமி, தில்லையம்பலம்(அப்பு-கனடா) ஆகியோரின் மைத்துனரும், சயன்,லவன்,ஆரணி,கஜானி,அபிஷா, அபிலாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.04.2014) சனிக்கிழமை பிற்பகல் 6.00-9.00 மணிக்கு st.John's Dixie Chapel &Crematorium, 737 Dundas Street East, Mississauga(ONT) L4y 2B5 இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 27.04.2014 ஞாயிற்றுக்கிழமை 11.00 pm - 3.00 am வரை அதே இடத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| தகவல் : | குமார் (மகன்) | - 416 316 2698 - கனடா |
| | சாந்தி (மகள்) | - 905 956 2800 - கனடா |
| | சிவா (மருமகன்) | - 647 871 3862 - கனடா |
| | க.நாகராசா (மைத்துனர்) | -தொட்டிலடி,சங்கானை. |

(47148)(5.6.3)

## மரண அறிவித்தல்

### திருமதி நவரத்தினஅம்மா குமாரசாமி



வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவரத்தினஅம்மா குமாரசாமி நேற்று (24.04.2014) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமியின் பாசமிகு மனைவியும், ஆனந்தலிங்கம் (வவுனியா), காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் சுந்தரராஜா, காலஞ்சென்றவர்களான வசந்தநாதன் (ஜேர்மனி), குகானந்தன் (வவுனியா) மற்றும் ஞானரூபி, வசந்தராணி, ஜெயக்குமார் (பிரான்ஸ்), சத்தியகுமார் (பிரான்ஸ்), உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று, பூதவுடல் சாட்டி இந்துமயானத் தில் தகனம்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழமுதிர்ச்சோலை,
கந்தர்மடம்.

(47167)(12.3.6)

தகவல்: மருமகன்.



ஏழாலை அத்தியடி விநாயகர் தேவஸ்தானத்தினரின்


## கண்ணீர்க் காணிக்கை

எமது தேவஸ்தானத்தில் கடந்த பல வருடங்களாக திருமுறைகளை ஓதி சமயப் பணியாற்றிய சிவநெறிச் செல்வர் சிவ சண்முகவடிவேல் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய அத்தியடி விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து அன்னாருக்கு எமது தேவஸ்தானம் சார்பில் இறுதி அஞ்சலியைச் செலுத்துவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறைபணியில், ஆலய குருவும், அடியார்களும்.
ஏழாலை அத்தியடி விநாயகர் தேவஸ்தானம், ஏழாலை.

(47147)(7.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னக்குட்டி
**நடேசன்**
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

மலர்வு
18★05★1943
உதிர்வு
05★05★2013
திதி: ஏகாதசி

ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது நம் துயரம்
மறைந்து நீர் போனதனால்
மனம் கதறி அழுகின்றோம்
எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவால்
துயருற்றிருக்கும்

இல.34, திருநகர், கிளிநொச்சி.
மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரப்பிள்ளை.

(47660)(6.4.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
25 • 02 • 1942

உதிர்வு
05 • 05 • 2013



அமரர் **ஜோன்பிள்ளை சச்சிதானந்தம்**
(ஓய்வுபெற்ற மின் இணைப்பாளர் - வவுனியா)
திதி:ஏகாதசி (25.04.2014)

பாசமுடன் எங்களைப் பெற்று, அரவணைத்து
பார்புகழ வாழவைத்த எங்கள் அன்பு அப்பாவின்
ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.125, முதலாம் குறுக்குத்தெரு, வவுனியா.
மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

(43264)(12.3.6)

## சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை

அவர்களின்

## 107ஆவது ஆண்டு நினைவு விழா – 2014

காலம் : 26.04.2014 சனிக்கிழமை பி.ப.05.30 மணி
இடம் : சதாவதானி அரங்கு

தலைவர்
**திரு.ப.சிவசுப்பிரமணியம்**
(நிலையத்தலைவர்)

பிரதம விருந்தினர்
**உயர்திரு.கு.இராஜகுலேந்திரா**
(சிரேஷ்ட சட்டத்தரணி)

சிறப்பு விருந்தினர்
**கௌரவ ஈ.சரவணபவன்**
(நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்)

கௌரவ விருந்தினர்கள்
**திரு.நா.கந்ததாசன்**
(உதவிக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக்கல்வி, கல்வித்திணைக்களம், வடமாகாணம்)
**திரு.செ.விக்கினேஸ்வரன்**
(தலைவர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை சி.க.கூ.சங்கம்)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கமும் தமிழ்த்தாய் வாழ்த்தும்
- வரவேற்புரை
- தலைமையுரை
- குருபூசைதினப் போட்டிகளில் முதலிடம் பெற்ற பேச்சுக்கள்
- சிறப்பு விருந்தினர் உரை
- கௌரவ விருந்தினர் உரை
- சிறப்பு சொற்பொழிவு சிவத்தமிழ்வித்தகர் சிவமகாலிங்கம் "நாவலர் பாரம்பரியத்தில் சதாவதானி"
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- கலை நிகழ்வுகள்
- பரா ரதீஸ் தலைமையில் இளங்கோ கழகம் வழங்கும் சிறப்புப் பட்டிமன்றம் "இன்றைய சூழலில் எமக்குப் பெரிதும் தேவையானது பழமையின் போற்றலா புதுமையின் ஏற்றலா"
- நன்றியுரை

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்
தம்பசிட்டி, பருத்தித்துறை.

விழா சிறப்புற வாழ்த்துவோர்: மாணிக்கப் பிள்ளையார் ரேடேர்ஸ், பருத்தித்துறை. குலேன் களஞ்சியம், கதிரைவேற்பிள்ளை வீதி, தம்பசிட்டி.

(135547)(12.3.6)

## அல்வாயில் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஏப்.25

'யாழ்ப்பாணத்தில் வணிக முன்னெடுப்பும் நவீன விளம்பர இலக்கியமும்' என்ற தொனிப் பொருளிலான ஆய்வரங்கொன்று அல்வாய் கலையகத்தில் நாளைமறுதினம் ஞாயிறு பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதன் வருகையாளராக திசை.காட்டி குழுமத்தின் மூத்த உறுப்பினர் எஸ்.சுபசீலன் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

உரையின் பின் அறிஞர்கள் பங்குபெறும் மேற்படி தலைப்பின் கீழான கலந்தாய்வும் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் "கடவுளின் கைபேசி எண்" என்கின்ற சிறுகதைத் தொகுதியும் வெளியிடப்படவுள்ளது. (ஓ)

## பரிசளிப்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஏப்.25

கடந்த ஆண்டு இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கு இலங்கை வங்கியால் நடத்தப்படும் பரிசளிப்பு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் கே.எழில்வேந்தன் கலந்து கொள்வார்.

இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் பி.நந்தகுமார் உட்பட வங்கி உயரதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொள்வார்கள். (க)

## சதாவதானியின் ஆண்டு நினைவு விழா

வடமராட்சி, ஏப்.25

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையின் 107 ஆவது ஆண்டு நினைவு விழா நாளை சனிக் கிழமை இடம்பெறவுள்ளது.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையத் தலைவர் ப.சிவசுப்பிரமணியம் தலைமையில் சதாவதானி அரங்கில் பிற்பகல் 5.30 மணியளவில் விழா ஆரம்பமாகும்.

இதில் பிரதம விருந்தினராக சிரேஷ்ட சட்டத் தரணி கு.இராஜகுலேந்திரா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும், கௌரவ விருந்தினர்களாக நா.கந்ததாசன் மற்றும் செ.விக்கினேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (க)

## நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்.25

கலைமணி இரா.சுப்பிரமணியம் எழுதிய "நாம் கண்ட தலைவன்" என்ற நூல் வெளியீட்டு விழா வவுனியாவில் இடம்பெறவுள்ளது. வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள முத்தையா மண்டபத்தில் நாளை சனிக்கிழமை இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முன்னாள் வவுனியா நகர சபைத் தலைவர் எஸ்.என்.ஜி.நாதன் தலைமை தாங்குவார். முதன்மை விருந்தினர்களாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.இராதாகிருஷ்ணன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம், வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி தயாபரன், ஓய்வு பெற்ற கிராம சேவையாளர் து.தேவராஜா ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க-421)

## மீட்டல் வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஏப்.25

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறிக்கான (தரம் 3) மீட்டல் வகுப்புகள் இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தினால் நாளை சனிக்கிழமையும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடத்தப்படவுள்ளதாக இலங்கை நூலக சங்கத்தின் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளரான கலாநிதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

மேற்படி கற்கை நெறிக்கான பரீட்சைகள் அடுத்த மாதம் 10, 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதால் இந்த மீட்டல் வகுப்புகள் இடம்பெறவிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க)

### எட்டாம் ஆண்டு நீங்காத நினைவுகள்

திருமதி மகாலட்சுமி குலவீரசிங்கம்

நேற்று (24.04.2014) வியாழக்கிழமை உதயனின் 16ஆம் பக்கத்தில் வெளிவந்த மேற்படி விளம்பரத்தில் சகோதரர்கள் போதலட்சுமி, ஜெயலட்சுமி மற்றும் உறவினர்கள் என சேர்த்துள் தகவலில் குகராஜைநாதன் (மருமகன்- யாழ்ப்பாணம்) என திருத்தியும் வாசிக்கவும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**இரத்தினசபாபதி ஐயா சர்வேஸ்வரன் ஐயா**
திதி: அபரபக்க ஏகாதசி



உதயம்
20.01.1964

அஸ்தமனம்
06.05.2013

நீங்கள் இருந்தபோது எமக்கு எல்லாமே இருந்தது
நீங்கள் மறைந்த பின் எமக்கு எதுவுமே இல்லாமற் போனது
உங்களுடன் வாழ்ந்தபோது வருடங்கள் நாள்களாகக் கழிந்தன
இன்றோ ஒவ்வொரு நாளும் யுகமாகக் கழிகிறதே
இது இன்னும் எத்தனை எத்தனை யுகங்களோ

விஷ்ணு இல்லம், இருபாலைச் சந்தி, கோப்பாய்.
என்றென்றும் ஈரவிழிகளுடன்
திருமதி ச.விஷ்ணுகாந்தி (மனைவி),
செல்வி ச.கோபிகா (மகள்).

(47128)(45.6.3)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**தியாகராஜா கருணீசன் (கருணா)**
திதி: ஏகாதசி 25.04.2014



மலர்வு
24 ★ 07 ★ 1953

உதிர்வு
13 ★ 05 ★ 2011

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலவில்லை
உங்கள் நினைவோடு என்றும்வாழ்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு.
குடும்பத்தினர்.

(47151)(3.6.4)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**பரமேஸ்வரி குழந்தைவேலு**

மண்ணில்
24 ★ 03 ★ 1943

விண்ணில்
05 ★ 05 ★ 2013

திதி: 25.04.2014

ஓராயிரம் உறவுகள் இருந்தென்ன-அப்பம்மா
உங்கள் உறவுபோல் என்றும் கிடைக்காது
ஓராண்டு என்ன எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
-அப்பம்மா
உங்கள் நினைவு எங்களை விட்டு செல்லாது
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
கஸ்தூரி, கானுஷா. பேரப்பிள்ளைகள்.

(47669)(6.4.3)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**பூபாலராசா சரஸ்வதி**



தோற்றம்
07.07.1939

மறைவு
26.03.2014

ஈரவிழிகள் கலங்கி நிற்கின்றோம்
உங்கள் நினைவுகள் தாங்கி முப்பத்தொரு நாள்களுடன்
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியாத மனங்களுடன்
வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.
குடும்பத்தினர்.

# 100 ஆவது பிறந்த நாள் வாழ்த்து



**Happy Birthday To u**

மல்லாகம் வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த **சரவணமுத்து இரத்தினம்** நேற்று (24.04.2014) வியாழக்கிழமை தனது 100 ஆவது பிறந்த நாளை பிள்ளைகள் மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகளுடன் தனது இல்லத்தில் மிகவும் விமரிசையாக கொண்டாடினார்.

இவரை மேலும் பல ஆண்டுகள் நோய் நொடி இன்றி வாழ வேண்டும் என எல்லாம் வல்ல வீரபத்திரர் அருள் வேண்டி வாழ்த்துபவர்கள்.

பிள்ளைகள், மருமக்களான பரமநாதன் நாகரத்தினம் குடும்பம், நேமிநாதன் சறோஜினிதேவி குடும்பம் (ஜேர்மனி), செல்லத்துரை சகுந்தலாதேவி குடும்பம், பாலேந்திரன் ருக்குமணி குடும்பம் (ஜேர்மனி), குகானந்தன் சத்தியாதேவி குடும்பம் மற்றும் பேரப்பிள்ளைகளான குபேரன், தாட்சாயினி, கௌதமன், குகதீசன் குடும்பம், (அஜிதா) அணியா, அறோஜின், துவாரகன் குடும்பம் (துசி), சசிகுடும்பம் (பிரபா புறுணை) கோபினி, சகனியா, யபிசேக், சயோதினி, கிசோபத்தனா, பூட்டப்பிள்ளையான, கேனியன்

**வீரபத்திரர் கோயிலடி, மல்லாகம்.**

# நாட்டைக் காக்காது விட்டால் அரசைப் பாதுகாக்க முடியாது

## குணதாச அமரசேகர தெரிவிப்பு



குணதாச

கொழும்பு,ஏப்.25

அரசு நாட்டைக் காக்கா விட்டால், அரசைப் பாதுகாக்க வேண்டிய அவசியமில்லை என்று தேசப்பற்றுடைய தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்தார்.

விஜயராம மாவத்தையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண தென்னாபிரிக்காவின் உதவியை நாடுவது தவறானது என்று அவர் தெரிவித்தார். நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சர்வதேச சமூகத் தின் உதவி அவசியமில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முனைப்புக்களில் தென்னாபிரிக்காவை மத்தியஸ்தம் வகிக்க அழைக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.


நாட்டில் நிலவி வரும் அபாயகரமான நிலைமை குறித்து அரச ஊடகங்கள் சரியான தகவல்களை வெளியிடுவதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## தவறிவிட்டது

சுகுமார் லோமினன் என்பவருடைய தே.அ. அட்டை (883272056V), காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் தொடர்பு: 077 8680744, 077 3881254

# மரண அறிவித்தல்

## தவனேசன் நிருபன்



சூராவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தவனேசன் நிருபன் (22.04.2014) செவ்வாய்க்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தவனேசன் மற்றும் புவனராணி தம்பதியரின் பாசமிகு புதல்வரும் காலஞ்சென்ற குமாரவேல் மற்றும் இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் சசிகலாவின் அன்புக்கணவரும் தரணிகாவின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற இராசரத்தினம், பவளம் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி - அன்னபூரணம் தம்பதியரின் பாசமிகு பேரனும் பிரதீபன் (நோர்வே), பிரதாபன் (லண்டன்), திலீபன் (பின்லாந்து), நிரூஜா (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுசிதா (நோர்வே), டசீந்திரா (லண்டன்), கஜந்தினி (பின்லாந்து), மார்ஷல் (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் கிஷோர், கரீஸ் (பின்லாந்து), ஹரீசனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 4 மணியளவில் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

சூராவத்தை, சுன்னாகம்

# 2ஆவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
17.11.1966

மறைவு
17.04.2012



## திருமதி செல்வராணி பிறேமகுமார்

(வேலணை,சுவிஸ்)

ஆண்டுகள்தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வரமாட்டார்
தீவகத்தில் உதித்து யாழ். நகரில் வாழ்ந்து சுவிஸ் நகரத்தில்
வாழ்ந்துவரும் காலத்தில் எல்லோரையும் விட்டுசென்றீர்.
பண்புள்ள தாய் தந்தையருக்கு மகளாய் பிறந்து உறவுகள்
மனதில் நீங்காத இடம் பிடித்து வாழ்வதில் நல்ல மணவாளனை
கைபிடித்து, சிங்கக் குட்டிகள் மூவரை பெற்று, சீர் சிறப்புடன்
வாழ்ந்து வரும் காலத்தில் காலனவன் கண்களில் உம்
நினைவுதான் வந்ததோ யார் அறிவார். ஊரும், பாரும் உறவுகளும்
உம் பெருமைதனை எண்ணி வாழ்ந்திட்ட காலத்தில்
பாசக்கயிற்றில் சிக்குண்டு விண்ணுலகம் சென்றீரோ?
எப்படித்தான் மனம் வந்தது ஆறுபடை வீடு என ஆறுபெண்
பிள்ளைகளாய் வாழ்ந்தீர்கள் இப்போது அந்த ஐந்துடன் கட்டிய
கணவர் பிள்ளைகள் கூடிப் பழகியோர் மைத்துனர் அத்தான்மார்
பெறா மக்கள் அனைவரும் உமது திருமுகம் காணமுடியாது
துடித்து வாழ்கின்றார்கள். உம் உயிர் உடலைவிட்டு
பிரிந்து சென்றாலும் உயிர் எம்முடன் வாழ்ந்து கொண்டுதான்
இருக்கின்றது.

**67/2, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.** (47204)(10)

**திரு திருமதி. கலாநிதி தனேந்திரன் குடும்பம்.**

## கடமை தவறிய பொலிஸார் பதவி நீக்கம்

கொழும்பு.ஏப்.25

கடமையை உரிய முறையில் செய்யத் தவறிய சாலியவெவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலிஸார் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கைதி ஒருவர் தப்பிச் சென்ற சம்பவத்தில் கடமையை உரிய முறையில் செய்யத் தவறிய குற்றச்சாட்டின் பேரிலேயே அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற ஒருவர் சாலியவெவ, வீரபுர பகுதியில் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. இந்தத் தகவலையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்ட போதிலும் அவர் தப்பிச் சென்றுள்ளார். இவ்வாறு சந்தேக நபர் தப்பிச் சென்ற சமயத்தில் கடமையில் இருந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களுமே பதவி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். (ச)

# மரண அறிவித்தல்

## கனகர் சிவசம்பு

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகர் சிவசம்பு (24/04/2014) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கனகர் - முத்து தம்பதியரின் மகனும் முத்து பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், பத்மசறோஜினியின் அன்புக் கணவரும்.

காலஞ்சென்ற இராசரத்தினம், மற்றும் மங்கையற்கரசி (ஓய்வு பெற்ற அதிபர், மாதர் சங்கத் தலைவி கொழும்புத்துறை) காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சிவஞானம் சிவபாக்கியம் காலஞ்சென்ற சிவக்கொழுந்து சிவசோதியின் சகோதரரும் விஜயகுமாரி (ஜேர்மனி) விஜயரங்கன் (நிர்வாக உத்தியோகத்தர் ஆளுநர் செயலகம் வ.மா) விஜயராஜன் (பிரான்ஸ்) விஜயகாந்தன், விஜயபாலன் (பிரான்ஸ்) விஜயதேவி (ஜேர்மனி) விஜயவேல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிதம்பரநாதன் (ஜேர்மனி) பிரபாகரி லோறன்ஸ் (பிரான்ஸ்) சறோஜினி தேவி நிர்மலா (பிரான்ஸ்) உதயசங்கர் (ஜேர்மனி) ஆதிலெட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள் கின் றோம்.


தகவல்
சிவசம்பு விஜயரங்கன் (மகன்)
(நிர்வாக உத்தியோகத்தர்
ஆளுநர் செயலகம்,வட மாகாணம்)

14, 1 ம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை
021 -205 1000 (47208)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
08.11.1955

மறைவு
27.03.2014



## அமரர்
## இராசரத்தினம் சிவலிங்கம்

கடந்த 27.03.2014 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராசரத்தினம் சிவலிங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு நாளை (26.04.2014) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அந் நிகழ்வில் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

பிள்ளைகள்:
**சி.சிவறாகினி (ஆசிரியர்)**
**சி. ஆதவன்**
**சி. திருமகள்**

**இலகடி,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.** (47211)(10)

# பிரிவுத் துயர் பகிர்வு



## கதிர்காமு உமாமகேஸ்வரன்

(உரிமையாளர் கதிர் மின்ஒட்டு கடைச்சல் தொழிலகம்)


அவர்கள் 18.04.2014 ஆம் திகதி காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**தி.திருக்குமார்** (உரிமையாளர்)
**அம்பாள் மின் ஒட்டு கடைச்சல் தொழிலகம்**
**மீசாலை.**

(43625) (10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# கண்ணீர் அஞ்சலி



## சைவத்திரு சிவரத்தினம் சண்முகவடிவேல்

தென்மராட்சிப் பிரதேச எமது ஆலயங்களில் நடைபெறும் புராண படன நிகழ்வுகளில் பங்கேற்று, பயன்கூறி அனைவரதும் நன் மதிப்பைப் பெற்ற சைவத்திரு சண்முகவடிவேல் ஐயா அவர்களுக்கு எமது இறுதி அஞ்சலியை செலுத்துவதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலயம்,**
**மீசாலை சித்திரவேலாயுதர் தேவஸ்தானம்**
**மீசாலை பன்றிக்கேணி கந்தசாமி தேவஸ்தானம்**

# முன்பள்ளி சிறுவர்களுக்கு பால்மாப் பைக்கற்றுக்கள்

## வழங்கினார் வடமாகாண சபை உறுப்பினர்

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 16 முன்பள்ளிகளில் கல்வி கற்கும் முன்பள்ளிச் சிறுவர்களுக்கு பால்மாப் பைக்கற்றுக்களை வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் திங்கட்கிழமை வழங்கினார்.
16 முன்பள்ளிகளில் கல்வி கற்கும் சுமார் 700 சிறுவர்களுக்கு இவ்வாறு பால்மா பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன.
வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சிறுவர்களின் கற்றல் நடவடிக்கையை விருத்தி செய்யும் முகமாக குறித்த பால்மாப் பைக்கற்றுக்கள் வழங்கப்பட்டன என்று வட மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவித்தார்.
மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. குறிப்பாக வீதி, மின்சாரம், குடிதண்ணீர், போக்குவரத்து போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன.
இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர். எனவே அந்த மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.
முன்பள்ளி சிறுவர்களுக்கு பால்மாப் பைக்கற்றுக்கள் வழங்கும் நிகழ்வில் மடு வலயக்கல்விப்பணிப்பாளர் ஏ.ஜே. குரூஸ், கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம். சுபைர், மடு பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.விஸ்வராஜா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-56)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### படைக்

ளையும் அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அப்போது அவரிடம் "புலிகளின் மீள் எழுச்சி என்பது வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தினரை நிலை கொள்ளச் செய்வதற்கான கட்டுக்கதை என்று குற்றஞ்சாட்டப்படுகின்றதே?" என்று கேட்கப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும்போதே ஜனாதிபதி இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.
"வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இருந்து இராணுவத்தை திரும்பப் பெறமாட்டோம். அதை உறுதியாகவும் - இறுதியாகவும் ஏற்கனவே தெரிவித்து விட்டோம். ஏனைய பிரதேசங்களில் இராணுவத்தினர் எவ்வாறு நிலைகொண்டுள்ளனரோ, அவ்வாறே வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்."
"இராணுவத்தினரை அங்கு நிரந்தரமாக வைத்திருப்பது என்று தீர்க்கமாக எடுக்கப்பட்ட தீர்மானம். அது முடிவானது. அதை முன்னெடுப்பதற்கு 'புலி எழுச்சி' என்ற கதைகளை அவிழ்த்து விடவேண்டிய தேவை எமக்கில்லை. நாம் 13 ஆயிரத்துக்கும் அதிகமான விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கி விடுவித்துள்ளோம் என்பதை மறந்துவிடாதீர்கள்."
"இவ்வாறுதான் ஆரம்ப காலங்களில் விடுதலைப் புலிகள் சுவரொட்டி ஒட்டுதல், ஆங்காங்கே சிறு வன்முறைகள் என்று ஆரம்பித்தனர். அப்போது ஆட்சியில் இருந்தவர்கள் அசிரத்தையாக இருந்தனர். அதனால் அது பூதாகரமாகி பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியது. இனிமேல் அவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு இடமளிக்க முடியாது. நாம் அந்த விடயத்தில் அவதானமாகவும், சிரத்தையாகவும் உள்ளோம். இராணுவத்தினரை மீளப் பெற்று நாட்டை மீண்டும் ஒரு நெருக்கடிக்குள் தள்ள இடமளிக்கப் போவதில்லை" - என்று அங்கு திட்டவட்டமாகக் கூறினார் ஜனாதிபதி.
இலங்கை மீது சர்வதேச விசாரணைகள் நடத்தப்படும் என்று கூறப்படுகின்றமை தொடர்பாகவும் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார்.
"சர்வதேச விசாரணைகள் நடத்தப்படலாம் என்று சிலர் கூறுகின்றனர். நாம் உள்நாட்டுக்குள் உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம். காணாமற் போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் ஆணைக்குழுவும் அந்த நடவடிக்கையின் ஒரு பகுதியே. காணாமற்போனவர்கள் என்று கூறப்படும் பலர் வெளிநாடுகளில் உள்ளனர். அதுகுறித்தெல்லாம் விசாரணைகள் நடத்த வேண்டியுள்ளது. முறையான விசாரணைகள் நடக்கும். உண்மைகள் கண்டறியப்படும். அதற்கு சர்வதேச விசாரணை தேவையில்லை. அது எமது இறைமையில் தலையிடும் செயல். அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை."- என்று அவர் கூறினார்.
தொடர்ந்து அவர் கூறும்போது, "என்னிடம் பலர் கேட்கின்றனர், பொதுபல சேனா சட்டத்தைக் கையிலெடுத்துள்ளதா? என்று. அப்படி யாரும் சட்டத்தைக் கையில் எடுக்க முடியாது. மத விவகாரங்களை ஒட்டி எழுந்துள்ள நெருக்கடிகளைக் கையாள்வதற்கு விசேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளது. அந்தப் பிரிவு இவ்வாறான பிரச்சினைகளைக் கையாண்டு, ஒழுங்கை நிலைநாட்டும். தற்போது எழுந்துள்ள மத ரீதியான நெருக்கடிகள் குறித்து அனைத்து மதத் தலைவர்களையும் அழைத்துப் பேசவுள்ளேன்." - என்று தெரிவித்தார். (ற)

### பொதுமக்களின்

என என்று தெரியவருகின்றது.
கோப்பய் - கைதடி வீதியில், கோப்பாய் சந்திக்கு அண்மையில் 2000 ஆம் ஆண்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. குறித்த பிரதேசத்திலுள்ள பொதுமக்களின் காணிகளை அபகரித்தே முகாம் தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்தது. நீண்டகாலமாக முகாம் தற்காலிக முகாமாகவே இயங்கி வந்தது.
இந்த நிலையில் குறித்த இராணுவ முகாமை நிரந்தரமாக அங்கேயே அமைக்கும் நடவடிக்கைகள் தற்போது முடுக்கிவிடப்பட்டுள்ளன. குறித்த பகுதியை கனரக இராணுவ வாகனங்களைப் பயன்படுத்தி துப்புரவு செய்துள்ள இராணுவத்தினர், அதில் நிரந்தர இராணுவ முகாமை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். சீன அரசால் வழங்கப்பட்டுள்ள இராணுவத் தளபாடங்களை வைத்தே மேற்படி முகாமை நிரந்தரமாக அமைக்கும் செயற்பாட்டில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.
இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ள 64 பரப்புக் காணியும் தனியாருக்குச் சொந்தமானது என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. அத்துடன் குறித்த காணியை சுவீகரிப்பதற்கான அறிவித்தலோ அல்லது குறித்த காணி தேவை என்பது தொடர்பிலோ ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இராணுவத்தினர் எதுவும் கூறியிருக்கவில்லை. திடீரென குறித்த காணிகளில் நிரந்தர முகாம் அமைக்கும் பணிகளை இராணுவத்தினர் ஆரம்பித்துள்ளனர்.
யாழ்.குடாநாட்டில் இராணுவக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளது என்றும், பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றது என்றும் இராணுவத்தினரால் கூறப்பட்டு வருகின்றது. இந்தநிலையிலேயே பொதுமக்களின் காணிகளில் படைமுகாம் அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் உதய பெரேரா பதவியேற்றவுடன், வீதிக்கு வீதி காணப்பட்ட சிறிய காவலரண்கள் மட்டுமே மூடப்பட்டுள்ளன. குறித்த காவலரண்களை இணைத்து பெரிய முகாம்களை அமைக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (ற-5)

### நெடியவன்

தெரிவித்து நெடியவன் மீது இன்ரபோல் ஊடாக சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது இலங்கை அரசு. இவரது நிதியுதவியிலேயே வட பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளை மீளிணைக்கும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது என்று தெரிவித்திருந்த அரசு, நெடியவன் நோர்வேயிலிருந்தே இயங்கி வருவதாக இலங்கை அரசு தெரிவித்திருந்தது.
இந்தநிலையிலேயே இன்ரபோலின் பிடிவிறாந்து தொடர்பில், நோர்வேக்கான இலங்கைத் தூதுவருடன் நோர்வே அரசு கலந்துரையாடவுள்ளது என்று நோர்வே வெளிவிவகார அமைச்சுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற-5)

### முகாமிலுள்ள

வேண்டும் என்பதில் விடாப்பிடியாக இருந்தனர் என்று கூறப்படுகின்றது.
வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நீண்ட காலமாக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். கடந்த 24 வருடங்களாக அந்த மக்களின் சொந்த இடங்களை இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் அபகரித்து வைத்துள்ளனர்.
இந்தக் காணிகளை சுவீகரிப்பதற்கான அறிவித்தலும் கடந்த ஆண்டு ஒட்டப்பட்டுள்ளது.
இவ்வாறானதொரு நிலையில், யாழ்.மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்ற மேஜர் ஜெனரல் உதயபெரேரா, வலி.வடக்கு மக்களை அவர்களது சொந்த இடங்களிலேயே குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்து 7 சுற்றுப் பேச்சு நடத்தியிருந்தார். இறுதியில் புதிய இராணுவத் தளபதியும், வலி.வடக்கு மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த முடியாது என்று கைவிரித்திருந்தார்.
வலி.வடக்கு மக்களை அக்கரையில் 'மாதிரிக் கிராமம்' அமைத்து குடியேற்றப் போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார். அதற்குரிய ஏற்பாடுகள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதுடன், யாழ். மாவட்டச் செயலகத்தினாலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.
யாழ்.மாவட்டத்தில் வலி. வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள 38 நலன்புரி நிலையங்களில் 4 ஆயிரம் குடும்பங்கள் உள்ள நிலையில் அவர்களில் 200 குடும்பங்களே அக்கரை மாதிரிக் கிராமத்தில் குடியமரச் சம்மதித்திருந்தனர்.
இதனையடுத்து, ஒவ்வொரு நலன்புரி நிலையங்களிற்கும் சென்ற இராணுவத்தினர், அக்கரையில் சகல வசதிகளுடனும் வீடுகள் அமைத்து தரப்படும். அங்கு சென்று குடியேறுவதற்கு பெயர்களைப் பதிவு செய்யுமாறு கோரியிருந்தனர். இருப்பினும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் அதற்கு சம்மதிக்கவில்லை.
"எங்களை சொந்த இடங்களிலேயே குடியமர்த்துங்கள். இன்னுமொரு முறை நாங்கள் இடம்பெயரத் தயாரில்லை. எங்களுக்கு எங்கள் சொந்த நிலமே வேண்டும்" என்று இராணுவத்தினரிடம் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர் என்று தெரியவருகின்றது. (ற-5)

### 2025

சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கிய போதே துஸ்யந்தினி மிகுந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் கூறும்போது,
"மூன்றாம் உலகப் போர் நீரால் தான் ஏற்படப்போகிறது. நீர் பற்றாக்குறை அனைத்து நாடுகளிலும் இருக்கிறது. யாழ். மாவட்டத்தில் தற்போது விவசாயத்தைப் பொறுத்தவரை நீர்ப் பற்றாக்குறை காணப்படுகிறது. மழை வீழ்ச்சி குறைந்து வருவதே அதற்கு காரணம். 2025 ஆம் ஆண்டில் நீர்ப்பற்றாக்குறை காரணமாக யாழ்ப்பாணம் அழிந்து போகும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.
மழைவீழ்ச்சியை தேக்கி வைத்திருப்பதற்கு குடாநாட்டில் வழி இல்லை. காலநிலை மாற்றங்களால் உணவு உற்பத்தி குறைவடைந்து வறுமை ஏற்படும். வறுமை ஏற்படும் போது அதனை எதிர்கொள்ளக்கூடிய நிலையில் நாம் உள்ளோமா? என்பது தான் அடுத்த கட்டப் பிரச்சினை. தற்போது இடம்பெறுகின்ற மணல் அகழ்வு , கற்பாறை அகழ்வு இவையெல்லாம் எதிர்காலத்தில் பெரும் அழிவைப் பெற்றுத்தரப் போகின்றன.
உலகளாவிய ரீதியில் உணவுப்பற்றாக்குறையை ஈடு செய்ய முடியும் எனும் நிலையில் இலங்கை 62 ஆவது இடத்திலும், இந்தியா 66 ஆவது இடத்திலும் பாகிஸ்தான் 75 ஆவது இடத்திலும், நேபாளம் 79 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் 81 ஆவது இடத்திலும் இருக்கின்றன என்று 105 ஆசிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் உலகளாவிய நாடுகளில் ஆசியாதான் அதிகூடிய நீரைப் பயன்படுத்தும் கண்டம் என்றும் கூறப்படுகிறது. இந்த தரவுகளின் அடிப்படையில் இலங்கையில் குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் நீர்ப்பற்றாக் குறை எவ்வாறு ஏற்படப் போகிறது என்பதை எம்மால் அறிய முடியும்"- என்று தெரிவித்தார்.
இந்தக் கலந்துரையாடலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.(ற-14)

### இறந்துவிட்டார்

முல்லைத்தீவு வற்றாப்பளையைச் சேர்ந்தவர் நடராசா சற்குணராஜா. இவர் 2006 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்றிருந்தார். அங்கிருந்து உறவினர்களுடன் தொடர்புகளைப்பேணிவந்தார். அதன் பின்னர் 2012 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதாக உறவினர்களுக்குக் கூறியுள்ளார்.
அதன்பின்னர் குடும்பத்தினருக்கும் சற்குணராஜாவுக்குமான தொடர்புகள் விட்டுப் போயின. கடந்த இரண்டு ஆண்டுகளாக சற்குணராஜாவின் குடும்பத்தினர் அவரைப் பற்றி அறிய பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டபோதும் எதுவும் சாத்தியப்படவில்லை.
இந்த நிலையில் நேற்றைய உதயன் பத்திரிகையில் இந்தோனேசிய சிறையில் பட்டினிப் போராட்டம் நடத்தும் 9 இளைஞர்கள் குறித்த செய்தியும், அதன் ஒளிப்படமும் வெளியாகியிருந்தது. அந்த ஒளிப்படத்தை வைத்தே உறவினர்கள் சற்குணராஜாவைக் கண்டு பிடித்துள்ளனர். குறித்த ஒன்பது இளைஞர்களில் சற்குணராஜாவும் ஒருவர் என்பதை அவரது உறவினர்கள் உறுதிப்படுத்தினர்.
அதனையடுத்து அவர்கள் கொழும்பிலுள்ள இந்தோனேசிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டனர். அவர்களுக்கு இந்தோனேசியாவில் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கத்தை இந்தோனேசிய தூதரகம் வழங்கியது. குறித்த தொலைபேசி இலக்கத்துடன் அவர்கள் தொடர்பு கொண்ட போது, இது தொடர்பான அதிகாரிகளுடன் நாளையே பேச முடியும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ற-5)

### ஜனாதிபதி

ஆசிரியர்கள் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். அதில் நகைச்சுவையாகக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,
"எனது பதவிக்காலம் 2016 ஆம் ஆண்டிலேயே முடியவுள்ளது. அடுத்த ஆண்டில் திடீர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த நான் திட்டமிடவில்லை. எதிர்க்கட்சி கள் முன்கூட்டியே தேர்தலை நடத்தக் கோரினால், அது குறித்து ஆலோசிக்கத் தயாராக இருக்கிறேன். முதலில் எந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நான் எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்க வேண்டியுள்ளது"- என்று கூறியுள்ளார். (ற-5)

### காலநிலையை

திருமதி.துஸ்யந்தினி மிகுந்தன். யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்ற காலநிலை தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் பேதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
"கடந்த பல வருடங்களுக்கு முன்னர் குடா நாட்டில் தீவகப் பகுதிகளில் கூட காலநிலை அவதானிப்பு நிலையங்கள் இருந்தன. ஆனால் தற்போது திருநெல்வேலியில் மட்டும் ஒரு நிலையம் உள்ளது. ஆனால் தரவுகளை அறிந்து கொள்ளக்கூடிய நிலையம் யாழ்ப்பாணத்தில் இல்லை. இதன்காரணமாக கால நிலைகளை எதிர்வுகொள்ள முடியாத நிலையில் உள்ளோம். அதனால் பெரும் விளைவுகள்" ஏற்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-14)

### அரிசி விலை

சிவப்பு பச்சை 60 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் பாவனையாளர் அதிகார சபையால் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
இதுகுறித்து யாழ்.மாவட்ட செயலக பாவனையாளர் அதிகார சபையின் பொறுப்பதிகாரி வசந்த சேகரன் கூறும் போது,
"கட்டுப்பாட்டு விலைகளில் அரிசி வகைகள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதற்காகவே இந்த அதிரடி சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படுவர்"- என்று தெரிவித்தார்.(ற-5)

### வட மாகாண

வைக்கப்பட்டிருந்தன.
எதிர்வரும் 28ஆம் திகதி மாகாண சபை மீண்டும் கூடுகின்றது. இதில் விவாதிக்கப்பட்டுத் தீர்மானமாக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்த முன்மொழிவுகள் உறுப்பினர்களால் பேரவைச் செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன.
உறுப்பினர் சர்வேஸ்வரனால் முன்வைக்கப்பட்ட, வடமாகாணத்திலுள்ள வைத்தியசாலைகளுக்கு உணவு விநியோகிப்பதில் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகளை விசாரிப்பதற்கான குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று கோரும் தீர்மான முன்மொழிவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.
உறுப்பினர் சிவாஜிலிங்கத்தால் முன்மொழியப்பட்ட, ஜெனிவாவில் இலங்கை அரசு தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஆதரவு தெரிவித்த நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கான முன்மொழிவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.
(உ-5)

## பாடசாலை உதைபந்தாட்டம் வடமராட்சியில் ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயது, 17 வயது, 19 வயது பிரிவு ஆண்கள், 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான உதைபந்தாட்ட 'ஏ', 'சி' பிரிவு போட்டிகள் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன. இதில் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்திலும், 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்திலும், 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்திலும், 19 வயதுப் பெண்களுக்கான போட்டி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. 28 ஆம் திகதி 'பி', 'டி' பிரிவு போட்டிகள் இடம்பெறவுள்ளன. (த-23)

# மாவட்ட எறிபந்துப் போட்டியில் மெமோறியல், யூனியன் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இரு பாலாருக்குமான எறிபந்து போட்டித் தொடரின் இறுதியாட்டங்களில் மானிப்பாய் மெமோறியல், தெல்லிப்பழை யூனியன் அணிகள் சம்பியனாகின.

**19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதி யாட்டத்தில்மானிப்பாய் மெமோ றியல் ஆங்கிலப் பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.**

கடந்த செவ்வாய்க்கிழமை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

தொடர்ந்து இடம்பெற்ற 3 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதிக் கொண்டது.

3 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

## வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது வைகறை

யாழ்ப்பாணம், ஏப்.25

கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகம், மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகத்துடன் கடுமையாகப் போராடி வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

**போட்டியின் ஆரம்பத்திலேயே புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் புள்ளிகளைத் தொடர்ச்சியாகப் பெற்று முன்னணி வகித்துக் கொண்டிருந்தது.**

மேற்படி சரஸ்வதி விளையாட்டுக்கழகம் தனது 58 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியில் 'லீக்' முறையில் நடத்திய தாச்சிச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல கழகங்கள் பங்கு கொண்ட போதிலும் இறுதிச் சுற்றுக்குப் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழகமும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகமும் தெரிவாகி மின்னொயில் மோதிக் கொண்டன.

போட்டியின் ஆரம்பத்திலேயே புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் புள்ளிகளைத் தொடர்ச்சியாகப் பெற்று முன்னணி வகித்துக் கொண்டிருந்தது. இடைவேளை வரை புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் ஐந்து புள்ளிகளையும்மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் ஒரு புள்ளியையும் பெற்றிருந்தன.

இடைவேளையைத் தொடர்ந்து போட்டிகள் மீண்டும் ஆரம்பம்ாகியதும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழகம் தொடர்ச்சியாக நான்கு புள்ளிகளைப் பெற இரு கழகங்களும் சம நிலையாகின. வெற்றி யாருக்கு என்ற எதிர்பார்ப்புடன் பார்வையாளர்களும் கழகங்களின் ஆதரவாளர்களும் ஏக்கத்துடன் காத்திருக்க, புதுமடம் வைகறை விளையாட்டுக்கழகம் ஒரு புள்ளியைப் பெறவும் போட்டி நேரம் முடிவடையவும் சரியாக இருந்தது.

போட்டி முடிவில் புதுமடம் கைகறை விளையாட்டுக் கழகம் 6:5 என்ற புள்ளி அடிப் படையில் ஒரு புள்ளியை கூடுதலாகப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் லயன் ப.செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில் வடமாகாண சபையின் உறுப்பினர் எஸ்.சயந்தன், சாவகச்சேரி நகர சபை உறுப்பினர் கே.தர்சன் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். (த-288)

# 19 வயது பெண்கள் கிரிக்கெட் சுழிபுரம் விக்ரோறியா சம்பியன்



வெற்றி பெற்ற அணியினர்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான இறுதிப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியா அணி சம்பியனாகியது.

இதன் இறுதியாட்டம் கடந்த 20 ஆம் திகதி நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டு. இந்துக் கல்லூரி அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாகல்லூரி அணி நிர்ணயிக் கப்பட்ட பத்துப் பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது. இதில் துடுப்பாட்டத்தில் தேனுசா 31 ஓட்டங்களையும், சோபிகா 22 ஓட்டங்களையும், செல்வராஜினி 15 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் வட்டு. இந்து கல்லூரி அணியின் அஜந்தா 2 இலக்குகளையும், மயூரி, திலக்சனா ஆகி யோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வட்டு. இந்து கல்லூரி அணியினர் விக்ரோறியா அணியின் பந்து வீச்சுக்கும், களத்தடுப்புக்கும் ஈடு கொடுக்க முடியாமல் திணறினர். இதனால் ஓட்டங்கள் எடுப்பதில் அவர்கள் பெரும் சிரமப்பட்டனர். இதனால் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக் குகளை இழந்து 63 ஓட்டங் களை மாத்திரம் பெற்றுக் கொண் டனர். துடுப்பாட்டத்தில் குக தாரணி 17 ஓட்டங்களையும், நிதுசா 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் டிலானி 2 இலக்குகளையும் தேனுசா, செல்வரஜனி, சோபிகா ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர். (த-422)

## 2 ஆம் சுற்று நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'வடக்கின் சுப்பர் கிங்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2 ஆம் சுற்று போட்டிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றன. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 25

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இதில் இன்று வெள்ளிக் கிழமை மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் அரையிறுதியாட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது (த-23)

# கரப்பந்தாட்டத்தில் வென்றது கரவெட்டி

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக் கழகம் நடத்திய 2013 ஆம் ஆண்டு அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்கான ஆண்கள் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில்கரவெட்டிபிரதேச செயலக அணி சம்பியனானது.

தொடரின் இறுதியாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இறுதியாட்டத்தில் மாவட்டச் செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதிக் கொண்டது. 3 செற்களைக் கொண்ட இறுதி யாட்டத்தில் முதலாவது செற் ஆட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணி 17.15 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்றது.

2 ஆவது செற் ஆட்டத்தில் யாழ். மாவட்ட செயலக அணி 15:10 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டு அணியினரும் நடைபெற்ற இரண்டு செற்களிலும் மாறி மாறி வெற்றி பெற்றுச் சமநிலையில் இருந்தமையால் 3 ஆவது செற் ஆட்டம் விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. எந்த அணி வெற்றி பெறும் என்ற நிலையில் இரண்டு அணியினரும் கடுமையாக மோதிக் கொண்டனர். இரண்டு அணியினரும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர்.

தமது ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்த கரவெட்டி பிரதேச செயலக அணியினர் தமது அதிரடி ஆட்டத்தை வெளிப் படுத்தி அடுத்தடுத்துப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். 3 ஆவது செற் ஆட்ட முடிவில் கரவெட்டி பிரதேச செயலக அணியினர் 15:10 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றனர். ஆட்ட நேர முடிவில் கரவெட்டி பிரதேச செயலக அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (த-23-86)

## யாழ்.-ராஜரட்டை பல்கலை அணிகள் நாளை மோதல்

வலி வடக்கு ஏப் 25

யாழ். பல்கலைக்கழகத் துடுப்பாட்ட அணிக்கும் ராஜரட்டைப் பல்கலைக்கழக துடுப்பாட்ட அணிக்கும் இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 40 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டபோட்டி நாளை சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9.30மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக பல்கலைக்கழக முன்னாள் துடுப்பாட்ட வீரரும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரியருமாகிய ஏ. பாலேந்திரா கலந்துகொள்வார். (த-86)

# வென்றது கைதடி மின்னொளி

யாழ்ப்பாணம், ஏப்.25

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்துத்துடுப்பாட்டப் போட்டியில் கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகம் தன்னோடு போட்டியிட்ட நாவற்குழி சான்றோர் விளையாட்டுக் கழகத்தை வென்று வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது.

இறுதிப் போட்டிக்கு கைதடி மின்னொளி விளையாட்டுக் கழகமும் நாவற்குழி சான்றோர் விளையாட்டுக் கழகமும் தெரிவாகி மோதிக் கொண்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நாவற்குழி சான்றோர் விளையாட்டுக்கழகம் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்ய மின்னொளி விளை யாட்டுக் கழகம்துடுப்பாடத்தொடங்கியது. 16 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் மின்னொளி விளையாட்டுக் கழகம் 13 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இந்தப் போட்டியில் 104 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நாவற்குழி சான்றோர் விளையாட்டுக்கழக அணியினர் 16 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 99 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டனர். இதனால் இந்தப் போட்டியில் மின்னொளி விளையாட்டுக் கழகம்நான்குஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்று வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிக்கொண்டது.

இந்தப் போட்டியில் ஆட்டநாயகனாக மின்னொளி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பானுவும், சிறந்த பந்து வீச்சாளராக அதே கழகத்தைச் சேர்ந்த எழிலனும் தெரிவு செய்யப்பட்டனர். (த-288)

# வென்றது சங்கானை பிரதேச செயலகம்

வலி வடக்கு ஏப் 25

யாழ்.மாவட்ட நலன்புரிச் சங்கம் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியனானது. மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியும் ஊர்காவற்துறை பிர தேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானைபிரதேசசெயலகஅணி15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 07இலக்குகளைஇழந்து130ஓட்டங்களைப் பெற்றது. நிரோஜன் 47 ஓட்டங்களையும், ரகுமான் 26 ஓட்டங்களை யும், சிவ ரூபன் 25 ஓட்டங்களை யும் பெற்றார்கள்.

ஊர்காவற்துறை பிரதேச செயலக அணியைச் சேர்ந்த ரம்மியராகுலன், வதனன், பிராங்கிளின் தலா மூன்று பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 12,13,19 ஓட்டங்களைக் கொடுத்த தலா இரண்டு இலக்குகளையும் ஆரூரன் 20 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஊர்காவற்துறை பிரதேச செயலக அணி 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது.

ரம்மிய ராகுலன் 44 ஓட்டங்களையும், பிரங்கிளின் 37 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

சத்தியரூபன், நிரோஜன், சிவகுமார்,சிவரூபன் தலா மூன்று பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி முறையே 17, 20, 28, 29 ஓட்டங்களைக் கொடுத்து தலா இரண்டு இலக்குகளையும் தீலிபன் ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள் . (த-86)

# இறுதிவரை பரபரப்பான ஆட்டத்தில் திறில் வெற்றி பெற்றது கொல்கத்தா



ஆட்டத்தின் போக்கை மாற்றிய அபார பிடியெடுப்பு

இறுதிவரை பரபரப்பாக நடை பெற்ற ஆட்டத்தில் லயனின் இறுதிநேர பிடியெடுப்பின் மூலம் இரண்டு ஓட்டங்களால் வெற்றியைத் தமதாக்கியது கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணி.

சார்ஜவில் இடம்பெற்று வரும் ஐ.பி.எல். போட்டித் தொடரில் நேற்று இடம் பெற்ற 11ஆவது லீக் போட்டியில் பெங்களூர் ரோயல்ஸ் அணியும், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்ளூர் அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. இதனையடுத்து ஜக்கலிஸ், கம்பீர் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினர். கம்பீர் வழக்கம் போல ஓட்டம் எதனையும் பெறாது தான் சந்தித்த முதல் பந்திலேயே 'டக் அவுட்' ஆனார். அதனைத் தொடர்ந்து களமிறங்கிய மனீஸ் பண்டே வெறும் 5 ஓட்டங்களைப் பெற்று ஏமாற்றம் அளித்தார். மூன்றாவது இலக்குக்காக கலிஸுடன் கிறிஸ் லயன் இணைந்தார். இந்த ஜோடி பெங்களூர் அணியின் பந்து வீச்சை நாலா புறமும் பறக்க விட்டது. இதனால் ஓட்ட வேகம் ஜெட் வேகத்தில் சடுதியாக உயர்ந்தது. இச் சூழ்நிலையில் அதிரடி காட்டிய லயன் 31 பந்துகளைச் சந்தித்து 3 நான்கு ஓட்டங்கள், 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 45 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்து வெளியேறினார். யூசுப் பதானும் ஏமாற்ற இறுதிவரை பொறுமையாகவும் நிதானமாகவும் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த கலிஸும் 43 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்ட மிழந்து வெளியேறினார். அதன் பின் வந்த வீரர்களில் ரொபின் உத்தப்பா (22), சூரியகுமார் யாதவ்(24) ஆட்டமிழக்காது பெற்ற ஓட்டங்களின் உதவியுடன் 20 பந்துப் பரிமாற்ற நிறைவில் 150 ஓட்டங்களை கொல்கத்தா அணி பெற்றது.

பெங்களூரின் பந்து வீச்சில் வருன் ஆரோண் 3 இலக்குகளையும் மிக்சல் ஸ்ரக் 2 இலக்குகளையும் அல்பி மோர்கல், சகான் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

இதனை அடுத்து 151 என்ற வெற்றி பெறக்கூடிய ஓட்ட எண்ணிக்கையை இலக்காக கொண்டு களமிறங்கிய பெங்களூர் அணிக்கு பார்த்திவ் பட்டேல், யோகேஸ் டக்வெலி ஜோடி சிறந்த ஒரு அடித்தளத்தை இட்டுக் கொடுத்தது. இவ்விருவரும் 7.4 பந்துப் பரிமாற்றங்களில் 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து இருவரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். பட்டேல் (21), டக்வலி (40) ஓட்டங்களையும் பெற்றனர். தொடர்ந்து களமிறங்கிய யுவராஜ் சிங், ஹோக்லி இறுதிவரை களத்தில் நின்று அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்வார்கள் என்று எதிர்பார்த்த வேளை அணி 122 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 31 ஓட்டங்களுடன் ஹோக்லி வெளியேற அதனைத் தொடர்ந்து யுவராஜ் சிங்கும் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இருவரின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து போட்டியின் போக்கு மாறத்தொடங்கியது. இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் டீ வில்லியர்ஸ், மோர்கல் ஜோடி களத்தில் இருந்தது. போட்டியில் வெற்றி பெற்றே ஆகவேண்டும் என்ற நிலையில் வினாய்குமாரை பந்து வீச அழைத்தார் அணித்தலைவர் கம்பீர். முதலாவது பந்தைச் சந்தித்த மோர்கல் அதனை ஓங்கி அடிக்க பிடியெடுக்கும் வாய்ப்பை தவற விட்டனர் கொல்கத்த அணியினர். இதனால் ஒரு ஓட்டம் பெறப்பட்டது.



வெற்றிக் களிப்பில் வீரர்கள்

மூன்று பந்துகளில் 6 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் நான்காவது பந்தை டீ வில்லியர்ஸ் ஓங்கி அடிக்க பந்து எல்லைக் கோட்டைக் கடந்து ஆறு ஓட்டங்களைப் பெற்று பெங்களூர் அணி வெற்றி பெறும் என அனைவரும் எதிர் பார்த்திருந்த போது மிகவும் ஒரு கடினமான அதே வேளை மிகவும் அருமையான பிடி ஒன்றை எடுத்து ஆட்டமிழக்கச் செய்தார் லயன். இவரது பிடியபெடுப்புடன் போட்டி மேலும் இறுக்கமடைந்தது. 2 பந்துகளில் நான்கு ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் 5 ஆவது பந்தில் இரண்டு ஓட்டங்களும் இறுதிப் பந்தில் ஒரு ஓட்டமும் பெறப்பட 2 ஓட்டங்களால் திறில் வெற்றி பெற்றது கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி.

போட்டியின் ஆட்டநாயகனாக லயன் தெரிவு செய்யப்பட்டார். (கு-400)

## பொருத்தமானவர் டோனி தான்




டு பிளசிஸ்

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் பதவி டோனிக்கு மட்டுமே பொருந்தும் என அணியின் சக வீரரான டு பிளசிஸ் புகழாரம் சூட்டியுள்ளார்.

ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் அணிகளில் சென்னை சுப்பர் கிங்ஸில் மட்டுமே 4 சர்வதேச அணித் தலைவர்கள் உள்ளனர்.

இந்திய அணியின் தலைவரான மகேந்திர சிங் டோனி சென்னை சுப்பர் கிங்ஸ் அணித் தலைவராக இருக்கிறார்.

அணியில் மக்கலம் நியூசிலாந்து அணிக்கும், டு பிளசிஸ் தென்னாபிரிக்கா அணிக்கும், பிராவோ மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் தலைவர்களாக உள்ளனர்.

இந்நிலையில் சென்னை அணிக்கு டோனி ஒருவரே சிறந்த அணித்தலைவர் என்று தெரிவித்த தென்னாபிரிக்காவைச் சேர்ந்த டு பிளசிஸ். இது குறித்து கூறுகையில், ஐ.பி.எல். போட்டி தொடங்குவதற்கு முன்பே அணியில் 4 சர்வதேச அணித் தலைவர் இருப்பது பற்றித் தான் பேசினோம். இதன் மூலம் அணிக்குச் சிறந்த அனுபவம் கிடைக்கும்.

இதில் இந்திய அணியின் அணித்தலைவராகத் திகழும் டோனியே வலிமையான அணித்தலைவர். அவரது அனுபவத்துக்கு முன்பு நாங்கள் யாரும் இல்லை. நாங்கள் எங்கள் நாட்டு அணிக்குத்தான் அணித்தலைவர். சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு டோனி ஒருவரே தலைவர். நாங்கள் அனைவரும் அவரை மதிக்கிறோம் என்று கூறியுள்ளார். (கு)

## மகளிர் அணிகளுக்கும் ஐ.பி.எல்.

மகளிருக்கும் ஐ.பி.எல். போன்ற கிரிக்கெட் போட்டியை நடத்தவேண்டுமென இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவி அஞ்சும் சோப்ரா வலியுறுத்தியுள்ளார். இந்தியாவில் மகளிருக்கான கிரிக்கெட்டை மேம்படுத்த அவர்களுக்கென்று தனியாக ஐ.பி.எல். போட்டிகளை நடத்த வேண்டும் என்று தெரிவித்த அஞ்சும் சோப்ரா செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் கூறுகையில்; மகளிர்களுக்கான ஐ.பி.எல். போட்டிகள் நடத்துவதன் மூலம் ஏராளமான இளம் வீராங்கனைகள் ஆர்வத்துடன் கிரிக்கெட் விளையாட வருவார்கள்.

இதன் மூலம் திறமையான வீராங்கனைகளை உருவாக்க முடியும். இந்தியாவில் மட்டுமன்றிச் சர்வதேச அளவிலும் மகளிர் கிரிக்கெட் இப்போது மிகவும் பிரபலமாகி விட்டது. இந்தக் காரணங்களால் மகளிருக்கான ஐ.பி.எல். அறிமுகப்படுத்தப்பட்டால் நிச்சயமாகப் பிரபலமடையும். அதற்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என்பதில் சந்தேகமில்லை என்று கூறியுள்ளார்.

மேலும் ஆடவர் கிரிக்கெட் அணியின் வீரர்களை முன் மாதிரியாகக் கொண்டு மகளிர் கிரிக்கெட் விளையாடுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்று கூறிய அஞ்சும் சோப்ரா, தான் சச்சினின் ரசிகை என்றும், கிரிக்கெட்டில் சச்சினுக்கு அடுத்த இடங்களில் இருப்பவர்களுடன் ஒப்பிடுகையில் அவர் மிகப்பெரிய சாதனையாளர் எனவும் கூறியுள்ளார். (கு)



சோப்ரா



வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்
**CIMA-UK CCNA COMPUTER ENGINEERING-USA**
உயர்ந்த சம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள கற்கைநெறிகள். G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுதிகதி 27 April. பல்கலைக்கழக மாணவர்கள். அரச தனியார் ஊழியர்களும் விண்ணப்பிக்கமுடியும். பிரிவு 1:Sat:9 AM(26 April) பிரிவு 2: SundayOnly9AM27 (வெளிமாவட்ட மாணவர்கள்.தொழில்புரிவோருக்கானது) மேலதிக விபரங்கள்: MCS IT CAMPUS, (யாழ்.பல்கலைக்கு. அண்மையில்) புலமைப்பரிசிலிற்கு: Type <COURSE><Name>&send to772395895 சிறந்த பெறுபேற்றுக்காக கொழும்பு பல்கலைக்கழத்தின் விருதினை வென்ற நிறுவனம். **Sem2,Sem4,Sem 6**க்கு விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- மலேசியாவில் படிக்க மாதம் 70, 000/= வரை உழைக்க O/Lம் தேவையில்லை 35 வயது வரை ஆண்கள் விண்ணப்பிக்கலாம் வெறும் 5 இலட்சம் போதும் **இவ்விசா விசிற் விசா அல்ல** படிக்கும் உழைக்கும் விசா என்பது குறிப்பிடத்தக்கதாகும் 2 வருட விசா இருப்பிடம் இலவசம் 2 மாதங்களில் பறக்கலாம்.
- ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க 1 இலட்சம் வரை உழைக்க வெறும் 5 இலட்சம் போதும் (ஆண் / பெண் 40 வயது வரை விண்ணப்பிக்கலாம்)
- மொறீசியசில் படித்துக்கொண்டே 1 இலட்சம் வரை உழைக்க வெறும் 6 இலட்சம் போதும்.
- இத்தாலி 2 வாரங்களில் நாட்டை விட்டுப்பறக்கலாம்.

(நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 2219016, 021 4993502
www.thisaivisa.com

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
கணக்காளர்
கணக்காய்வாளர்
பரீட்சைகளுக்கு ஒவ்வொரு வாரமும் சனி, 11.00 500 மணி வரை ஞாயிறு 9.00 4.00 மணி வரை நடைபெறுகின்றன.
சமநல திணைக்களத்தின் எழுதுநர் சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்
வரும் ஞாயிறு 1.00 மணி யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
0754184584

NEC
பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி. யாழ்நகர்.
A/L 2016 கலை, வர்த்தக, தொழில்நுட்ப
புதிய பிரிவுகள் ஆரம்பம்:
26-04-2014 சனி காலை 9.00 மணி
ஆரம்ப சலுகையில் இணைந்து கற்றுக்கொள்ளுங்கள்


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

DIGITAL COLOUR PRINTING
hp Indigo 12 COLOUR - 2800dpi
New Syenthetic Album Print
10 x 30 -12 x 30 - 225.00
4R ( 4x6) - 8.50 - invitation,visiting card
A4 - 12.00 -A3 - 25.00
A2 - 75.00 -A1 -150.00
(minimum order 100 print)
200 YEARS NOT COLOUR FADE
மூர்த்தி டிஜிற்றல்கலர் லாப்
62/20,ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்~ 0212221358

மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக்கூடிய பயிற்சி நெறி
HND in PHARMACY
வயதெல்லை கிடையாது பகுதி நேரமாகப் படிக்கலாம்.
LAVA HOSPITAL
120 Temple Road, Jaffna.
Tel : 077 3164617, 021 2224333

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை பற்பநாதன்



கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை பற்பநாதன் (24.04.2014) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான சின்னத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சாரதாதேவியின் அன்புக்கணவரும் வக்ஸலா, சுதாஸ்கலா (ஜேர்மனி), கௌசி, பௌஸலன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் பாஸ்கரன் (தொழில் திணைக்களம் யாழ்ப்பாணம்), சிறீதரன் (ஜேர்மனி), ஜெயசீலன் (வலிகாமம் கல்வி வலயம்), பிரதீபா (கனடா) ஆகியோரின் அன்புமாமனாரும் தஜீவ், கரணி, தினுஜ், கஜானா, மயூரதி, யுகேஸ், சானுஜா, சர்வதன், வர்ணுஜா, சயானா ஆகியோரின் அன்புப்பேரனும் கமலராணி, யோகேஸ்வரி மற்றும் தர்மதாஸ் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா சதாசிவம்



கோவளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகம்மா சதாசிவம் நேற்று (24.04.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற வேலுப்பிள்ளை ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா-வள்ளிஅம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான செல்வராசா. சிவனேசராசா மற்றும் நிர்மலா தேவியின் அன்புத் தாயாரும் மனோன்மணி (வவுனியா), கனகேஸ்வரி, றி. எல்வினஸ் (சசி.யா. மாநகர சபை சாரதி). ஆகியோரின் அன்பு மாமியாரும் கால்ஞ்சென்ற சரஸ்வதியின் அன்புச்சகோதரியும் உதயரூபன், யசோதை, மயூரன் (லண்டன்). பவிந்தினி.காலஞ்சென்ற சிவந்தினி மற்றும் சசிரேகா, யஸ்ரின்,கபிலஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2014) வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதுறோட், காரைநகர்

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## செபமாலை சிறில்

(திருப்பண்ட அறைக்காப்பாளர் - குருநகர் புனித யாகப்பர் ஆலயம்)



யாழ்ப்பாணம் குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை சிறில் நேற்று (23.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபமாலை - சவிராசி தம்பதியரின் அன்பு மகனும் அந்தோனிப்பிள்ளை - வரோணிக்கா தம்பதியரின் மருமகனும் மேரிமாகிறேட்டின் அன்புக்கணவரும் செபஸ்ரியனின் அன்புச் சகோதரரும் மேரிகிறசன்சியா (வளர்மதி), ஜொலாண்ட் அன்ரனி(ஜேர்மனி), சில்வேறியஸ் (லவ்கின்), விஜீனியா, விஜேதினி, மெல்கியூஸ் (கோமஸ்- பிரான்ஸ்), றிச்சேட் இன்பறூபன் (றூபன் - பிரான்ஸ்) காலஞ்சென்றவரான எட்வின் ஜெயராஜ் ஆகி யோரின் அன்புத்தந்தையும் மேரிமக்ஸ்மிலா (ஜசறா), ஸ்ரீபன், வவா, யேவதி, யேக்குமார், யேசீலன், தேவதாஸ், கமலா, குயின் ஆகி யோரின் சிறிய தந்தையும் இராசநாயகம் (ஓய்வு பெற்ற மக்கள் வங்கி செயலர்), வினிபிறட் (பாவை), ஜெயக்குமார், ஜான்சி, பொபிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ராஜ் கலிஸ்ரஸ், ராஜி (பிரான்ஸ்), றொமில்டா, ராஜ் றெனுசியஸ், எட்வின், சில்வெஸ்ரா (லண்டன்), மேரிபெனினா, மேரிஜெனிபர், விஜயராஜ், ஜக்கோநொறிஸ், தர்ஷன் (பிரான்ஸ்), தர்ஷிகா (பிரான்ஸ்), தனுஷிகா (பிரான்ஸ்), ரஞ்சன், இளங்கீரன், பொபிதா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆன்சரோணி, இனுஷாந், ரிதிக்ஷா, ஜொனாத்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை (26.04.2014) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித யாகப்பர் ஆலயத்திற்கு இரங்கல் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

25, 3ஆம் குறுக்குத் தெரு, குருநகர், யாழ்ப்பாணம்.

தகவல் : இ. ராஜ்கலிஸ்ரஸ் (பேரன்) (யா/ புனித பத்திரிசியார் கல்லூரி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன்.(பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.